பிப்ரவரி 2021

@NewsRotary /RotaryNewsIndia

Vol.3, Issue 9 | Annual Subscription ₹ 420

# ரோட்டரி நியூஸ்

INDIA


www.rotarynewsonline.org



Rotary

# RIPE சேகர் மேத்தாவின் 2021–22விற்கான ரோட்டரி தீம்: வாழ்க்கையை மாற்ற சேவை செய்வோம்



# உள்ளே









**10 நமது செயல்திறனை அதிகரிக்கும் நேரம் வந்துவிட்டது**
மெய்நிகர் ரோட்டரி சந்திப்பான ஒடிஸியில் பேசுகையில், உள்வரும் மாவட்ட ஆளுநர்கள் பெரிதாகச் சிந்திக்க வேண்டும் என்று RIPE சேகர் மேத்தா வலியுறுத்துகிறார்.

**14 டிஜிட்டல் யுகத்தைத் தழுவுவோம்**
RI தலைவர் ஹோல்கர் நாக் GETS பட்டமளிப்பு விழா உரையில், ரோட்டரியன்கள் தொழில்நுட்பக் கருவிகளை மேலும் கூடுதலாகப் பயன்படுத்தவேண்டும் என்று DGEக்களுக்குச் சொல்கிறார்.

**20 "கோவிட்" நம்பிக்கை அளிக்கிறது**
நோய்ப்பரவலின் போது சமூகங்களுக்கு உதவுவதற்காக TRF எப்படி விரைவாக எதிர்வினையாற்றியது என்று அறங்காவலர் தலைவர் K R ரவீந்திரன் விளக்குகிறார்.

**22 கோவிட் தொற்று கற்றுக்கொடுத்த பாடம்**
நோய்களைக் கட்டுப்படுத்துவதற்காக பொது நலனில் முதலீடு செய்யவேண்டியதன் தேவையை WHO தலைமை அறிவியலாளர் சௌமியா சுவாமிநாதன் சுட்டிக்காட்டுகிறார்.

**24 பன்முகத்தன்மைதான் நம்மை செயல்பட வைக்கிறது**
சினர்ஜி அல்லயன்ஸ் மற்றும் RC மெட்ராஸ் நடத்திய இரண்டு மெய்நிகர் சந்திப்புகளில், ஒற்றுமை, சமநிலை மற்றும் பன்முகத் தன்மை மந்திரத்தை வலியுறுத்துகிறார் RIPN ஜெனிஃபர் ஜோன்ஸ்.

**51 ரோட்டரி சங்கங்களுக்கும் PAN, KYC அவசியம்**
தன்னார்வலர் பிரிவுக்காக GoI கொண்டுவந்திருக்கும் புதிய விதிமுறைகளுக்கு இந்தியாவில் உள்ள அனைத்து ரோட்டரி சங்கங்களும் இணங்கவேண்டும் என்று RIDகள் பரத் பாண்ட்யா மற்றும் கமல் சங்வி வலியுறுத்துகிறார்கள்.

**64 தன்னிகரில்லாத மேதை சித்தார் ரவிசங்கர்!**
புகழ் பெற்ற சித்தார் இசைக்கலைஞருடைய வாழ்க்கை மற்றும் பணிகளைப்பற்றிப் படியுங்கள்.


**அட்டைப்படத்தில்:** பிராந்தியச் சந்திப்பில் மன்சி கரஞ்சி மற்றும் குழுவினருடைய நடன நிகழ்ச்சி.

**புகைப்படம்:** விவேக் அத்வானி.




Inside - Tamil - February 2021.indd 3 2/16/2021 4:23:23 PM


## நோய்ப்பரவலைப்பற்றிய ஒரு மிகச் சிறந்த ஆசிரியர் பக்கம்

*ஆசிரியர் பக்கத்தில் ரஷீதா இவ்வாறு எழுதுகிறார்: இந்த வைரஸ் நமக்குச் சில பாடங்களைச் சொல்லித் தந்துள்ளது, இன்னும் மேம்பட்ட மனிதர்களாக நமக்கு உதவியுள்ளது என்றால்... என்னுடைய நம்பிக்கையும் இதுதான். இந்த நோய்ப்பரவலிலிருந்து நாம் எல்லாரும் சரியான பாடங்களைக் கற்றுக்கொள்ளவேண்டும் என்று வேண்டுவோம்.*

*நன் நாராயணன், RC மதுரை வெஸ்ட் — D 3000*

*உங்கள் ஜனவரி ஆசிரியர் பக்கத்தைப் படித்து மகிழ்ந்தேன். இங்கு உறுதியாகத் தெரிகிற ஒரு விஷயம், இந்த நோய்ப்பரவல் ரோட்டரிக்கு ஒரு வரம். உலகின் வெவ்வேறு பகுதிகளில் இருக்கிற நமக்கு, ஒருவரை ஒருவர் அறிந்துகொள்கிற, இத்தனை மக்களுடன் இணைகிற, அவர்களை நேருக்கு நேர் தெரிந்துகொள்கிற வாய்ப்பு கிடைத்திருக்கிறது. தனிப்பட்ட முறையில் இல்லாவிட்டாலும், உலகின் பெரும்பாலான பகுதிகளில் உள்ள நம் நண்பர்களை நாம் மெய்நிகர் வழியில் கண்டிப்பாகப் பார்த்துள்ளோம்.*

*இத்தகைய மெய்நிகர் கூட்டங்கள் பெரிய மாவட்ட நிகழ்வுகளிலும் நடத்தலாம். இவை இலவசமாக இருக்க வேண்டியதில்லை, ஒரு நியாயமான கட்டணத்துடன் இருக்கலாம், அந்த*




*மாவட்டங்களைச் சேர்ந்த ரோட்டரியன்களுக்குமட்டுமின்றி, உலகம்முழுவதும் உள்ள எல்லா ரோட்டரியன்களுக்கும் இவற்றைத் திறந்துவைக்கலாம்.*

*R முரளி, RC கோயம்பத்தூர் வெஸ்ட் —D 3201*

*இந்த நோய்ப்பரவல் நமக்கு என்ன சொல்லித்தந்துள்ளது என்ற தலைப்பில், கொரோனாவுக்குப் பிந்தைய உலகத்தை ஆசிரியர் நல்லமுறையில் விவரித்துள்ளார். பொருளோடும் நுண்ணுணர்வோடும் அவர் இதை எழுதியுள்ளார். இந்த நோய்ப்பரவல் நம்முடைய வாழ்க்கைமுறையில் மற்றும் அன்றாடப் பழக்க வழக்கங்களில் மிகப் பெரிய மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது, நாம் நம்முடைய குடும்பங்களுடன் தரமான அளவு நேரத்தைச் செலவிடுகிறோம். தொழில்நுட்பத்தையும் இன்னும் நன்றாகக் கற்றுக்கொண்டுள்ளோம். நம்முடைய நண்பர்கள் மற்றும் உறவினர்களை விடியோ அழைப்புகள்/ வாட்ஸாப் வழியாக அழைத்துப் பேசுகிறோம், வீட்டிலிருந்து இணையத்தைப் பயன்படுத்திப் பணியாற்றுகிறோம்.*

*கடினமான நேரங்களின்போது ஒருவருக்கொருவர் உதவிக்கொள்வதற்காக நாம் ஒன்றாகச் சேர்ந்தோம், குறிப்பாக, நலிந்த குடும்பங்களுக்கு உதவினோம், இன்னும் பலரை உள்ளடக்கிய ஒரு சமூகப் பார்வையை உண்டாக்கிக் கொண்டோம்.*

*அனைத்துக்கும் மேலாக, நம்மைச் சுற்றியுள்ள சுற்றுச்சூழலைக் குணப்படுத்துவதற்கு இந்த நோய்ப்பரவல் உதவியது. நம் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தையும் நாம் கற்றுக்கொண்டோம்.*

*ராஜ் குமார் கபூர் RC ரூப்நகர் — D 3080*

*நன்கு தொகுக்கப்பட்ட ஜனவரி இதழுக்காக, ஆசிரியர் ரஷீதாவுக்குப் பாராட்டுகள். அனைத்துக் கட்டுரைகளும் படிக்கச் சுவையாக இருந்தன. நோய்ப்பரவலின்போது உலகெங்கும் பொதுமக்கள் சந்திக்கிற பிரச்சனைகள் மற்றும் தொல்லைகளைச் சுட்டிக் காட்டி RID டாக்டர் பரத் பாண்ட்யா எழுதிய கட்டுரை சிறப்பாக இருந்தது.*

### தன்னுடைய மகனின் உறுப்புகளை நன்கொடையாக அளித்த Rtn சக்கரவர்த்தியை வணங்குவோம்

ஜனவரி இதழின் அட்டைப் படம் சிறப்பாக இருந்தது. படங்கள் பேசும்போது என்ற கட்டுரையின் புகைப் படங்கள் உயிர்ப் புடன் இருந்தன. Rtn பிக்கின சக்கரவர்த்தி அவர்கள் தன்னுடைய மறைந்த மகன் ஸ்ரீகாந்தின் உறுப்புகளை நன்கொடையாக அளித்துள்ளார், அவரைப் பாராட்டுவோம். RC பாம்பே மஹாகாளி ஹைட்ஸ் பழங்குடியினப் பெண்களுக்குப் பொருளுள்ள நன்கொடைகளை அளித்துள்ளார்கள். அவர்களுக்கு வாழ்த்துகள்.

Dr பொன் முத்தையன் RC ஆடுதுறை — D 2981

வாழ்க்கையின் அனைத்துப் பகுதிகளிலும் வெற்றியைச் சந்திக்க வியூக அடிப்படையிலான திட்டமிடல் கண்டிப்பாகத் தேவை, இதை RI தலைவர் ஹோல்கர் நாக் நன்றாகச் சொல்லியுள்ளார்.

Rtn பிக்கின சக்கரவர்த்தியின் மகன் ஸ்ரீகாந்த் மூளைச்சாவைச் சந்தித்த போது, அவர் தன் மகனின் உறுப்புகளை நன்கொடையாக வழங்கியுள்ளார், அவருடைய குடும்பத்தினருக்குப் பாராட்டுகள். RC மைசூரு 17 ஆண்டுகளாகத் தையல் மற்றும் அழகுக் கலைப் பயிற்சிகளை நடத்தி வருகிறது, இதற்காகக் குறைந்தபட்சக் கட்டணமாக ஒருவருக்கு ரூ.1,000 தான் வசூலிக்கிறது என்பது குறிப்பிடவேண்டிய விஷயம். இச்சங்கத்துக்கு வாழ்த்துகள்.

S முனியாண்டி RC திண்டுக்கல் ஃபோர்ட் — D 3000

### ஆஃப்கானிஸ்தான், முகம்மது ரஃபிபற்றிய சிறப்புக் கட்டுரைகள்

ஆஃப்கானிஸ்தான்பற்றிய சிறப்புக் கட்டுரை, போரால் பாதிக்கப்பட்ட அந்த நாட்டில்

*மார்பகப் புற்றுநோய் கண்டுபிடித்தல் (மேமோகிராஃபி) கருவியைப்பற்றி ஆசிரியர் எழுதிய கட்டுரை, ஒரே மனத்தைக் கொண்ட பல கைகள் அதிசயங்களை உண்டாக்கலாம், தொடர்ச்சியான முயற்சிகள் பெரிய சாதனைகளுக்கு வழிவகுக்கின்றன. துக்கத்தால் பாதிக்கப்பட்ட ரோட்டரியன் தம்பதியைப் பற்றிய இன்னொரு கட்டுரை நெஞ்சைத் தொட்டது.*

*V முத்துக்குமரன் எழுதிய கிராமப் புறப் பெண்களுடைய வாழ்க்கைகளை மாற்றுவதற்கு RC ராசிபுரம் பசுக்களை நன்கொடையாக அளிக்கிறது என்ற கட்டுரை உண்மையில் ஊக்கமளித்தது.*

*பாடகர் முகம்மது ரஃபியின் இணையற்ற குணங்கள் மற்றும் அவருடைய குரலின் மாயாஜாலத்தைப் பற்றி S R மது நன்றாக எழுதியுள்ளார்.*

*ஷ்ரத்தா V பாய், RC தாணே கிரீன் சிட்டி — D 3142*

*முகம்மது ரஃபியைப்பற்றி S R மது எழுதிய கட்டுரையின் அழகான வடி வமைப்பும், சுவையான தகவல்களும் புகைப்படங்களும் அருமை, என்னுடைய கல்லூரி நாள் நினைவுகளைத் திரும்பக் கொண்டு வந்தன. இது என்னை நினைவுப்பாதையில் திரும்ப அழைத்துச் சென்றது.*

*குரு தத், RC டோம்பிவலி ஈஸ்ட் — D 3142*

உள்ள சமூகப் பொருளாதாரச் சூழ்நிலைகளைச் சுட்டிக்காட்டுகிறது. தாலிபன் ஆட்சியின் கீழ் பெண்கள் கொடுமையை அனுபவித்துள்ளார்கள். கொடுமையான ஆட்சி, குழந்தை களுடைய கல்விக்கு ஒரு போதும் முக்கியத்துவம் தரவில்லை. ஆஃப்கானிஸ்தானைப்பற்றிய இந்தச் சிறப்புக் கட்டுரையின் இரண்டாவது பகுதியை நாங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். நல்வாழ்த்துகள்.

R வாசுதேவன், RC கும்பகோணம் சென்ட்ரல் — D 2981

ஜனவரி இதழை அஞ்சல்காரர் வழங்கியவுடன், நான் அவசர மாக அதைத் திறந்து விரைவாகப் புரட்டினேன். அட்டைப் படம், கட்டுரைகள், அச்சு மற்றும் புகைப் படங்களின் தரம் ஆகியவை மிகச் சிறப்பாக இருந்தன.

ஆஃப்கானிஸ்தான் மற்றும் முகம்மது ரஃபியைப் பற்றிய சிறப்புக் கட்டுரைகளும் மற்ற கட்டுரைகளும் நல்ல கட்டுரைகளைப் படிக்கவேண்டும் என்ற என்னுடைய தாகத்தைத் தணித்தன.

தர்ஷன் சிங் பெய்ட்
RC கரார் — D 3080

## சென்னை பூ விற்பனையாளர்கள்: ரோட்டரி உதவ முன்வருமா?

டிசம்பர் இதழில் சென்னையின் பூ விற்பனையாளர்களைப்பற்றிய அட்டைப் படக் கட்டுரை உண்மையில் நெஞ்சைத் தொட்டது. கோவிட் நோய்ப்பரவலில் பலர் பொருளாதார ரீதியிலும் மன ரீதியிலும் இன்னும் துன்பத்தை அனுபவிக்கிறார்கள் என்பதை இந்தக் கட்டுரை எங்களுக்கு உணர்த்தியது.

நோய்ப்பரவலால் துன்பத்தை அனுபவிக்கும் இதுபோன்ற மக்களுக்கு நிவாரணத்தைக் கொண்டுவருவதற்கு ரோட்டரியன்கள் எடுக்கவேண்டிய படிநிலைகள் பற்றியும் இதில் குறிப்பிட்டிருக்கலாம். பூக்களில் இருந்து அகர்பத்தி (ஊதுபத்தி) தயாரிப்பதற்கும், அவற்றை விற்பதற்கும் இந்தப் பெண்களுக்குப் பயிற்சி தருவது அவர்களுடைய தொழிலுக்கு நிதி அளிப்பது, அவர்களுடைய வாழ்வாதாரத்தை ஆதரிப்பதற்காக அவர்களுடைய தயாரிப்புகளை சந்தைப்படுத்துதல் ஆகியவற்றை ரோட்டரி சங்கங்கள் முன்னெடுக்கலாம்.

இதன் மூலம், இந்தப் பெண்களின் நிதி நிலையும் மேம்படும், ரோட்டரியின் பொதுத் தோற்றமும் சிறப்பாகும்.

ராஜேஷ் S பர்தேஷி, RC அகமத்நகர் சென்ட்ரல் — D 3132

## ரோட்டரியன் அல்லாத ஒருவரிடமிருந்து பாராட்டு:

*ரோட்டரி நியூஸ் மிகச் சிறந்த முறையில் கொண்டு வருவதற்காக நான் உங்களைப் பாராட்டுகிறேன்.*

*ஜனவரி இதழ் மிக நன்றாக இருந்தது. குறிப்பாக, ஆஃப்கானிஸ்தான்: பற்றிய கட்டுரை எனக்கு மிகவும் பிடித்திருந்தது.*

*தயவுசெய்து, இந்த இதழைப் பெறுவதற்காக, உங்களுடைய அஞ்சல் பட்டியலில் ஒரு சிறப்பு விருந்தினராக எங்களைச் சேருங்கள்.*

*Dr ஸ்ரீகாந்த K பாணிக்ரஹி,*
*பொது இயக்குநர்,*
*நீடித்த முன்னேற்றத்துக்கான இந்தியக் கல்வி அமைப்பு (IISD)*

We welcome your feedback. Write to the Editor:
**rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com.**
Mail your project details, along with hi-res photos,
to **rotarynewsmagazine@gmail.com**

Messages on your club/district projects, information and links on zoom meetings/webinar should be sent only by e-mail to the Editor at **rushbhagat@gmail.com** or **rotarynewsmagazine@gmail.com**
WHATSAPP MESSAGES
WILL NOT BE ENTERTAINED.

Click on **Rotary News Plus** in our website **www.rotarynewsonline.org** to read about more Rotary projects.



# சமூகங்களை மேம்படுத்தும் ரோட்டரி அமைதி திட்டம்

ரோட்டரியில், 23 பிப்ரவரி தான் நம்முடைய ஆண்டு விழா. அதே பிப்ரவரி தான் நாம் அமைதியை முன்னிறுத்துவதில் கவனம் செலுத்துகிற மாதம். இதற்கு ஒரு காரணம் உண்டு: நம்முடைய தொடக்க நாட்களிலிருந்தே, அமைதிக்கும் பன்னாட்டுப் புரிந்துகொள்ளுதலுக்கும் பங்களிப்பது நமக்கு ஒரு மிகப் பெரிய முக்கியத்துவமாக இருந்துவந்துள்ளது.

ரோட்டரியில் அமைதிக்குப் பல வழிகள் உள்ளன. நம்முடைய இளைஞர் திட்டங்கள் நம்மை நேர்வித அமைதியின் திசையில் அழைத்துச் செல்கின்றன, ரோட்டரியன் அமைதித் திட்டங்கள் அடைகாக்கும் கருவி (RPPI). ரோட்டரியன்கள், ரோட்டராக்டர்கள் மற்றும் ரோட்டரி அமைதித் தோழர்கள், முன்னாள் அமைதித் தோழர்கள் இணைந்து பணிபுரிகிற, தூண்டுதலளிக்கும் செயல்பாடு ஆகும்.

சுவிட்சர்லாந்து மற்றும் லீக்கின்ஸ்டைனில் உள்ள ரோட்டரியன்களால் வழிநடத்தப்படும் RPPI, 48 பன்னாட்டுத் திட்டங்களை வடிவமைத்துள்ளது. இவற்றை எந்தச் சங்கமும் நேரடியாகவோ, ரோட்டரி அறக்கட்டளையின் பன்னாட்டு நல்கைகள் வழியாகவோ ஆதரிக்கலாம். தாய்லாந்தின் பேங்காக்கில் உள்ள சுலலாங்கொர்ன் பல்கலைக் கழகத்திலிருக்கும் ரோட்டரி அமைதி மையத்தின் முன்னாள் உறுப்பினர்களான நினோ லோடிஷ்விலி மற்றும் மேத்யூ ஜான்சென் இதன் பல தன்னார்வலர்களில் இருவர்.

*என்னுடைய ரோட்டரி அமைதிப் பயணத்தின் போது, உள் அமைதியைக் கட்டமைக்கவும், நீடித்திருக்கும் வெளி அமைதியை உருவாக்கவும் தனிப்பட்ட மீள்திறன் எப்படி உதவுகிறது. ஜார்ஜியாவில் என்னுடைய கள ஆராய்ச்சியின் அடிப்படையில் அமைந்த, தெற்குக் காக்கேசியாவுக்கான பெண் அமைதித் தூதுவர்கள் திட்டத்தின் பின்னால் இருந்த தூண்டுதல் இதுதான்.*

*எல்லைப்புற நிலங்களில் வசிக்கும் பல இனங்களைச் சேர்ந்த குடும்பங்களிலிருந்து வருகிற பெண்கள் தங்களுடைய சமூகங்களுக்குள்ளும் அவற்றைத் தாண்டியும் லட்சிய பிம்பங்களாக இருக்கலாம் என்கிற மிகச் சிறந்த சாத்தியத்தை, ரோட்டரியன்களையும் அமைதித் தோழர்களையும் கொண்ட RPPI குழுவிலிருந்து 40 பங்கேற்பாளர்கள் தங்கள் கதைகளைப் பகிர்ந்து 400 குடும்பங்களுக்கு பகிர்ந்து கொண்டனர்.*

*ஊக்கம் தருகிற, ஆனால், ஒடுக்கப்பட்ட இந்தப் பெண்கள், அடிமட்ட நிலையில் அமைதியைக் கட்டமைப்போராகத் தங்களுடைய வலிமையை மீண்டும் கோரிப் பெறுவார்கள்.*

*— நினோ லோடிஷ்விலி.*



*— நினோ லோடிஷ்விலி.*

RPPI திட்டம் வழியாக *என்னுடைய குழு ஐந்து முன்வைப்புகளை எழுதியது; இதில் மூன்று பங்களாதேஷிலும் ஒன்று ஈராக்கிலும் மற்றும் ஒன்று போலந்திலும் அமைந்தன. இந்த முன்வைப்புகள், மதம் சார்ந்த பிரிவினைகளைத் தாண்டிய உரையாடலை உருவாக்குவதற்காகக் கலை மற்றும் கல்வியில் கவனம் செலுத்துகின்றன, இளைஞர்கள் தீவிர வழியில் செல்வதைத் தடுக்கின்றன.*

*நோய்ப்பரவல் இருந்தபோதும், நாங்கள் தொழில்நுட்பத்தின் வழியாக ஒன்றாகப் பணியாற்றினோம், இந்தத் தொலை நோக்குகளை உண்மையாக மாற்றுவதற்காக, ரோட்டரியின் அமைதிச் சமூகத்துடன் இணைந்து பணியாற்றுவதில் நான் மிகவும் மகிழ்கிறேன்.*

—மேத்யூ ஜான்சென்



*— மேத்யூ ஜான்சென்*

ரோட்டரியில் நாம் சொற்களைவிடச் செயலைத்தான் விரும்புகிறோம் என்பதற்கான கூடுதல் சான்று, இதோ. ரோட்டரியின் மிகச் சிறந்த நிலை இதுதான். திட்டங்களை ஆராயவும், அவற்றை ஆதரிக்கவும் நீங்கள் rppi.ch என்ற இணையத் தளத்துக்கு வரவேண்டும் என்று நான் ஊக்குவிக்கிறேன்.

**ஹோல்கர் நாக்**

RI தலைவர்



# பள்ளிகள்: பெண்களின் உடைந்துபோன உயிர்நாடி

“ஒடிஸி” மெய்நிகர் மண்டலக் கூட்டத்தில் மாவட்ட ஆளுநராக பதவியேற்க இருப்பவர்களிடம் உரை யாற்றிய RI தலைவர் ஹோல்கர் நாக், டிஜிட்டல் யுகத்தைத் தழுவுமாறு அறிவுறுத்திய போதிலும் அமைப்பாளர்கள் இந்த மெய்நிகர் கூட்டத்தை அற்புத மாக ஏற்பாடு செய்திருந்தார்கள். ரோட்டரி இந்தியாவின் மூவரான RI. இயக்குநர் கமல் சங்வி, RIDE மகேஷ் கோட்பாகி (GETSக்கு தலைமை வகித்தவர்) மற்றும் இன்ஸ்டிட்யூட் தலைவர் PDG சஞ்சய் கெம்கா ஆகியோரின் திடமான கடின உழைப்பு, படைப்பாற்றல் மற்றும் நவீன தொழில் நுட்பம் இவற்றின் மூலம் நிகழ்ச்சியை நேரில் கண்ட உணர்வைத் தந்தனர்.

நான் கூட்டத்தின் அமர்வுகள் ஒவ்வொன்றாகக் கடந்து சென்றபோது ரோட்டரியில் பெண் உறுப்பினர்களை அதிக அளவில் சேர்க்க வேண்டும், அதிக பெண்கள் தலைமைப் பதவிக்கு பெண்கள வரவேண்டும் என்ற ரோட்டரியின் குறிக்கோளுக்கு இணங்கும் வகையில் நல்ல பெண் பேச்சாளர்களையும் நிகழ்ச்சிக்கு அழைத்து வர வேண்டும் என்று குழுவினர் கடும் முயற்சி மேற்கொண்டனர். அது நல்ல பலனை அளித்தது. சில பெண் பேச்சாளர்கள் உண்மையிலேயே தொழில் முறையிலும், பாலின அடிப்படையிலும் கோவிட் தொற்று பற்றிய பல உண்மைகளை தெரிவித்தார்கள். உலக சுகாதார நிறுவனத்தின் தலைமை விஞ்ஞானி சௌமியா சுவாமிநாதன் முத்திரை பதிக்கும் பேச்சில், வளர்ந்த நாடுகள் பலவற்றில் கொரோனா தொற்று அதிக அளவில் பதிவானது. பொது சுகாதாரத்தில் அதிக அளவு முதலீடு செய்யாததே இதற்குக் காரணம் என்றும் அவர் குறிப்பிட்டார். ஒரு நாட்டில் ஏற்படும் தொற்று மற்றும் உலகளாவிய தொற்றுகளைச் சமாளிக்க பொது சுகாதார நடவடிக்கைகள் முக்கியமானது என்றார். அவர் தெளிவாக குறிப்பிட்டுள்ள செய்தி என்னவென்றால் இது போன்ற முதலீடுகள் உடனடி முடிவுகளைத் தராவிட்டாலும் நோய்த் தடுப்பு மற்றும் நோய்க்கட்டுப் பாட்டு நடவடிக்கைகளுக்கு இது மிகவும் அவசியம் என்கிறார்.

சௌமியா, யுனிசெப் இந்தியா தலைவர் யாஸ்மின் அலி ஹக் இருவரும் நிகழ்ச்சியில் பங்கேற்ற ரோட்டரி தலைவர்களின் மனதைத் தொடும் வகையில் கொரோனா தொற்றால் மகளிரும், இளம் பெண்களும் எப்படி கடுமையாக நடத்தப்பட்டார்கள் என்பதை புள்ளிவிவரங்களுடன் அதிர்ச்சி தரும் தகவல்களைக் கூறினர். தொற்றுக் காலத்தில் குடும்ப வன்முறையும் பெண்கள் கடத்தலும் தந்திரமான வகையில் அதிகரித் திருந்ததாக சௌம்யா சுட்டிக் காட்டினார்.கரோனா காலத்துக்குப் பிறகு எல்லோரையும் கருணையுடன் அணுகுமாறு ரோட்டேரியன்களையும் உலகத் தலைவர்களையும் அவர் வலியுறுத்தினார். பெண்கள் கல்வி எப்படி மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது என்பதை ஹக் விவரித்தார். தொற்று காலத்தில் பள்ளிக்குச் செல் வதற்கு இதுவரை இல்லாத அளவு இடையூறுகள் ஏற்பட்டதால் இந்த ஆண்டு 11 மில்லியன் பெண்கள் பள்ளிக்கு திரும்பமாட்டார்கள் என்று யுனெஸ்கோ மதிப்பிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். தொற்றுக் காலத்துக்கு முன்பே இந்தியாவில் 30 மில்லியன் குழந்தைகள் பள்ளிக்குச் செல்லவில்லை. இவர்களில் 40 சதவீதம் வளர் இளம் பருவத்தினர். மேலும் இந்தியாவில் ஆண்களின் 7 ஆண்டுகளுடன் ஒப்பிட்டால் பெண்களுக்கு 4.4 ஆண்டுகள்தான் பெறுகிறார்கள். இது பாலின சமத்துவத்தில் பல தசாப் தங்களாக வேலை செய்யும் அச்சுறுத்தலை குறிக்கிறது. மேலும் இளம் பருவத்திலேயே கர்ப்பம், சிறு வயதிலேயே கட்டாயத் திருமணம், மற்றும் வன்முறை ஆகியவற்றின் அபாயத்து க்கு சிறுமிகளைத் தூண்டுகிறது. உலகில் குழந்தைத் திருமணம் நடைபெறும் நாடுகளில் இந்தியாவும் முக்கியப் பங்குவகிக்கிறது என்ற நிலையில் இந்த தொற்று காரணமாக இதுவும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஆண்டு ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் மட்டும் குழந்தைத் திருமணம் தொடர்பாக சைல்டு லைன் அமைப்புக்கு வந்துள்ள துயர அழைப்புகள் 17 சதவீதம் அதிகரித்துள்ளன. பல பெண்களுக்கு எதிர்கால வாழ்க்கைக்கு, மற்ற எல்லாவற்றையும்விட கல்விதான் முக்கிய திறவுகோலாக உள்ளது. அதுதான் அவர்களின் வாழ்க்கையின் உயிர்நாடி என்றாலும் அது இப்போது உடைந்துபோய் இருக்கிறது என்று அவர் சொன்னபோது நமக்கு அழுகையே வரும்போல இருந்தது. இதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

உடைந்த நிலையிலும் பெண்களுக்கு உயிர்நாடியான கல்வியை அவர்களுக்கு வழங்க நாம் முன்வர வேண்டும். பாதுகாப்பாக கரைசேர அவர்களை தூக்கிவிட வேண்டும். நம்பிக்கையான எதிர்காலம் அவர்களுக்கு காத்திருக்கிறது.



ரஷீதா பகத்

## Governors Council

| | |
|---|---|
| RI Dist 2981 | DG R Balaji Babu |
| RI Dist 2982 | DG K S Venkatesan |
| RI Dist 3000 | DG A L Chokkalingam |
| RI Dist 3011 | DG Sanjiv Rai Mehra |
| RI Dist 3012 | DG Alok Gupta |
| RI Dist 3020 | DG Muttavarapu Satish Babu |
| RI Dist 3030 | DG Shabbir Shakir |
| RI Dist 3040 | DG Gajendra Singh Narang |
| RI Dist 3053 | DG Harish Kumar Gaur |
| RI Dist 3054 | DG Rajesh Agarwal |
| RI Dist 3060 | DG Prashant Harivallabh Jani |
| RI Dist 3070 | DG CA Davinder Singh |
| RI Dist 3080 | DG Ramesh Bajaj |
| RI Dist 3090 | DG Vijay Arora |
| RI Dist 3100 | DG Manish Sharda |
| RI Dist 3110 | DG Dinesh Chandra Shukla |
| RI Dist 3120 | DG Karunesh Kumar Srivastava |
| RI Dist 3131 | DG Rashmi Vinay Kulkarni |
| RI Dist 3132 | DG Harish Motwani |
| RI Dist 3141 | DG Sunnil Mehra |
| RI Dist 3142 | DG Dr Sandeep Kadam |
| RI Dist 3150 | DG Nalla Venkata Hanmanth Reddy |
| RI Dist 3160 | DG B Chinnapa Reddy |
| RI Dist 3170 | DG Sangram Vishnu Patil |
| RI Dist 3181 | DG M Ranganath Bhat |
| RI Dist 3182 | DG B Rajarama Bhat |
| RI Dist 3190 | DG B L Nagendra Prasad |
| RI Dist 3201 | DG Jose Chacko Madhavassery |
| RI Dist 3202 | DG Dr Hari Krishnan Nambiar |
| RI Dist 3211 | DG Dr Thomas Vavanikunnel |
| RI Dist 3212 | DG P N B Murugadoss |
| RI Dist 3231 | DG K Pandian |
| RI Dist 3232 | DG S Muthupalaniappan |
| RI Dist 3240 | DG Subhasish Chatterjee |
| RI Dist 3250 | DG Rajan Gandotra |
| RI Dist 3261 | DG Fakir Charan Mohanty |
| RI Dist 3262 | DG Saumya Rajan Mishra |
| RI Dist 3291 | DG Sudip Mukherjee |


Printed by PT Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by PT Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions – original content – is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced with permission and attributed to RNT.

# RI இயக்குனர்



ரோட்டரி மிகச் சிறந்த வழிகளில் ஒன்று, அமைதி, நல்லெண்ணம் மற்றும் உலகப் புரிந்துகொள்ளல் என்பன. அமைதி என்பது, நம் வீடுகளின் ஒவ்வொரு மூலையிலும், நாம் சொல்கிற, செய்கிற ஒவ்வொன்றிலும் தொடங்குகிறது. அமைதி என்பது, போர் இல்லாத நிலை இல்லை, பாதுகாப்பாக உணர்தல், உங்கள் குடும்பத்துக்கு உணவளிக்கப் போதுமான உணவைக் கொண்டிருத்தல், கல்வி பெறும் வாய்ப்புக் கொண்டிருத்தல், தவிர்க்கக்கூடிய நோய்களால் முடக்கப்படாமல் முன்னேற இயலுதல் போன்றவையும் அதில் உண்டு.

ரோட்டரி என்றாலே நம்பிக்கை. வருங்காலத் தலைமுறைகளுக்கு இன்னும் ஒளிமயமான ஓர் எதிர்காலம், இன்னும் மேம்பட்ட உலகத்தை வழங்க இயலும் என்கிற நம்பிக்கை. முரண், போர், தீவிரவாதம், இருட்டு நிறைந்த ஓர் உலகத்தில், அமைதி, நல்லெண்ணத்துக்காக உழைப்பதன்மூலம் ரோட்டரி ஒரு நம்பிக்கை ஒளிக்கீற்றை வழங்குகிறது.

அமைதிக்கான நம்முடைய பணி, மாநாடுகள், கருத்தரங்குகளில்மட்டும் நிகழ்வதில்லை. தனிப்பட்ட உறவுகள், சேவை, அடிப்படை மனிதத் தேவைகளை எட்டுதல், முரண்களைத் தீர்ப்பதற்காக ஒருவரோடு ஒருவர் இணைந்து பணியாற்றுதல் ஆகியவற்றின் வழியாக அது நிகழ்கிறது. எல்லைகள், கண்டங்களைத் தாண்டி அணுகுதல், அமைதியை மலர அனுமதிக்கும் நிலைகளை உருவாக்க உதவுதல் ஆகியவற்றின் வழியாக அது நிகழ்கிறது.

பன்னாட்டு முரண் ஒரு மிகப் பெரிய நெருக்கடியை உருவாக்கியுள்ளது, இதனால் 68.5 மில்லியன் அகதிகள் உண்டாகியுள்ளார்கள் என மதிப்பிடப் பட்டுள்ளது. 2019ல் பன்னாட்டுப் பொருளாதாரத்தில் தீவிரவாதத்தின் பொருளாதாரத் தாக்கம் வாங்கும் ஆற்றல் சமநிலை (PPP) அடிப்படையில், 14.5 டிரில்லியனாக இருந்தது. இந்த எண்ணிக்கை, உலகின் பொருளாதாரச் செயல்பாட்டில் (மொத்த உலகத் தயாரிப்பு) 10.6 சதவிகிதத்துக்குச் சமமாகும், அல்லது, ஒருவருக்கு $1,909.

பன்னாட்டு அமைதிக் குறியீட்டெண்ணின்படி, 2019ல் 81 நாடுகள் முன்பைவிடக் கூடுதல் அமைதி பெற்றன, 80 நாடுகளில் அமைதி முன்பைவிடக் குறைந்தது. ஒன்பது நாடுகளில், முந்தைய 12 ஆண்டுகளில் அமைதி நிலை ஒவ்வோராண்டும் குறைந்துவந்துள்ளது.

ரோட்டரியிலுள்ள நம்மால் இதைச் சரிசெய்வதற்கு ஏதேனும் செய்ய இயலும், நாம் அதைச் செய்யவேண்டும். பன்னாட்டு முரண் பிரச்சனைகளைக் கையாளும் இலக்குடன் ரோட்டரியின் அமைதி அறிஞர்கள் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

அமைதி என்பது, வன்முறை இல்லாதிருத்தல், அச்சத்தில் இருந்து விடுதலை, நல்ல வாழ்க்கைத் தரம் ஆகிய பண்புகளைக் கொண்ட ஓர் இணக்க நிலையாகும். சேவை என்பது, பிறருடைய நன்மைக்காகச் செய்யப்படும் ஒரு செயல்பாடாகும். உணவு, நீர், வீடு, நலன் ஆகிய அடிப்படைத் தேவைகள் எட்டப்படாதபோது, அமைதியைச் சாதிப்பது கடினம். மக்கள் பசியோடு இருக்கும்போது, வீடு இல்லாமல் இருக்கும்போது, சண்டை போட்டுப் பெற்றுக்கொள்ள எண்ணுகிறார்கள், அதனால் முரண் உண்டாகிறது. சமூகத்தின் தேவைகளை எட்டுவதன்மூலம், ரோட்டரி நேர்வித அமைதிக்காகப் பணியாற்றுகிறது. ரோட்டரி சேவை என்பது, செயலின்மூலம் பெறும் அமைதியாகும்.



**Dr பரத் பாண்ட்யா**
RI இயக்குனர், 2019–21

# களின் செய்திகள்

அன்புள்ள ரோட்டரி தலைவர்களே



கடந்த காலங்களில் உலகம் முழுவதும் நடந்த மோதல்கள் மற்றும் வன்முறைகளால் லட்சக் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மோதல்களை வாழ்க்கையின் நடைமுறையாக ரோட்டேரியன்களான நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. நமது சமூகச் சேவைத் திட்டங்கள் புரிந்துணர்வுப் பயிற்சியையும், சமூகங்களுக்கு இது போன்ற மோதல்களைத் தீர்ப்பதற்கான திறன்களையும் வழங்கிவருகிறது. ரோட்டரி உலகில் அமைதியை வலியுறுத்தி வருகிறது. தனது சேவைத் திட்டங்கள் மூலம் உலகில் மோதல்களையும் பதற்றங்களையும் குறைத்து வருவது மட்டுமல்லாமல் அமைதியையும் கூட்டுறவையும் வலியுறுத்தி வருகிறது. வறுமை, சமத்துவமின்மை, இனமோதல்கள், கல்வி கற்பதற்கான வாய்ப்பு இல்லாமை, சமமற்ற நிலையில் வளங்கள் விநியோகம் உள்ளிட்ட மோதலுக்கு அடிப்படைக் காரணங்களைத் தீர்க்க ரோட்டரி உறுப்பினர்கள் மற்றும் அறிஞர்கள் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

என்னை பொறுத்தவரை, அமைதி என்பது பசித்தவர்களுக்கு உணவு, ஊனமுற்றோருக்கு செயற்கை கை, கால்கள், விழி இழந்தவர்களுக்கு பார்வை கிடைக்கச் செய்தல், வீடற்றவர்களுக்கு வீடு, தாகத்திற்கு தண்ணீர், படிப்பறிவில்லாதவர்களுக்கு எழுத்தறிவு பெறும் வாய்ப்பை ஏற்படுத்தி தருதல் ஆகியவைதான். கொவிட் தொற்று உலகையே அச்சுறுத்திய காலத்தில் உலக அளவில் ரோட்டேரியன்களான நாம் எவ்வளவு உதவிகள் செய்தோம் என்பதை கற்பனை செய்து பாருங்கள். நாடுகள் நீண்டகாலம் பொது முடக்கத்தை அமல்படுத்தின. பொருளாதார நடவடிக்கைகள் வெகுவாக பாதிக்கப்பட்டன. மக்கள் தங்கள் வாழ்வாதாரத்துக்காகப் போராட வேண்டியிருந்தது. தொழில்கள் பாதிக்கப்பட்டன. இதன் எதிரொலியாக ஆயிரக் கணக்கானவர்கள் வேலையிழக்கும் நிலை உருவானது. சமூகத்தில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட பின்தங்கிய பிரிவினர் போதுமான சிகிச்சை பெற போராட வேண்டியிருந்தது. அந்த நேரத்தில் உலகெங்கிலும் உள்ள ரோட்டேரியன்கள் வெளியே வந்து வீடற்றவர்களுக்கும் பசித்தவர்களுக்கு உணவளித்தனர். தங்கள் நாட்டு அரசு மற்றும் சுகாதார ஊழியர்களுடன் இணைந்து செயல்பட்டு முகக்கவசங்கள், கிருமிநாசினிகள், முழு உடல் பாதுகாப்பு கவசங்களை பெருமளவில் வழங்கினர். அதுமட்டுமல்லாமல், மருத்துவமனைகளுக்குத் தேவையான உபகரணங்கள், செயற்கைச் சுவாசக் கருவிகள் என தேவையான அனைத்தையும் வழங்கினர். நோயுற்றவர்களுக்கும் பசியால் வாடியவர்களுக்கும் தேவையான உதவிகளைச் செய்து அவர்களுக்கு ஆறுதலாக இருந்தனர்.

ரோட்டரி அமைதி மையங்கள் திட்டம் மோதலை தீர்ப்பதற்கும், சமாதானத்தை ஊக்குவிப்பதற்கும் சமாதான அறிஞர்களை உருவாக்குகிறது. கொவிட் தொற்று காலத்தில் நாம் அனைவரும் நன்மை செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் உலகத்தில் அமைதி தூதர்களாகச் செயல்பட்டோம். இந்த தொற்று நோயால் பாதிக்கப்படுபவர்களுக்கு உதவி செய்வதற்கான அனைத்து முயற்சிகளையும் நாம் தொடர உறுதி ஏற்க வேண்டும். நமது அரசாங்கங்கள் மக்களுக்குத் தடுப்பூசி போடுவதற்கு நம்மால் ஆன உதவியைச் செய்வோம். இந்த துயரமான காலத்தில் நம்பிக்கை மற்றும் அமைதியின் ஒளிவிளக்காக இருப்போம்.



**கமல் சங்வி**
RI இயக்குனர், 2019–21


## Board of Permanent Trustees & Executive Committee

| | |
|---|---|
| PRIP Rajendra K Saboo | RI Dist 3080 |
| PRIP Kalyan Banerjee | RI Dist 3060 |
| RIPE Shekhar Mehta | RI Dist 3291 |
| PRID Panduranga Setty | RI Dist 3190 |
| PRID Sushil Gupta | RI Dist 3011 |
| PRID Ashok Mahajan | RI Dist 3141 |
| PRID P T Prabhakar | RI Dist 3232 |
| PRID Dr Manoj D Desai | RI Dist 3060 |
| PRID C Basker | RI Dist 3000 |
| TRF Trustee Gulam A Vahanvaty | RI Dist 3141 |
| RID Dr Bharat Pandya | RI Dist 3141 |
| RID Kamal Sanghvi | RI Dist 3250 |
| RIDE A S Venkatesh | RI Dist 3232 |
| RIDE Dr Mahesh Kotbagi | RI Dist 3131 |

**Executive Committee Members (2020–21)**

| | |
|---|---|
| DG Sanjiv Rai Mehra<br>Chair – Governors Council | RI Dist 3011 |
| DG Sudip Mukherjee<br>Secretary – Governors Council | RI Dist 3291 |
| DG Sangram Vishnu Patil<br>Secretary – Executive Committee | RI Dist 3170 |
| DG Prashant Harivallabh Jani<br>Treasurer – Executive Committee | RI Dist 3060 |
| DG S Muthupalaniappan<br>Member – Advisory Committee | RI Dist 3232 |



**ROTARY NEWS / ROTARY SAMACHAR**

**Editor**
Rasheeda Bhagat

**Senior Assistant Editor**
Jaishree Padmanabhan

**ROTARY NEWS / ROTARY SAMACHAR**

ROTARY NEWS TRUST
3rd Floor, Dugar Towers,
34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India.
Phone : 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org
Website: www.rotarynewsonline.org

Now share articles from *rotarynewsonline.org* on WhatsApp.

THE ODYSSEY
ROTARY INSTITUTE 20-21

# நமது செயல்திறனை அதிகரிக்கும் நேரம் வந்துவிட்டது: RIPE மேத்தா

ரஷீதா பகத்

எழில் கொஞ்சும் கொச்சியில் கைகுலுக்குவதையும், அரவணைப்புகளையும் நான் இழக்கிறேன். ஆனால், இந்த புதிய இயல்பான சூழலில் சிறந்த கழகத்தில் மெய்நிகர் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கொரோனா தொற்றை மக்கள் பொறுமை, ஒழுக்கம், எல்லாவற்றுக்கும் மேலாக நம்பிக்கை ஆகியவற்றின் மூலம் எதிர்கொள்ளத் தொடங்கிவிட்டனர். இது மிகவும் சக்தி வாய்ந்தது. சாத்தியமற்ற காரியங்களைச் செய்யத் தூண்டுகிறது. கடினமான காலங்களிலும் நமக்கு உதவி வருகிறது என்றார் ரோட்டரி இன்ஸ்டிட்யூட் தொடக்கவிழா அமர்வில் உரையாற்றிய RIPE சேகர் மேத்தா.

இந்த மெய்நிகர் கூட்டத்திற்கு தி ஒடிஸி என பெயரிடப்பட்டுள்ளது. இப்போது வாழ்நாளில் நாம் சந்தித்த கொரோனா என்னும் அரக்கனை அழிக்க குறுகிய காலத்தில் பல்வேறு தடுப்பூசிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில் நமது நம்பிக்கை மெய்ப்பட வேண்டும்.

மனிதநேயம் மற்றும் நம்பிக்கையின் துடிப்பை நாம் கொண்டாட வேண்டும். இந்த வருடத்தின் தொடக்கத்தில் கொரோனா தொற்று பலரை பலிவாங்கி இருந்தாலும், பாதிப்புகள் அதிகம் இருந்தாலும், நாம் உயிர்வாழ்வோம், வாழ்க்கையை மாற்றியமைப்போம் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. ராஷ்மிக்கும் எனக்கும் இந்த வருடம் மறந்துபோன ஒன்று. நாங்கள் ஒரு அன்பான தந்தையையும், தாயையும் இழந்துவிட்டோம். நமது அன்புக்குரிய PRIP கல்யாண் பானர்ஜியின் மனைவி மற்றும் சிறந்த நண்பர் PRID யஷ்பால் தாஸ் அவர்களையும் இழந்து விட்டோம்.



RIPE *சேகர் மேத்தா.*

RIன் இரண்டு நிகழ்வுகளான சர்வதேச மாநாடு மற்றும் சர்வதேச அசெம்பிளி இரண்டும் மெய்நிகர் சந்திப்பிலேயே நிகழ்ந்தது. ஆயிரக்கணக்கான ரோட்டேரியன்களின் கூட்டுச் செயல்பாடு,கற்றல் மறுக்கப் பட்டது. ஆனாலும், நாங்கள் ஒரு ஆரோக்கியமான உலகத்தை எதிர்நோக்கியுள்ளோம்.

தடுப்பூசிகள் போடும் விஷயத்தில் நம்மால் முடிந்த உதவிகளை அரசுக்குச் செய்ய வேண்டும். இந்தியாவில் PRIP ராஜேந்திர சாபூ, நான் மற்றும் இதர ரோட்டரி தலைவர்கள் மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஹர்ஷவர்தன் மற்றும் நிதி ஆயோக் தலைவர்களைச் சந்தித்தோம். உத்தரப்பிரதேசம், கர்நாடகம் உள்ளிட்ட அடிமட்ட அளவில் பணிகள் தொடங்கிவிட்டன. போலியோ தடுப்பூசிப் பணியில் சிறப்பாகச் செயலாற்றிய அனுபவத்தை வைத்து ரோட்டரி இந்த பணிக்கு அழைக்கப் பட்டுள்ளது.

கோவிட்-19 தொற்றுப் பரவலை தடுக்க ரோட்டரியினரான நாம் நிறைய சேவை செய்ய முடியும். தடுப்பூசி களை விநியோகிப்பது, தடுப்பூசி போடுவதற்கான பயிற்சி மற்றும் சான்றுகளை அளிக்க முடியும். நமது மருத்துவமனைகள், இரத்த வங்கிகள், பள்ளிகள் முதலானவற்றை தடுப்பூசி

மையங்களாக வழங்க முடியும். தடுப்பூசி போட்டுக்கொள்வதற்காக சமூகத்தை அணிதிரட்டுதல் மற்றும் தடுப்பூசியின் பயன்கள் குறித்து மக்களிடம் விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல் போன்றவற்றைச் செய்யமுடியும்.

போலியோ ஒழிப்பு நடவடிக்கைகள் நமக்கு கடந்த ஆண்டு நல்லபெயரை கொடுத்தது. ஆப்பிரிக்கா போலியோ இல்லாத நாடாக உருவெடுத்துள்ளது. உலக அளவில் போலியோவை முற்றிலுமாக ஒழிக்கும் பணியில் நாம் நெருங்கிவந்துள்ளோம். மராத்தான் போட்டியின் கடைசி கட்டத்தில் இருக்கிறோம். இந்த சமயத்தில் வெற்றி இலக்கை எட்டுவதற்கு வசதியாக TRFக்கு நமது பங்களிப்பை முன்னெடுப்போம். நாம் செய்யும் பங்களிப்பைவிட TRF மற்றும் கேட்ஸ் அறக்கட்டளை அதிக பங்களிப்புச் செய்கிறது.

கொரோனா தொற்று சவால் நம்மை மேலும் சுறுசுறுப்பாக்கியுள்ளது. நாம் அனைத்துவிதத்திலும் தொடர்பில் இருக்கிறோம். உங்களைப் போலவே நானும் பல்வேறு மெய்நிகர் கூட்டங்களில் பங்கேற்றேன் ஒரே நாளில் ஆப்ரிகிக்கா, தென்னமெரிக்கா, ஐரோப்பா மற்றும் தெற்காசிய நாடுகளின் கூட்டங்களில் பங்கேற்றேன்.

RC தில்லி வெஸ்ட் கடந்த 20 ஆண்டுகளாக குழந்தைகளுக்கான ஓவியப் போட்டியை நடத்தி வருகிறது. கடந்த ஆண்டு நடந்த போட்டியில் 6,000 பேர் பங்கேற்றனர். இந்த ஆண்டு கொரோனா தொற்று பரவல் காரணமாக மெய்நிகர் நிகழ்ச்சி மூலம் நடைபெற்ற போட்டியில் 20 நாடுகளைச் சேர்ந்த 12,000 பேர் பங்கேற்றனர். கொரோனா கற்றுத்தந்த பாடம் என்னவெனில் ரோட்டரி நேரிடையான உலகத்திலும், மெய்நிகர் உலகத்திலும் சிறந்ததை கொடுக்க முடியும் என்பதுதான்.


கூட்டங்களை நடத்துவதற்கும், முடிவுகளை எடுப்பதற்குமான வேகம் கணிசமாக அதிகரித்துள்ளது என்றார் அவர். ரோட்டரி இன்டர்நேஷனல் நிர்வாகக்குழு இப்போது ஒருமாதம் விட்டு ஒருமாதம் கூடுகிறது. அறங்காவலர்கள் ஒவ்வொரு மாதமும் சந்திக்கிறார்கள். மாற்றத்தை தழுவிக்கொள்ளும் திறனிலிருந்து முடிவுகளை விரைந்து எடுக்க முடிகிறது.

தொற்றுக் காலத்தில் ரோட்டேரியன்கள் தாராள மனதுடன் உதவியதற்கு நன்றிகூறுகிறேன். PMCARES நிதிக்கு அள்ளிக்கொடுத்தீர்கள். அதுமட்டுமல்ல, அடிமட்ட அளவில் மகத்தான பணிகளைச் செய்துள்ளீர்கள். முகக்கவசங்கள், கிருமிநாசினிகள், மருத்துவ உபகரணங்கள், உணவு உள்ளிட்டவற்றை வழங்கியுள்ளீர்கள். PMCARES இரண்டுக்குமே நமது பங்களிப்பின் மதிப்பு இந்திய அளவில் 30 மில்லியன் டாலராகும். இது TRFக்கான நமது பங்களிப்பை பாதிக்கவில்லை. நாம் நமது இலக்கை அடைந்துவிட்டோம்.

கடந்த ஆண்டு நமது மண்டலத்தில் உள்ள அனைத்து ரோட்டரி பகுதிகளிலும் சேவைத்திட்டங்களை திறம்பட செயல்படுத்தியுள்ளோம். மரக்கன்று நடுவது, சூரிய மின்சக்தி, இரத்த வங்கி, டயாலிஸிஸ் மையங்கள், குழந்தைகளுக்கான இதய அறுவைச் சிகிச்சை, கிராமப்புறங்களில் கழிப்பறை கட்டுவது, வின்ஸ் திட்டம் என பல நல்ல திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளோம். குறிப்பாக RILM பணிகள் நமக்கு பெருமை சேர்க்கின்றன. ஏறக்குறைய 1,500 மணி நேர ஆடியோ காட்சிகளை நாம் இந்திய அரசுக்குத் தயாரித்து கொடுத்தோம். அவை தரமாக இருந்ததாக அரசே குறிப்பிட்டுள்ளது. எண்ணிக்கையில் சொல்ல வேண்டு மானால் மற்ற உள்ளடகத்தையும் சேர்த்து 400 மில்லியன் முறை அதைக் கேட்டுள்ளனர். நேபாளம் மற்றும் பாகிஸ்தானில் உள்ள ரோட்டரியும் இத்திட்டங்களை ஏற்று செயல்படுத்தியுள்ளன. இந்திய அரசு இப்போது ஆப்பிரிக்க நாடுகளுடன் இணைந்து செயல்பட்டு கற்றலுக்கான கூடுதல் விஷயங்களை தந்து உதவ முன் வந்துள்ளது.

இந்த தொற்று கோடரியை கூர்மைப்படுத்துவதற்கான நேரத்தையும் வாய்ப்பையும் கொடுத்துள்ளது. எனவே நாம் மிகப்பெரிய அளவிலான தொலைநோக்குத் திட்டங்களை கையில் எடுத்துச் செயல்பட முன் வரவேண்டும். தெற்காசியாவில் ரோட்டரி செய்துவரும் சேவை நடவடிக்கைகளும், வளர்ச்சியும் குறித்து நான் பெருமிதம் கொள்கிறேன். அடுத்த 18 மாதங்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொன்றை கொண்டுவருவதை சவலாக எடுத்துக் கொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன் என்றார் சேகர் மேத்தா.

உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதோடு, புதிய சங்கங்களை, சிறிய நகரங்களில் ரோட்டரி சங்கங்



*இன்ஸ்டிட்யூட் அமைப்பாளர்*
*RID கமல் சங்வி*

களை ஏற்படுத்த முன்வர வேண்டும். வாய்ப்புகள் நிறைய உள்ளன. கடந்த காலங்களில் நாம் நமது எல்லையை விரிவுபடுத்தி வந்தோம். இப்போது நமது செயல்திறனை அதிகரிப்பதற்கான நேரம் வந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது: நமது TRF பங்களிப்பையும் இதுவரை இல்லாத அளவு அதிகரிக்க வேண்டும். தற்போது அறங்காவலர் குழு தலைவராக இருக்கும் K R ரவீந்திரன், நமது மண்டலத்தைச் சேர்ந்தவர். வருகிற ஜூலை 1ம் தேதி யிலிருந்து ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் நமது மண்டலத்தைச் சேர்ந்தவராக இருப்பார். TRF பங்களிப்பில் நாம் எப்போதுமே சாதனை புரிந்து வருகிறோம். வருடாந்திர மற்றும் போலியோ ஒழிப்பில் நாம் கவனம் செலுத்தி வருவதால் மீண்டும் நமது பங்களிப்பை அதிகரித்து சாதனைபடைப்போம்.

நம்பிக்கைதான் நமது வாழ்வின் ஊக்க மருந்து. இதுதான் புதுமை, கண்டுபிடிப்புகள் மற்றும் திறமைக்கு வழிகாட்டுகிறது. தெற்காசியவை எழுத்தறிவு பெற்ற பகுதியாக மாற்றுவோம் என்ற நம்பிக்கை இருக்கிறது. மக்கள் சமூகத்திற்கு நல்ல குடிநீர், சுகாதாரம் மற்றும் அதிகாரம் கிடைக்க அரசுடன் இணைந்து செயல்படுவோம் என்றார் மேத்தா.

இன்ஸ்டிட்யூட் அமைப்பாளரும் ரோட்டரி இயக்குநருமான கமல் சங்வி தனது தொடக்க உரையில், கொரோனா தொற்று நமக்கு மிகுந்த வலியையும் வேதனையையும் கொடுத்தாலும் அதன் மூலம் சில நன்மைகளும் ஏற்பட்டுள்ளன. நாம் வீடுகளையும் சுற்றுப்புறங்களையும் சுத்தமாக வைத்திருக்கத் தொடங்கினோம். இயற்கையும் சாந்தமடைந்தது. நம்முடைய நடமாட்டமும் குறைந்தது. நமக்குத் தேவையான இடைவெளி கிடைத்தது. நீர் நாரைகள் மும்பையை நோக்கி படையெடுத்தன. ஜலந்தரிலிருந்து இமயமலையை பார்க்க முடிந்தது. தில்லியில் நீலவானம் தெரிந்தது. குடும்ப உறவுகள் வலுப்பெற்றன. குடும்பத்துடன் நேரத்தை செலவிடவும் இந்த தொற்று உதவியது.



*இன்ஸ்டிட்யூட் தலைவர்*
PDG *சஞ்சய் கேம்கா*

தொழில்நுட்பம் இந்த யதார்த்தத் தின் ஓர் அங்கமாக இருந்துடன் கல்வி கற்பித்தல் நடைமுறையில் முன்னேற்றத்தை புகுத்த உதவியது. கல்வியை டிஜிட்டல்மயமாக்குவது ஏற்கெனவே நடந்துகொண்டிருக்கிறது. ஆனால், கோவிட்-19 தொற்று நெருக்கடி மாற்றத்தை துரிதப்படுத்தி யுள்ளது. NCERT மற்றும் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்ச கத்துடன் இணைந்து உலகின் மிகப்பெரிய ஆன்லைன் கற்றல் திட்டத்தை RILM தொடங்கியுள்ளது. இதன் மூலம் இந்தியாவில் 15 கோடி குழந்தைகள் பயன்பெறுவர். இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உத்தரவாதம் அளிக்கும் சாக்ஷம் பாரத் என்னும் திறன் வளர்ப்புத் திட்டத்தை முன்னோடித் திட்டமாக RILM தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பட்டம் பெற்ற 51 இளைஞர்கள். அன்றையதினமே வேலைவாய்ப்புக்கான உத்தரவாதத்தை பெற்றனர். அடுத்தும் இன்னும் 100 இளைஞர்கள் பட்டம் பெறுவதற்கு தயாராகிறார்கள். இந்த ஆண்டு இந்த திட்டத்தின் கீழ் 5,000 பேருக்கு திறன் வளர்ப்புப் பயிற்சி அளிக்க திட்டமிட்டுள்ளோம்.


மெய்நிகர் மூலம் அதிக கூட்டங்கள் நடைபெற்றுள்ளன, தொடர்புகளும் அதிகரித்துள்ளன. உலகில் தேவைகள் முன்எப்போதையும் விட அதிகம். இது ஒரு செங்குத்தான மலையில் ஏறுவது போன்றது. ஆனால், மலை மீது இன்னும் கொஞ்சம் ஏறவேண்டும். நமது பயிற்சிக் குழுவினர் பல இடங்களைக் கடந்து இந்த ஒடிஸியை உருவாக்கியுள்ளனர். உலகின் மிகச் சிறந்த சாதனை யாளர்கள், தொழிலதிபர்கள், சிந்தனையாளர்கள், பேச்சாளர்கள் இதில் பங்கேற்றுள்ளனர். 14 தலைமை நிர்வாக அதிகாரிகள், கல்வியாளர்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், வழக்குரைஞர்கள், நடிகர்கள், கவிஞர்கள், வங்கியாளர்கள் உரையாற்றி இந்த கழகத்தை அறிவுக்களஞ்சியமாக மாற்றுவார்கள்.

பந்தயத்தின் இலக்கை எட்டும் இறுதிநிலைக்கு வந்துள்ள நிலையில் நமது மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. போலியோவை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான கடைசி தடை இன்னும் நீடிக்கிறது. அந்த தடைகளைக் கடந்து நாம் வெற்றியாளராக வருவோம் என்றார் கமல் சங்வி.

பயிற்சிக் கழகத்தின் தலைவரும் முன்னாள் மாவட்ட ஆளுநருமான சஞ்சய் கெம்கா தனது வரவேற்புரையில், பயிற்சிக்களத்தை மெய்நிகர் தளத்துக்கு மாற்றுவது மிகக் கடினமாக இருந்தது என்றாலும் அதை நாங்கள் சவாலாக ஏற்று சிறப்பாகச் செய்துமுடித்தோம். பேச்சாளர்களின் உரையை பங்கேற்பாளர்கள் அரங்கத்தில் இருந்து கேட்பது போன்ற உணர்வைத் தர வேண்டும் என்பதற்காக எங்களால் முடிந்தவரை சிறந்த தொழில் நுட்பத்தை வழங்கினோம். காட்சியமைப்புகளும் சிறப்பாக இருந்தன. Wild Ideas என்ற முற்றிலும் பின்தங்கிய பெண்களைக் கொண்ட அமைப்பு இயற்கையான முறையில் தயாரித்த பொருட்கள் இதில் பங்கேற்ற பிரதிநிதிகளுக்கு வழங்கப்படும் என்று கெம்கா மேலும் கூறினார்.

பயிற்சி வளாகத்தில் மெய்நிகர் முறையில் ஸ்டால்கள் அமைக்கப்பட்டிருந்தன. அதனை பங்கேற்பாளர்கள் பார்க்கவும் அவர் வலியுறுத்தினார்.

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி



வழங்குதல் என்பது வெறும் செயல் மட்டுமில்லை. அது ஒரு வாழ்க்கை முறை; 12ம் நூற்றாண்டைச் சேர்ந்த மைமோனிடெஸ் என்ற தத்துவ அறிஞர் ஸ்பெயினிலுள்ள கொர்டொபாவில் இவருடைய குடும்பத்தினரும் மதம் சார்ந்த துன்புறுத்தலிலிருந்து தப்புவதற்காக மொராக்கோவில் தஞ்சம் புகுந்தார்கள்.

மனித குலத்துக்கான அவருடைய மிகச் சிறந்த பரிசு, தன்னையே வழங்குதலைப்பற்றிய அவருடைய எண்ணங்களைப் பதிவுசெய்தது. அவருடைய மிகச் சிறந்த படைப்புகளில் ஒன்று, “தொண்டின் எட்டு நிலைகள்”. வழங்குதல் என்பதன் பொருளைப்பற்றியும், வழங்கும்படி நம்மை ஊக்குவிப்பது என்ன என்பது பற்றியும் இது நமக்குக் கற்றுத்தருகிறது.

மைமோனிடெஸ் ஏணியின் மிகக் கீழான படி, இரக்கத்தால் வழங்குவது அல்லது, விருப்பமில்லாமல் வழங்குவது. அதற்கு மேலே இருக்கிற படி, ஒருவர் வழங்க வேண்டியதைவிடக் குறைவாக வழங்குவது, ஆனால், அதை மகிழ்ச்சியாக வழங்குவது. ஐந்தாவது படியில் ஏறினால், யாராவது கேட்பதற்கு முன்னால் நீங்கள் வழங்குகிறீர்கள். ஏணியில் மேலும் ஏறிச் சென்றால், வழங்கியவர் யார் என்றே பெறுபவருக்குத் தெரியாத வழியில் ஒரு வழங்குதல் வருகிறது.


தொண்டின் எட்டாவது மற்றும் மிக உயர்ந்த நிலை, ஒருவருக்கு வரக்கூடிய துயரத்தை எதிர்பார்த்து, அதைத் தவிர்ப்பதற்காக வழங்குதல். நாம் இளம்பிள்ளைவாதத்துக்கு எதிரான தடுப்பு மருந்துகளைக் குழந்தைகளுக்கு அளிக்கும்போது, நோய் வருகிற சாத்தியம் உண்டு என்று நாம் எதிர்பார்க்கிறோம். மலேரியா அல்லது கர்ப்பப் பை வாய்ப் புற்றுநோய் நிகழ்வுகளைக் குறைக்கிற ரோட்டரி திட்டங்களைப் போன்ற பிற முயற்சிகளின்மூலமும் நாம் அவ்வாறு செய்கிறோம்.

ஒருவர் சம்பாதிக்க உதவக்கூடிய ஒரு தொழிலை அவருக்குக் கற்றுத்தரும்போது, நாம் எட்டாவது படிநிலையில் இருக்கிறோம். குறுங்கடனில் தொடங்கிக் கல்விவரையில், தன்னிறைவு என்னும் பரிசை வழங்குவதற்கு ரோட்டரி அறக்கட்டளை நமக்கு உதவுகிறது. இந்த நல்ல பணிகள் அனைத்தும் நமக்காகக் காத்திருக்கின்றன, புதிதாகப் பிறந்த குழந்தைகளை ஆதரித்தல், நீர் மூலங்களைத் தூய்மைப்படுத்துதல், Covid-19 நோய்ப்பரவலிலிருந்து மீளுதல் மற்றும் நாம் வழிநடத்தும் எண்ணற்ற மற்ற முயற்சிகளுக்கான பணிகளும் அதேபோல் காத்திருக்கின்றன.

பல ரோட்டரி உறுப்பினர்கள் மைமோனிடெஸ் ஏணியின் உச்சிக்கு ஏறுகிறார்கள் என்பதை நான் பெருமையுடன் கூறுகிறேன். அவர்களில் பலர், பெயர் குறிப்பிடாமலே இவ்வாறு செய்கிறார்கள். அவர்கள் யாராக இருந்தாலும் சரி, எந்தக் காரணத்துக்காக அவர்கள் தங்கள் பரிசுகளை அறக்கட்டளையுடன் பகிர்ந்துகொண்டாலும் சரி, நான் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன். உங்களுடைய ஒவ்வொரு நன்கொடையும், இன்னும் உயர்ந்த நிலையை எட்டுவதற்கு நமக்கு உதவுகிறது.



**K R ரவீந்திரன்**
**அறக்கட்டளை அறங்காவலர் தலைவர்**



தலைவர்கள் என்றமுறையில், நாம் நம்முடைய அறக்கட்டளைக்குக் கடமைப்பட்டிருக்கிறோம், TRFக்குப் பங்களிக்கும்படி மற்ற ரோட்டரியன்களை ஊக்குவிப்பது நம் கடமை. இளைஞர் ஒருவர் தன்னுடைய வீட்டில் குடியிருக்கிற முதியவர் ஒருவரை மிரட்டுகிறார், “வாடகை கொடுக்கா விட்டால் உங்களை வெளியேற்றிவிடுவேன்” என்கிறார். அந்த முதியவர் ஒரு கடை உரிமையாளர். “இப்போது நிலைமை சரியில்லை” என்று விளக்குகிறார். “தொழில் மந்தமாக உள்ளது. கொஞ்சம் கருணை காட்டுங்கள்” என்கிறார். ஆனால், வீட்டு உரிமையாளர் அதை முரட்டுத்தனமாக மறுத்து விடுகிறார்.

அன்று மாலை, வீட்டு உரிமையாளர் தன்னுடைய சகோதரியின் வீட்டில் இரவு உணவுக்குச் செல்கிறார். தன் சகோதரி சமைத்திருக்கும் விருந்தைப் பாராட்டுகிறார். ஆனால் உண்மையில், தன்னுடைய சகோதரிக்கு வேலை போய்விட்டது என்று அவர் தெரிந்துகொள்கிறார். “இந்த மேசையில் இருக்கும் இரவு உணவு முழுவதும், என்னுடைய மளிகைக் கடை உரிமை யாளருடைய கருணையான உதவியால் சமைக்கப்பட்டது தான்” என்கிறார் அவருடைய சகோதரி. இதைக் கேட்ட வீட்டு உரிமையாளர், “உனக்கு உதவிய அந்த நல்ல மனிதரை நான் சந்திக்கவேண்டுமே” என்கிறார்.

“கண்டிப்பாகச் சந்திக்கலாம், நான் அவரையும் இரவு உணவுக்கு அழைத்திருக்கிறேன்” என்கிறார் அவருடைய சகோதரி. நீங்கள் ஊகித்தது சரிதான். தன்னுடைய சொந்த வாடகையைத் தருவதற்குப் போதுமான பணம் இல்லாத மனிதர் ஒருவர், தன்னுடைய வழக்கமான வாடிக்கையாளர் ஒருவர் தற்போது கடினமான சூழ்நிலைகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார் என்பதால், அவருக்குக் கடனில் பொருட்களை வழங்கியுள்ளார்.

இதைக் கேட்ட வீட்டு உரிமையாளர் நாணம் கொள்கிறார், அவருடைய வாடகையைத் தள்ளுபடி செய்துவிடுகிறார். இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் விஷயம், “கொடுங்கள், பெறுவீர்கள்” என்கிற சொற்றொடர் மிக உண்மையானது. மிகவும் உறுதியற்ற நேரங்களில் மக்களுக்கு உதவுவதற்கு மிகச் சிறந்த வழி, அறக்கட்டளைக்கு வழங்கும் ஓர் எளிய பங்களிப்பு தானே. நினைவிருக்கட்டும், TRFக்கான பங்களிப்புகள் உலகில் நல்லவற்றைச் செய்யப் பயன்படுகின்றன.



**குலாம் வாஹன்வதி**
**TRF அறங்காவலர்**




# டிஜிட்டல் யுகத்தைத் தழுவுவோம்: ஹோல்கர் நாக்

ரஷீதா பகத்

கொரோனா தொற்றுப் பரவல் உலகம் முழுவதும் உள்ள மக்களுக்கு பல்வேறு துன்பங்களைக் கொடுத்தபோதிலும், ரோட்டரிக்கு அது பல்வேறு வாய்ப்புகளைக் கொடுத்துள்ளது என்று தான் சொல்ல வேண்டும். இந்தக்கூட்டம் மட்டும் அல்லாமல், மெய்நிகர் கூட்டங்களை நடத்தவும் வழிவகுத்தது. நம் முன் உள்ள சவால்களை எப்படி சந்திப்பது என்பது பற்றி விவாதிக்க அனைத்துத் தலைவர் களையும் ஒன்றிணைத்துள்ளதால் இது முக்கியம் வாய்ந்தது என்று ரோட்டரி மண்டலம் 4,5,6 மற்றும் 7-வது மண்டலங்களுக்கான GETS பட்டமளிப்பு விழா நிகழ்ச்சியில் உரையாற்றிய RI தலைவர் ஹோல்கர் நாக் கூறினார்.

இந்த நெருக்கடிக்கு முன்னரே, மக்கள் வெவ்வேறு வழிகளில் வெவ்வேறு நண்பர்களுடன் சந்தித்திருக்கிறார்கள் மற்றும் தொடர்பு கொண்டிருக் கிறார்கள். சமூக ஊடகங்களும், இணையதளத் தொடர்புகளும் ஏற்கெனவே இருந்தன. ஆனால், அவை இப்போது தான் அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளன. நாம் எல்லோரும் இப்போது மெய்நிகர் மூலம் வேலை செய்ய பழகிவிட்டோம். இதில் குறிப்பிடத்தக்கது என்னவெனில், உலகில் வேகமாக வளர்ந்து வரும் இளைய தலைமுறையினர் சேவை மனப்பான்மையிலும், தொடர்பு கொள்வதிலும் அதிக ஆர்வமாக இருக்கின்றனர்.

ஆனால், தலைமையேற்று வழி நடத்தும் தங்கள் நேரத்திற்காக காத்திருக்க அவர்கள் விரும்பவில்லை. சமூகத்தில் முக்கிய பங்காற்ற விரும்புகிறார்கள். ரோட்டரி அவர்களுக்கு சரியான தளத்தை அமைத்துத் தர முடியாவிட்டால், தாங்களாகவே தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு செயல்படுவதற்கான வாய்ப்புகளைத் தேடுவார்கள். இந்த உலகம் நமக்காக காத்திருக்காது. ரோட்டரியை மேம்படுத்துவதற்கும், வலுப்படுத்தவும், அதை மற்றவர்கள் ஏற்றுக்கொள்ளும் வகையிலும் இன்றைய உலகில் இணைந்து செயல்படும் வகையிலும் மாற்றியமைக்க இதுவே சரியான தருணமாகும்.

கோவிட்டுக்கு பிந்தைய உலகில் நம்முன் உள்ள சவால்களை ஏற்றுச் செயல்பட புதிதாக ஆளுநராகப் பதவியேற்க உள்ளோர் தயாராக வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்



*RI தலைவர் ஹோல்கர் நாக்*

ஹோல்கர் நாக். ரோட்டரியின் முக்கியமான மதிப்புகளான கூட்டுறவு, ஒருமைப்பாடு, தலைமைத்துவம், சேவை மனப்பான்மை மற்றும் பன்முகத்தன்மை ஆகியவை தொடர்ந்து நிலைத்திருக்கும். ஆனால், ரோட்டரியில் மாற்றம் வேண்டும். ரோட்டேரியன்கள் சிலர் பழையமாதிரி ரோட்டரி இல்லை என்று புகார் தெரிவித்தாலும் நாம் மாற்றத்தை மேற்கொண்டுதான் ஆக வேண்டும். நாம் மாறுவோம்.

டிஜிட்டல் யுகத்தை தழுவும் ஒரு அமைப்பாக நாம் மாறவேண்டும். நாம் செய்யும் எல்லாவற்றிலும் அது ஒரு பகுதியாக இருக்க வேண்டும். புதிய யுகத்திற்கு ஏற்றாற்போல் புதிய ரோட்டரியை உருவாக்குவது முக்கியமாகும். ரோட்டரி என்பது நாம் சேரும் ஒரு சங்கமாக இல்லாமல் அது போலியோ ஒழிப்பு மற்றும் சமூக நலன் கொண்ட பல்வேறு பெரிய மற்றும் வரலாற்றுத் திட்டங்களைச் செயல்படுத்தும் அமைப்பாகச் செயல்பட வேண்டும்.

### மாற்றத்திற்கான யோசனைகள்:

ரோட்டரி எப்படி மாறவேண்டும் என்பது குறித்து பல்வேறு யோசனைகளை அவர் முன்வைத்தார். உதாரணமாக புதிய மற்றும் வித்தியாசமான முறையில் சங்கத்தை உருவாக்கலாம். இந்த புதிய சங்கங்களை வழிநடத்துபவர்களாக இளைஞர்கள் இருக்க வேண்டும். புதிய அணுகுமுறைகளுக்கான வாய்ப்பை நாம் திறந்துவிட வேண்டும். ரோட்டரி மையப்பகுதியில் நாம் கவனம் செலுத்தி புதிய சங்கங்களை உருவாக்கலாம்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் பழைய மாணவர்களைக் கொண்டு புதிய சங்கத்தை ஏற்படுத்தலாம். புதிய சங்கங்கள் இதர நிறுவனங்களுடன் இணைந்து செயல்படலாம். அதற்கான

சாத்தியக்கூறுகளும், வாய்ப்புகளும் ஏராளமாக உள்ளன. இளம் ரோட்டேரியன்கள், ரோட்ராக்டர்கள் மற்றும் DGEக்கள் இந்த மாற்றத்துக் கான கட்டமைப்பாளர்களாக இருக்கத் தயாரா என்று கேட்டு நான் சவால் விடுகிறேன். இளைஞர்களின் ஈடுபாட்டுக்கும், செயல்பாட்டுக்கும் ஏற்ற வகையில் புதிய சிந்தனையுடன் புதிய வழிகளில் அவர்களை ரோட்டரிக்கு அழைப்பதற்கான வழியைத் தேட விரும்புகிறேன் என்றார்.

மேலும் பன்முகத்தன்மையை தழுவுவதன் அவசியத்தை கோடிட்டு காட்டி பேசிய ஹோல்கர் நாக், பன்முகத்தன்மைக்கான சர்வேதச அணுகுமுறை மிகவும் அவசியமானது என்று குறிப்பிட்டார். ஒவ்வொரு சங்கமும் கலாசாரத்துடன்கூடிய பன்முகத்தன்மையை தழுவுகிறதா என்பதை மாவட்டத் தலைவர்கள் உறுதி செய்யவேண்டும். இதன் முக்கிய அம்சம் என்னவெனில் ரோட்டரியில் எல்லா நிலைகளிலும் பெண்கள் அதிக அளவில் இடம்பெற வேண்டும். ஜெனிஃபர் ஜோன்ஸ் RI தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன். சேகர் மேத்தா, தலைவராகப் பணியாற்றும் காலத்தில் ரோட்டரி வாரியத்தில் நிர்வாக உறுப்பினர்களாக 9 பெண்கள் இடம்பெறுவார்கள். இது மிகப்பெரிய முன்னேற்றமாகும். இந்த நிலையை அனைத்து சங்கங்களிலும் காண வேண்டும்.

ரோட்டரி அதிக பெண் உறுப்பினர் களுடன் முன்னேறுவதை உறுதி செய்வது முக்கியம். ஒதுக்கப்பட்டு விட்டதாக நினைக்கும் மக்களைச் சென்றடைவதற்கும், ரோட்டரி குடும்பத்தில் தாங்களும் ஒரு அங்கம்தான் என அவர்கள் உணருவதற்குமான முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டும். ரோட்டரி அமைப்புக்குள் தலைமைத்துவத்தை உருவாக்குவதில் ஒவ்வொரு நிலை களிலும் திறமையான, சரியாக வழி நடத்திச் செல்லக்கூடிய நபர்களை அவர்களின் பின்னணியைப் பொருட் படுத்தாமல் நாம் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

ஒவ்வொரு ரோட்டரி சங்கமும் ஒரு திட்டத்தை வகுத்து புதிய கண்ணோட்டதுடன் செயல்பட வேண்டும். ஒவ்வொரு ரோட்டரி சங்கமும் ஆண்டுக்கு ஒரு முறையாவது உத்திகளை வகுப்பதற்கான கூட்டத்தை நடத்த வேண்டும். மேலும் உறுப்பினர்கள் ஐந்து ஆண்டுகளில் எங்கு இருக்க விரும்புகிறார்கள் என்று கேட்பதுடன் அவர்கள் தங்கள் உறுப்பினர்களுக்கு என்ன மதிப்பை கொண்டுவருகிறார்கள் என்றும் வரையறுக்க வேண்டும். ரோட்டரியின் தனித்துவம் என்ன என்பது ரோட்டேரியன்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். அதே நேரத்தில் மக்கள் சமூகத்தினர் மற்றும் ரோட்டரியில் சேர விரும்புபவர்களும் ரோட்டரியை பற்றிய நல்லெண்ணத்தை தெரிந்துகொள்ளச் செய்ய வேண்டும். ரோட்டேரியன்கள் இதை ஒரு சவாலாக ஏற்கவேண்டும்.




RID *கமல் சங்வி,* RIDE *மகேஷ் கோட்பாகி மற்றும் அவர் மனைவி அமீதா கோட்பாகி.*

RI இயக்குநர் கமல் சங்வி GETS தலைவர் மகேஷ் கோட்பாகிக்கு நன்றி தெரிவித்தார். மேலும் அவர் RIDE ஆவதற்கு முன்பே GETSஐ வழிநடத்த அவரைத் தேர்ந்தெடுத்ததாகவும் இந்த பயிற்சிதிட்டத்தை அவர் சிறப்பாகவும் முழுமையாகவும் ஏற்பாடு செய்துள்ளார். இதற்காக அவருக்கு நன்றி கூறுகிறேன் என்றார்.

புதிதாக பதவியேற்க உள்ள ஆளுநர்களிடம் உரையாற்றிய அவர், உங்கள் சமூகத்திலும், உங்கள் மாவட்டத்திலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த உங்களுக்கு அருமையான வாய்ப்பு கிடைத்துள்ளது. ரோட்டரி நம் ஒவ்வொருவருக்கும் கனவுகளை நனவாக்குவதற்கான வாய்ப்பைக் கொடுத்துள்ளது. பெரியதாக சிந்திக்க வாய்ப்பு கிடைத்துள்ளதால் நல்லது செய்வதன் மூலம் உலகில் மாற்றத்தை ஏற்படுத்துங்கள் என்றார்.

ஆளுநர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட மதிப்பு மிக்க ஆண்டை மிகச் சிறப்பாகப் பயன்படுத்துமாறு சங்வி வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார். நீங்கள் உங்கள் மாவட்டத்திலிருந்தும் சமூகத்தி லிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். நீங்கள் ரோட்டரியின் எதிர்காலத் தலைவர்கள் மட்டுமல்ல, சமூகத்துக்கும் தலைவர்கள். எனவே உங்கள்மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு ஏற்றவாறு பொறுப்புடன் செயல்படுங்கள். உங்களிடம் உள்ள தலைமைப் பொறுப்பை உயர்ந்த இடத்துக்கு எடுத்துச் செல்லுங்கள் என்றார்.

GETS மெய்நிகர் சந்திப்பில் பங்கேற்ற ஆளுநர்கள், வாழ்க்கைத் துணையுடன் தங்கள் பாரம்பரியப்படி வந்திருந்தனர். அவர்கள் அனைவருக்கு ஆன்லைன் மூலம் பட்டமளிப்புச் சான்றிதழ்களை RI தலைவர் ஹோல்கர் நாக் வழங்கினார்.

GETS தலைவர் மகேஷ்கோட்பாகி உரையாற்றுகையில், தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள ஆளுநர்கள் தங்களுக்குக் கிடைத்த வாய்ப்பை நன்றாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் இந்த ஆண்டு மீண்டும் திரும்பவராது என்றும் குறிப்பிட்டார். ■




# தலைமைப் பண்பு பாடங்கள்

ஜெய்ஸ்ரீ

DGEக்கள் DGNகளுக்கான பயிலரங்கங்கள் இரண்டும் இந்த ஆண்டு மெய்நிகர் முறையில் நடைபெற்ற ரோட்டரி மண்டல கழக நிகழ்ச்சிக்கு முன்னோடியாக இருந்தன. GETS, GNTS மற்றும் அவர்களின் துணைவியரின் அமர்வு ஜனவரி 7 முதல் 10 வரையிலான காலத்தில் நடந்தன. GET, GNTS தலைவர் RIDE மகேஷ் கோட்பகி மற்றும் அவரது குழுவினர் இந்த பயிற்சி நிகழ்வுகளை மறக்கமுடியாத, உள்வரும் தலைவர்களுக்கு பயனுள்ள வகையில் ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

### சேகரும் அவரை பின்தொடர்பவர்களும்

RI தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள சேகர் மேத்தா, DGEக் களுடன் பேசும் போது உங்கள் காலம் கடினமானது என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். உங்களைச் சுற்றியுள்ளவர்களுக்காக இந்த ஆண்டை அர்ப்பணிக்கவும். ஆனால், எப்போதும் குடும்பத்துக்கு முதலிடம் கொடுங்கள். போலியோ ஒழிப்புக்கும், உலகெங்கிலும் உள்ள லட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கையை மாற்றியமைப்பதற்கும் ஒரு பாரம்பரியத்தைக் கொண்ட, 115 ஆண்டுகள் பழமையான அமைப்பின் ஒரு பகுதியை நீங்கள் வழிநடத்துகிறீர்கள். ரோட்டரி என்னும் கிரீடத்தில் கோஹினூர் வைரம் பதித்தாற்போல் உள்ள ஒரு நாட்டைச் சேர்ந்தவர்கள் நீங்கள். எனவே உங்கள் கனவுகளும் திட்டங்களும் சிறப்பானதாக இருக்க வேண்டும். நான் தலைவராக இருக்கும் காலத்தில் நீங்கள் மாவட்ட ஆளுநராகப் பணியாற்றப் போகிறீர்கள் என்றார்.

DGEs மற்றும் DGNs தங்கள் மாவட்ட குழுவினரின் ஆதரவைப் பெற ஆலோசனை வழங்கினார். சேவையில் அவர்களை ஈடுபடுத் துங்கள். அதனால் ஏற்படும் பலன் களை பகிர்ந்துகொள்ளுங்கள். சங்கத்தலைவர்களின் ஈகோவை போக்குவதே மாவட்ட ஆளுநர்களின் பணி என்று எனது வழிகாட்டி அடிக்கடி என்னிடம் கூறுவார். அது உண்மை தான். ஒரு தலைவராக நீங்கள் வேலையை மற்றவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். எல்லா வற்றையும் நாமே செய்துவிடலாம் என்று நினைத்தால் தோல்விதான் ஏற்படும்.

தமது பேச்சின் இறுதியாக RI தலைவராக பதவியேற்க உள்ள சேகர் மேத்தா ஒன்றை புன்னகையுடன் குறிப்பிட்டு எச்சரித்தார். உங்கள் தலைவருக்கு பிடித்த முழக்கம் ஒன்று உள்ளது. அது என்னவெனில் ஒருவேலையை முடிக்கும்வரை நான் தூங்கமாட்டேன், உங்களையும் தூங்க விடமாட்டேன். இந்த ஒரு வருடத்திற்கு நாம் மற்றவர்களுக்காக வாழ்வோம். கழுகாக இருங்கள். கழுகு இருக்கும் இடத்துக்கு யாரும் நெருங்காத வகையில் உயரத்தில் இருங்கள். உங்கள் ஆண்டின் இறுதியில் நீங்கள் திரும்பிப் பார்த்து, அவை என் வாழ்க்கையின் அருமையான 365 நாட்கள் என்று சொல்லுவீர்கள்.

ஆளுநராகப் பதவியேற்பவர்களின் துணைவியிடம் உரையாற்றிய அவர், நீங்களும் ரோட்டரிக்கு சேவை செய்வதில் முழுமனதுடன் ஈடுபட வேண்டும். நீங்கள் கொடுக்கும் உந்துதல் சக்தி மூலம் உங்கள் துணைவர் ஒரு நல்ல ஆளுநராகச் செயல்பட முடியும் என்றார்.

### நல்லெண்ணத்தை பெறவேண்டும்

இன்ஸ்டிட்யூட் அமைப்பாளர் RID கமல் சங்வி DGE மற்றும் DGNகளிடையே பேசுகையில், உங்கள் தரத்தை உயர்த்திக் கொள்ளுங்கள். உங்கள் அணியின் நம்பிக்கையை வெல்வதற்கு முன்பு உங்களை நீங்கள் வெல்ல வேண்டும். உங்கள் சேவை நடவடிக்கைகளில் ஆர்வமுடன் இருங்கள். ரோட்டரி உறுப்பினர்களைச் சேர்ப்பதிலும், TRF பங்களிப்பை அதிகரிப்பதிலும் பேராசை கொள்ளுங்கள். உங்களுக்கு என சொந்த வரையறைகளை உருவாக்கி துணிந்து நடைபோடுங்கள். உங்களைப் பற்றிய நல்லெண்ணத்தை உருவாக்குங்கள். அது முக்கிய மானது. ரோட்டேரியன்கள்



*GETS மற்றும் GNTS தலைவர் RIDE மகேஷ் கோட்பாகி*



RIPE *சேகர் மேத்தா*

தங்களது செயல்பாடுகளையும் அனுபவங் களையும் சமூக வளைத்தளங்களில் பதிவிடலாம். இது மற்றவர்களுக்கு கதை சொல் வதற்காகவோ அல்லது பதக்கங்கள் பெறவோ அல்லது மற்றவர்களையும் இதுபோன்ற சேவைகளை ஈடுபடுத்த தூண்டுவதற்காகத்தான். கண் சிகிச்சை முகாம் நடத்தினால், முகாமிற்கு பின் அந்தச் செய்தியை வெளியிடுவது முக்கியமல்ல, முகாம் நடத்தும் முன்னரே அந்தச் செய்தி பலரையும் சென்றடைய வேண்டும். எங்களுடன் இணைந்து எங்களுக்கு உதவி செய்ய முன்வருபவர்களை வரவேற்கிறோம் என்று எழுதுங்கள். அப்படிச் செய்தால் மக்கள் உங்களுடன் இணைந்து செயல்பட முன்வருவார்கள். சமூகத்தில் நம்மை பற்றிய ஒரு நல்லெண்ணத்தை ஏற்படுத்த வேண்டும். இதன் மூலம் புதிய உறுப்பினர்களை நாம் ஈர்க்க முடியும், இருப்பவர்களையும் தக்கவைக்க முடியும். ரோட்டரி வளர வேண்டுமானால் இவை இரண்டும் முக்கியம் என்றார்.

பயிற்சி கூட்டத்தின் தலைவர் சஞ்சய் கெம்கா DGE, DGNகளை வரவேற்றுப் பேசினார். அவர் கூறுகையில், இந்த பயிலரங்கில் கற்றுக் கொண்டதை வைத்து அனைவரும் உயரத்தை அடைய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். RIDE கோட்பாகி பேசுகையில், இந்த ஆண்டு மிகவும் சவால்கள் நிறைந்த ஆண்டாக இருக்கும். பயணக்கட்டுப்பாடுகள் உள்ள நிலையில் மாவட்டத் தலைவர் களுக்கு பெரும் பணிச்சுமை இருக்கும் என்றார். முன்பே திட்டமிட்ட படி நாம் கொச்சியில் சந்திக்க முடியவில்லை என்றாலும், நீங்கள் இந்த மெய்நிகர் சந்திப்பில் கற்றுக்கொண்டதை வாழ்நாள் வரை மறக்காமல் இருப்பதுடன் உயரத்துக்கு செல்வீர்கள் என்று நான் உறுதியளிக்கிறேன் என்றார்.

### அறக்கட்டளையை ஆதரியுங்கள்.

TRF வழங்கிய மகத்தான ஆதரவை குறிப்பிட்டு RID பரத் பாண்ட்யா பேசுகையில், கடந்த 9 மாதங்கள் இருள் சூழ்ந்து துயரமாக இருந்த காலத்தில் TRF நமக்கு நம்பிக்கை ஒளியாக இருந்ததை சுட்டிக்காட்டினார். இந்த இருள் சூழ்ந்த விரக்தியான காலத்திலும் ரோட்டேரியன்கள் பல்வேறு பணிகளில் ஈடுபட்டு, TRFக்கு நிதி எழுப்புவதில் ஆதரவாக இருந்தனர். சர்வதேச அமைதிக்கு தனிப்பட்ட முறையில் நம்மால் ஏதும் செய்யமுடியாமல் போகலாம். ஆனால், அறக்கட்டளை நாம் கூட்டாக பங்களிப்புச் செய்ய பலவிதங்களில் உதவியது. TRFன் நாளைய வெற்றிக்கு நம்முடைய இன்றைய ஆதரவு தேவை என்றார்.

வருடாந்திர மற்றும் போலியோ நிதிகளுக்கு அதிக நிதிவழங்க மாவட்டத் தலைவர்கள் ஊக்குவிக்க வேண்டும். சர்வதேச மானிய உதவிக்கான தேவை அதிகரித்துள்ள நிலையில் வருடாந்திர நிதித் தேவையிலும் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும். இந்த நிதியை வளர்ப்பது முக்கியம். இல்லையெனில் சர்வதேச மானிய உதவி என்பது நீர்த்துப்போய்விடும். எனவே அனைத்து ரோட்டேரியன்களும் அறக்கட்டளைக்கு தங்களால் இயன்ற நிதியுதவியைச் செய்ய மாவட்டத் தலைவர்கள் வலியுறுத்த வேண்டும் என்றார்.

### உறுப்பினர்கள் வளர்ச்சி

RIDE A S வெங்கடேஷ் மற்றும் PDG வாட்லாமணி இருவரும் உள்வரும் தலைவர்களிடம், உறுப் பினர்கள் வளர்ச்சியின் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்தினர். கடந்த ஆண்டு உறுப்பினர் வளர்ச்சி மூன்று அல்லது 5 சதவீதமாகவே இருந்தது. இது சிறிய வளர்ச்சிதான். அதில் நாம் திருப்தியடைந்தோம். ஆனால், நாம் சிந்தித்து செயல்பட வேண்டிய நேரம் வந்துவிட்டது. நாம் மீண்டும் மீண்டும் ஒரே காரியத்தைச் செய்யாமல் வித்தியாசமாக ஏதாவது செய்ய வேண்டும். நமது உறுப்பினர் எண்ணிக்கை பெருமளவில் அதிகரிக்க வேண்டும் என்றார் வெங்கடேஷ்.

உங்கள் பகுதியில் மக்கள் தொகை என்னவென்று பாருங்கள். என்னுடைய மாவட்டத்தின் மக்கள் தொகை 1.5 கோடி என்றுகூட நீங்கள் சொல்லலாம். நம்மால் 10,000 உறுப்பினர்களைக் கொண்டுவர முடியுமா என்று பார்க்க வேண்டும். இதுவரை 5 அல்லது 10 சதவீத வளர்ச்சிதான் என்று இருந்தது. நமக்கு முன்னால் இருந்தவர்கள் என்ன செய்தார்கள் என்று பார்க்காமல் நமது முழுத்திறமையையும் வெளிப் படுத்தி செயல்பட வேண்டும். அப்போதுதான் நாம் இலக்கை அடைய முடியும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் அதிக உறுப்பினர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது எனில் மருத்து வர்கள் அல்லது வழக்குரைஞர்கள் அமைப்பைக் கொண்டு புதிய சங்கங்களை உருவாக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

வளர்ந்து வரும் சங்கங்களின் வளர்ச்சியின் வடிவத்தை ஆய்வு



RIDE A S *வெங்கடேஷ்*

## வாழ்த்துணைகளுக்கான அமர்வு



Dr அமிதா கோட்பாகி

*RIDE கோட்பகியின் துணைவியார் Dr அமிதா இந்நிகழ்ச்சிக்கு தலைமை வகித்தார். சோனால் சங்வி நிகழ்ச்சி அமைப்பாளராகச் செயல்பட்டார். நான்கு நாட்களிலும் வாழ்க்கை துணைகளுக்கான இந்த நிகழ்ச்சியை இருவரும் சுவாரஸ்யமாக கொண்டு சென்றனர். இந்த மெய்நிகர் அமர்வில் வாழ்க்கை துணைவர்கள் தங்கள் நலன்களைப் பகிர்ந்து கொண்டனர். தங்கள் பிராந்தியத்தின் சிறப்புகளை எடுத்துரைத்தனர். ராஷி மேத்தா, தங்கள் துணைவர்கள் தலைமையேற்கும் ஆண்டில் துணைவிகள் தீவிரமாகப் பங்கேற்று அவர்களுக்கு உந்துதல் சக்தியை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.*

*மெய்நிகர் பயன்பாடு குறித்து RIDE வெங்கடேஷின் துணைவியார் வினிதா விரிவாக எடுத்துக் கூறினார். இது எங்களுக்கு புதிய திறனை ஏற்படுத்தி கொடுத்துள்ளது. தேவைப் படும் போது புதியனவற்றை கற்றுக் கொள்ள இது ஒரு சான்றாக உள்ளது என்றார்.*

*நீங்கள் உற்சாகமான தலைவர்கள். உங்கள் துணைவர்களை ஊக்குவியுங்கள். உங்கள் கருத்து களை அவர்களிடம் பகிர்ந்து கொள்வதில் வெட்கப்பட வேண்டாம். யாருக்குத் தெரியும்? நீங்கள் சொல்வது உங்கள் மாவட்டத்துக்கு சிறந்த யோசனையாக இருக்கலாம் என்றார் டாக்டர் மாதவி பாண்ட்யா.*

செய்ய வேண்டும். அது எவ்வாறு இயக்கப்பட்டது என்றும் பார்க்க வேண்டும். 20 சதவீத உறுப்பினர்கள் மட்டுமே தலா ஒரு உறுப்பினரைக் கொண்டுவந்திருப்பதை நீங்கள் கவனிக்கலாம். சமூக வலைத்தளங்கள் மூலம் புதிய உறுப்பினர்களைச் சேர்க்க நாம் முயற்சிகள் மேற் கொள்ள வேண்டும். நான் ஒரு புதிய உறுப்பினரை ரோட்டரிக்கு கொண்டுவந்துவிட்டேன். நீங்கள் கொண்டுவந்து விட்டீர்களா? என்று கேள்வி எழுப்பி மற்றவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக ரோட்டரி உறுப்பினர் என்கிற சின்னத்தை நாம் கூட்டங்களில் அணிவதுடன் மட்டுமல்லாமல், அதற்கு வெளியேயும் அணிந்து கொள்ள வேண்டும். இதன் மூலம் புதிதாக அறிமுகமாகும் நபருக்கு ரோட்டரியைப் பற்றி விளக்க உங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும். அதன் பின் அவருக்கு ஒரு ஈர்ப்பு ஏற்பட்டு ரோட்டரியில் இணைய முடியும் என்றும் குறிப்பிட்டார்.

மாவட்ட அளவில் உறுப்பினர்களை அதிகரிக்கவும், இருக்கும் உறுப்பி னர்களைத் தக்கவைக்கவும் மற்றும் புதிய உறுப்பினர்களை கொண்டுவரும் ரோட்டேரியன்களை அங்கீகரிக்கவும் தனிக்குழுக்களை உருவாக்கலாம் என்று PDG வாட்லாமணி பரிந் துரைத்தார். பெரிய, பெரிய அடுக்கு மாடி குடியிருப்புகளில் வசிக்கும் உயர் வகுப்பினரைச் சந்தித்து அவர்களுக்குள்ளாகவே ஒரு சங்கத்தை ஏற்படுத்தச் செய்யலாம். அவை நம்மிடையே பிணைப்பை ஏற்படுத்தும். ஆர்வம் உள்ள இளைஞர்களால் புதிய சங்கத்தை ஏற்படுத்த முடியும். கிரிக்கெட் சங்கம், யோகா சங்கம் என்றுகூட ஏற்படுத்தி ரோட்டரியுடன் இணைய வைக்கலாம். இப்படி பல வாய்ப்புகள் உள்ளன என்றார்.

### ரோட்டரி அறக்கட்டளை மற்றும் போலியோ

TRF அறக்கட்டளை உறுப்பினரான கென்யாவைச் சேர்ந்த சீதா மானெக் பேசுகையில், உள்வரும் தலைவர்கள், போலியோ ஒழிப்பு நடவடிக்கையில் தங்கள் கவனத்தை செலுத்தாமல் இருந்துவிட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார். நாம் இது வரை கடினமாக உழைத்துள்ளோம். போலியோ ஒழிப்பின் கடைசி கட்டத்தில் இருக்கிறோம். இதில் நாம் வெற்றிபெறும் காலம் வெகுதூரத்தில் இல்லை என்றும் அவர் குறிப் பிட்டார். ஆப்பிரிக்காவில் போலியோ முற்றிலும் ஒழிக்கப் பட்டு விட்டதாக உலக சுகாதார நிறுவனம் சான்றிதழ் அளித்துள்ளதை குறிப்பிட்ட அவர், போலியோ இல்லாத இந்தியா என்ற அறிவிப்புதான் ஆப்பிரிக்காவுக்கு தூண்டுகோலாக இருந்தது. பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் போலியோ ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு இது புத்துணர்ச்சி அளிப்பதாக இருக்கும். இந்த இரண்டு நாடுகளும் போலியோவிலிருந்து விடுபட்டு விட்டால் உலகில் போலியோ நோய் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டு விடும் என்று கூறிய அவர், உள்வரும் தலைவர்கள் தங்கள் DDFல் 20 சத வீதத்தை போலியோ ஒழிப்பு நிதியாக அளிக்க முன்வரவேண்டும் என்று வலியுறுத்தினார்.

TRF அறக்கட்டளை உறுப்பினர் குலாம் வாஹன்வதி, சங்கத்தின் தலைவர்களுக்கும் மாவட்ட குழுவினருக்கும் வலுவான தொடர்பு இருக்க வேண்டும் என்றார். உலகளாவிய மானிய திட்டமாக இருந்தாலும் அல்லது சங்கத்தின் திட்டமாக இருந்தாலும் நீங்கள் அதைச் செய்ய விரும்புவதால் ஒரு சேவை



RID பரத் பாண்ட்யா



TRF *அறங்காவலர்*
*குலாம் வஹன்வதி*

திட்டத்தை செய்ய வேண்டாம். எந்த ஒரு திட்டமாக இருந்தாலும் அதை முறையாக மதிப்பீடு செய்து அதற்கு உங்கள் மாவட்ட அறக்கட்டளைக் குழு மற்றும் தொழில்நுட்ப பிரிவின் உதவியை நாடி ஆய்வு செய்து தொடருங்கள் என்றார்.

TRF தொழில்நுட்ப பிரிவின் தலைவரும் PRIDயுமான மனோஜ் தேசாய் பேசுகையில், அறக்கட்டளை உலகளாவிய மானியத் திட்டங்களை எப்படி மதிப்பீடு செய்கிறது என்று விளக்கினார். 200 தொழில்முறை மருத்துவர்கள், 150 பட்டயக் கணக்காளர்கள், 110 வேளாண் மற்றும் பொருளாதார நிபுணர்கள், 100 சிவில் பொறியாளர்கள், சுகாதார நிபுணர்கள், சுகாதார மேம்பாட்டு ஆய்வாளர்கள், 50 கல்வியாளர்கள் மற்றும் 40 அமைதிக்கான மத்தியஸ்தர்கள் என 70 நாடுகளைச் சேர்ந்த 700 பேர் எங்களிடம் உள்ளனர். இவர்கள் சங்கங்களுக்கும் மாவட்ட குழுவினருக்கும் நிதி நிர்வாகம், மானியத் திட்டம் போன்றவற்றுக்கு உதவ முடியும். உங்கள் மாவட்டத்தில் உள்ள தொழில்நுட்ப பிரிவினர் உங்கள் வெற்றிக்கு முக்கிய பங்களிக்க முடியும். மானிய உதவித் திட்டங்களுக்கு விண்ணப்பிக்கும் போது அவர்களின் நிபுணத்துவத்தை பயன்படுத்திக் கொண்டால் மானியத் திட்டங்களுக்கு ஒப்புதல் பெறுவது எளிதாக இருக்கும் என்றார்.

### WinS திட்டம்

PRID P T பிரபாகர், WinS திட்டத்தின் தோற்றம் மற்றும் இதுவரை அதன் சாதனைகள் குறித்து பேசினார். கடந்த ஐந்து ஆண்டுகளில் நாங்கள் 34,000 பள்ளிகளில் உள்ள சுமார் 1 கோடி குழந்தைகளுக்கு கை கழுவுவது உள்ளிட்ட சுகாதாரமாக இருப்பது எப்படி என்று கற்பித்துள்ளோம். இப்போது அந்த பழக்கம் அவர்களை கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாக்கும். மேலும் பல பள்ளிகளில் இத்திட்டத்தைச் செயல்படுத்த மாவட்டத் தலைவர்கள் முன்வர வேண்டும் என்று வலியுறுத்தினார்.■

# UP முதல்வர் RC கோரக்பூருக்கு பாராட்டு

ரோட்டரி செய்திக்குழு

கோரக்பூரிலுள்ள தொண்டு மருத்துவ மனையாகிய குரு ஸ்ரீ கோரக்நாத் சிகித்ஸாலயாவுக்கு RC கோரக்பூர், RID 3120 மருத்துவக் கருவிகளை வழங்கியது. இந்த மனிதாபிமானச் சேவைகளுக்காக, உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யாநாத் இந்தச் சங்கத்தைப் பாராட்டினார்.

இந்த ஆண்டு, இந்தச் சங்கத்தின் பிளாட்டின ஆண்டுவிழா ஆகும். இதைக் கொண்டாடுவதற்காக, ஒரு பன்னாட்டு நல்கையின் வழியாக ஓர் X-ray இயந்திரம் (ரூ.54.75 லட்சம்) மற்றும் ஓர் டாப்ளர் (ரூ.40 லட்சம்) ஆகியவற்றை இந்தச் சங்கம் நன்கொடையாக வழங்கியது.

2003இலிருந்தே இச்சங்கம் இந்த மருத்து வமனையுடன் இணைந்து செயல்பட்டுவருகிறது. அப்போது, கிராமப்புறப் பகுதிகளில் மருத்துவ முகாம்களை நடத்துவதற்காக ஒரு நடமாடும் மருந்தகத்தை இந்தச் சங்கம் இந்த மருத்துவமனைக்கு வழங்கியது.

DG கருணேஷ் குமார் ஸ்ரீவஸ்தவாவும் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டார். மாவட்ட CSR தலைவர் PDG அனூப் அக்ரவால் பேசுகையில், டோயோ எஞ்சினியரிங் இந்தியா மற்றும் ரோட்டரி அறக்கட்டளையின் பங்களிப்புகள்மூலம் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டது என்றார். பன்னாட்டு நல்கைகளின் மூலம் இரண்டு மகிழ்ச்சிப் பள்ளிகள் திட்டங்களும் (26 பள்ளிகள்) செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் விளக்கினார்.■



UP*முதல்வர் யோகி ஆதித்யநாத்,* DG *கருணேஷ் ஸ்ரீவஸ்தவா மற்றும் சங்கத்தினர் கோரக்பூர் மருத்துவமனையில்.*




# “கொவிட்” நம்பிக்கை அளிக்கிறது: அறக்கட்டளை தலைவர் ரவீந்திரன்

ரஷீதா பகத்

தொற்று ஏற்பட்டால் ஒரே நேரத்தில் எல்லோரும் பாதிக்கப்படுகிறார்கள். அதாவது நமக்கு உதவி செய்வதற்கு யாரும் இல்லை. 2021ல் கொரோனாவுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்று நம்புகிறோம் என்று TRF அறக் கட்டளைத் தலைவர் K R ரவீந்திரன், ஒடிஸி மெய்நிகர் மண்டல கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

வரலாற்றை உற்றுநோக்கினால், பிளேக்கும் இதர தொற்று நோய்களும் மனிதகுலத்துக்கு பேரழிவை ஏற்படுத்தின என்பது தெரியவரும். ஆனால், அவை ஏற்படுத்திய அனைத்து மாற்றங்களும் மோசமானவை அல்ல. பெரிகிளீன் ஏதென்ஸ் பிளேக் நோயால் மிகவும் பலவீனம் அடைந்தது. கிறிஸ்து பிறப்பதற்கு முன் 430ம் ஆண்டில் நடந்த போரில் ஸ்பார்டாவிடம் தோற்றுப்போனது. ஆனால், இந்தத் தோல்வி ஜனநாயகத்தில் மாற்றத்தைக் கொண்டுவந்தது. இதன் மூலம் சாதாரண குடிமக்களும் வாக்களிக்கும் அதிகாரம் பெற்றதை உலகம் கண்டது.

14ம் நூற்றாண்டின் தொற்றுநோய் ஐரோப்பாவின் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கை அழித்தது. ஆனால், அது நிலப்பிரபுத்துவத்துக்கும் முடிவு கட்டியது. நாம் இப்போது கொவிட் தொற்றை முறியடிக்கச் செய்வது ஒன்றும் புதிது அல்ல. 14ம் நூற்றாண்டின் தொற்றினால் ஏற்பட்ட மரணங்களுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் தோன்றியது தான் முகக்கவசம். தனிமைப் படுத்துதல், தனித்து இருத்தல், சமூக இடைவெளியை பின்பற்றுதல் ஆகியவை.

அதேபோல தொற்றுக்கான வேர்களைக் கண்டுபிடிப்பது 1918 ஆம் ஆண்டில் ஸ்பானிஷ் ப்ளூ உருவானபோதுதான். அப்போது சுமார் 50 மில்லியன் பேர் கொல்லப்பட்டனர். இது பாலியல் தொழிலாளர்கள் மூலம் பரவுகிறதா என்று கண்காணிக்கப் பட்டது.

ஆனால், உலகம் அவற்றிலிருந்து விரைவில் மீண்டுவந்தது. 1919ம் ஆண்டு ரோட்டரி வடிவில் சேவை அமைப்பு உருவானது. அது உலகம் முழுவதும் வியாபித்தது. இன்று மனச்சோர்வு அடைந்த நேரத்தில் குழப்பத்தை செய்தியாகவும், சோதனைகளை அத்தாட்சியாகவும், துன்பத்தை வெற்றியாகவும், பாதிக்கப் பட்டவரை மீண்டவராகவும் மாற்ற முடியும் என்பதை அறிவோம். என்றார் ரவீந்திரன்.

போலியோ ஆப்பிரிக்கா விலிருந்து



ஒழிக்கப்பட்டாலும், இன்னும் பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் அதற்கு முடிவு கட்ட வேண்டியுள்ளது. மேலும் 40க்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்க வேண்டியுள்ளது. மேலும் ரோட்டரியினர் 70 நாடுகளில் வைரஸ் பதுங்கியிருக்கிறதா என்பதை கண்காணிக்கப்பதுடன் அவை இல்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டியுள்ளது. எனவே நமது அறக்கட்டளைக்கு ஆண்டுக்கு $50 மில்லியன் என்ற இலக்கை நாம் எட்டியாக வேண்டும். அப்போது தான் 2: 1 என்ற அளவில் கேட்ஸ் அறக்கட்டளையால் 2023-வரை கிடைக்கும் நிதிக்கு இணையாக இருக்கும் என்றார் அவர்.

### TRFன் விரைவு நடவடிக்கை:

கோவிட் தொற்றால் ஏற்பட்ட பாதிப்புக்கு அறக்கட்டளை எப்படி விரைந்து நடவடிக்கை எடுத்தது என்பதை பட்டியலிட்டார் ரவீந்திரன். தொற்றுக்கு எங்கள் உடனடி நடவடிக்கை சிறப்பாக இருந்தது. உலகெங்கிலும் உள்ள ஆயிரக் கணக்கான ரோட்டரி சங்கங்கள் மூலம் மக்களுக்கு நிவாரணம் கிடைக்க விரைவாகவும், பரவலாகவும் தாக்கத்தை ஏற்படுத்தவும் $30 மில்லியன் வழங்கினோம்.

கடந்த ஆண்டு ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் மட்டும் அங்கீகரிக்கப்பட்ட மானிய உதவியாக $48 மில்லியன் வழங்கியுள்ளோம். இந்த இரண்டு மாதங்களில் மட்டும் 715 மானியங்களுக்கு நிதியுதவி அளித்துள்ளோம். இதுவே கடந்த ஆண்டு 271 ஆக இருந்தது. USAID அமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தி கூட்டாண்மையை உருவாக்கினோம். இதன் மூலம் கோவிட்-19 தொற்றால் பாதிக்கப் பட்ட இத்தாலிய சமூகத் தினருக்கு நிவாரண உதவிகளுக்காக அவர்கள் $5 மில்லியன் எங்களுக்கு வழங்கினர்.

### அடுத்தது என்ன?

கோவிட்டுக்கு பிந்தைய உலகில் ரோட்டரி எதிர்கொள்ளும் சவால் என்னவெனில் கற்றலை விரிவு படுத்துவதும் நிறுவனமயமாக்குவதும் ஆகும் என்று ரவீந்திரன் குறிப்பிட்டார்.

கோவிட்டுக்கு பிந்தைய உலகில் TRF தலைமை எப்படித் தயாராகி வருகிறது என்பதை அவர் விளக்கினார்.

- TRF தனது நிலையான நிர்வாகச் செலவுகளை குறைக்கும் நடவடிக் கையில் இறங்கியுள்ளது. மேலும் நமது இயக்கத்தை பாதுகாப்பதிலும் கவனம் செலுத்தி வருகிறது.
- பொது மக்களின் எண்ணத்திற்கு ஏற்ப TRF தனது சேவைகளை மாற்றியமைத்து வருகிறது. சுற்றுச்சூழலை நமது ஏழாவது பகுதியாக கவனத்தில் கொண்டுள்ளது.
- USAID போலவே இதர வெளிப்புற கூட்டாண்மையையும் நாங்கள் தேடி வருகிறோம். நாங்கள் 2 மில்லியன் டாலர் வரை வழங்கத் தயாராக இருக்கிறோம். ரோட்டரி மீது நம்பிக்கை வைத்துள்ள இதர கூட்டாண்மையாளர்களும் அதே அளவுக்கு நிதி அளிக்க முன்வர வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.
- கோவிட்-19 தடுப்பூசிகளை விநியோகிப்பதில் அறக்கட்டளை ஒரு முக்கியப் பங்காற்ற முடிவு செய்துள்ளது. குறிப்பாக பற்றாக்குறை, திறமையின்மை மற்றும் அறியாமை நிலவும் இடங்களில் கவனம் செலுத்த விரும்புகிறோம்.

கடந்த ஆண்டு மே மாதம் பெரு நன்கொடையாளர்கள் கொடுத்த மூலதனத்தின் அளவு மட்டும் உலக அளவில் $10.3 பில்லியன். சாதாரண சூழ்நிலைகளில் TRF இந்த ஆண்டு $410 மில்லியன் இலக்காக நிர்ணயித் துள்ளது. அதன் விவரம் வருமாறு:

- போலியோவிற்கு $50 மில்லியன். (கேட்ஸ் அறக்கட்டளை $100 மில்லியன்).
- வருடாந்திர நிதிக்கு $135 மில்லியன்.
- அறக்கட்டளை நிதி $85 மில்லியன்.
- இதர நன்கொடைகளுக்கு $40 மில்லியன்.
- இவை எல்லாவற்றையும் சேர்த்தால் மொத்தம் $410 மில்லியன்.

வருடாந்திர சவால்களைத் தவிர TRFன் இடைக்கால இலக்கு 2.025 பில்லியன் டாலர் நிகர சொத்துகள் மற்றும் 2025க்கான எதிர்பார்ப்புகள் அப்படியே உள்ளன. நாங்கள் $1 பில்லியன் நிகர சொத்துக் களை அடையும்போது வருடாந்திர அடிப்படையிலான செலவழிக்கும் நிதி $40 முதல் $50 மில்லியன் வரை இருக்கும். நாங்கள் சீரான பாதையில் இருக்கிறோம் என்றார்.

ஆனால், கொரோனா தொற்றுப் பரவல் உலகப் பொருளாதாரத்தை மந்தநிலைக்குக் கொண்டு சென்று விட்டது. இதனால் அரசாங்கங்கள் சமூக சேவைகளுக்கு செலவு செய்ய முடியவில்லை. வறுமையும், வேலையின்மையும் உச்சத்துக்கு சென்று விட்டன. இந்த நிலைமையில் ரோட்டரியின் சேவை அதிகம் தேவைப்படும் என்று நம்பிக்கையுடன் தெரிவித்தார். ஏனெனில் ஒரு டஜனுக்கும் மேலான நாடுகளில் சமூகத்தில் உள்ளவர்களின் குரலுக்கு நாம்தான் ஆதரவளித்தோம். கடுமையாக நோய்வாய்ப்பட்ட குழந்தைகளை பெற்றோரின் வேண்டுகோளுக்கு இணங்க ரோட்டரி மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை பெற உதவினோம். சிறுநீரக நோய் பாதிக்காமல் இருக்க கிராம மக்களுக்கு ரோட்டரி திட்டங்கள் மூலம் பாதுகாப்பான குடிநீரை வழங்கினோம். பூப்பெய்தி பெண்கள் (பருவ வயது பெண்கள்) பள்ளியை விட்டு நிற்கும் நிலை ஏற்பட்டபோது அவர்களுக்கு என பள்ளிகளில் தனி கழிப்பறைகளை கட்டிக் கொடுத்தோம். புற்றுநோய் மற்றும் இதர நோய்களால் பாதிக்கப் பட்டவர்களுக்கு சிகிச்சை பெற்று சாவின் பிடியிலிருந்து மீள்வதற்கு உதவி செய்தோம். இதற்காக ரோட்டரிக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும்.

ஒவ்வொரு செயலுக்கும் எதிர் செயல் உண்டு. நாம் மதிப்புடன் வாழவும், நம் விருப்பங்களை வெளிப்படுத்தவும், நமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் நமக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது.

ரோட்டரி மற்றும் ரோட்டரி அறக்கட்டளையை ரோட்டரியினர் முன்னெடுத்துச் சென்று புதிய உலகைப் படைப்பதற்கு நல்ல வாய்ப்பு கிடைத்துள்ளது. அதைப் பயன் படுத்திக்கொள்ள தயாராகுங்கள்.■




# கோவிட் தொற்று கற்றுக்கொடுத்த பாடம்

ரஷீதா பகத்

கோவிட்-19 தொற்று நோய் பொது சுகாதாரத்தில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகளுக்கு சில படிப்பினைகளைக் கற்றுக் கொடுத்துள்ளது.அவற்றுள் பொது சுகாதாரத்துக்கான முதலீடு என்பது முக்கியமானது. இதிலிருந்து நாம் விலகிச்செல்ல முடியாது என்று உலக சுகாதார அமைப்பின் தலைமை விஞ்ஞானி சௌம்யா சுவாமிநாதன், RI மண்டலக் கழகக் கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

முன்னெச்சரிக்கையான முதலீடும், தயார்நிலையும் தான் நோய்த்தடுப்புக்கு காரணமாக இருந்தது. மனிதர்களாகிய நாம் இயற்கையால் எதிர்வினையாற்றுகிறோம். பொதுவாக பீதியிலிருந்து புறக்கணிப்புவரை செல்கிறோம். கடந்த ஆண்டு கோவிட்-19 தொற்று பரவியபோது என்ன நடந்தது. முதலில் எல்லோரும் பீதியில் ஆழ்ந்தனர். இப்போது தடுப்பூசி கண்டு பிடிக்கப்பட்டு பயன்பாட்டுக்கு வந்த பிறகு மக்கள் இப்போது இயல்பான நிலைக்குத் திரும்பி விட்டனர். இனி வாழ்நாளில் இது போன்று மற்றொரு தொற்றுநோயை சந்திக்கப்போவதில்லை என்று கூறிவருகின்றனர். ஆனால், அது உண்மையல்ல. எனவே கடந்த காலங்களைப் போலவே நாம் புறக்கணிப்பு என்ற சுழற்சிக்கு திரும்பச் செல்லக்கூடாது என்றார் அவர்.

பொது சுகாதார விழிப்புணர்வு பற்றிய மற்றொரு பாடம். நடைமுறையில் அதிக மற்றும் குறைந்த வருவாய் கொண்ட அனைத்து நாடுகளிலும் இது குறைவாகவே இருப்பது தெரியவந்துள்ளது. அதிநவீன மற்றும் மேம்பட்ட சுகாதார வசதிகளைக் கொண்ட நாடுகளில்கூட கொரோனா தொற்று பாதிப்பால் பெருமளவில் மக்கள் பலியாகி வருகின்றனர். இதற்கு காரணம் நோயை கட்டுப்படுத்துதல், கண்காணித்தல், தனிமைப்படுத்துதல், தொடர்புத்தடம் அறிதல் போன்ற சேவைகள் அவர்களிடம் இல்லை. அதற்கு மக்கள் ஒத்துழைக்கவும் இல்லை.



WHO *தலைமை விஞ்ஞானி சௌமியா சுவாமிநாதன்*

தொற்றுநோய் கற்றுக்கொடுத்த மற்றொரு படிப்பினை என்னவென்றால் இதுபோன்ற தொற்றுகள் விலங்குகளிடமிருந்துதான் மனிதர்களுக்குப் பரவுகின்றன என்பது நமக்குத் தெரியும். பருவநிலை மாற்றம், காடுகள் அழிப்பு, விலங்கும்-மனிதர்கள் நெருங்கி வருவதுதான் இதற்க காரணம். பல நாடுகளில் சந்தைகளில் காட்டு விலங்குகளும், வீட்டு விலங்குகளும் ஒரே இடத்தில் விற்கப்படுகின்றன. மேலும் மக்கள் வாழ்க்கை முறையும் இதற்கு காரணம். இவை அனைத்தும் விலங்குகளிலிருந்து வைரஸ் மனிதர்களுக்குப் பரவுவதற்கு வழிவகுக்கின்றன.

சார்ஸ், ஜிகா, எபோலா, நிஃபா உள்ளிட்ட வைரஸ் தொற்று காலத்திலும் இது பலமுறை நடந்துள்ளது. நாம் எதிர்காலத்திலும் தொற்றுகளைப் பெறப்போகிறோம். எனவே நாம் பொது சுகாதாரத்தில் முதலீடு செய்வதிலும் சுகாதாரப் பணியாளர்களை தயார்ப்படுத்துவதிலும் கவனம் செலுத்த வேண்டும். நாம் நோயறிதலைக் கண்டறியும் மையத்தை மட்டுமே வைத்திருக்கிறோம். அதன் மூலம் மருந்துகளையும் சிகிச்சைகளையும் வழங்குகிறோம். ஆரம்ப சுகாதார பராமரிப்பு என்பது சமூக நடவடிக்கைகள் மூலம் சுகாதாரத்தை மேம்படுத்துவதாகவும் நோயைத் தடுப்பதாகவும் இருக்க வேண்டும். மேலும் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் ரோட்டரி முக்கயப் பங்காற்ற முடியும்.

அவர் கற்றுக்கொண்ட இறுதிப் பாடம் என்னவெனில் அரசியல் மற்றும் இதர தலைமை வலுவாக இருப்பது மட்டுமல்ல, இரக்கமும் கருணையும் நிறைந்ததாக இருக்க வேண்டும்.

## நோய்த்தடுப்பு, அத்தியாவசிய மருத்துவ வசதிகளை பாதித்த கோவிட்-19

*உலக சுகாதார நிறுவனத்தைம் மற்றும் RIன் நீண்ட பயணத்தை நினைவுகூர்ந்தார் விஞ்ஞானி சௌம்யா சுவாமிநாதன். 2020ம் ஆண்டு சவால் நிறைந்த ஆண்டாக இருந்தபோதிலும், கொண்டாடுவதற்கு நிறைய இருக்கிறது. குறிப்பாக போலியோ ஒழிப்பு. முதலாவது ஆப்பிரிக்க கண்டத்தில் தீவிர போலியோ நோய்த்தாக்குதலை ஒழிப்பது நீண்ட, வேதனையான, படிப் படியான செயல்முறையாகும். இது நாடுகள், மாவட்டங்கள், கிராமங்கள் வாரியாக எடுத்துச்செல்ல வேண்டிய ஒன்று. சில நாடுகளில் சவாலாகவே இருந்தது. இப்போது ஆப்பிரிக்கா போலியோ இல்லாத நாடாக உருவாகியுள்ளது. இன்னும் ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானில் மட்டுமே இந்தப் பணி நிலுவையில் உள்ளது.*

*இந்த ஆண்டு மற்றொரு மைல்கல் என்னவென்றால் போலியோ தடுப்புக்கான வாய்வழி போலியோ வைரஸ் 2 தடுப்பூசியை அவசரபயன் பாட்டுக்கு உலக சுகாதார நிறுவனம் ஒப்புதல் அளித்தது. இப்போது நாம் கோவிட்-19 தொற்றை தடுப்பதற்கான தடுப்பூசிக்காக காத்திருக்கிறோம்.*

*கொரோனா வைரஸ் தொற்று பரவல் காரணமாக 2020ம் ஆண்டில் உலகம் முழுவதும் இதர மருத்துவச் சேவைகள் போலவே போலியோ ஒழிப்பு நடவடிக் கைகளும் வெகுவாக பாதிக்கப்பட்டது.*



*கடந்த ஆண்டு ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் உலக சுகாதார நிறுவனம் 120 நாடுகளில் நடத்திய ஆய்வில் அத்தியாவசியமான மருத்துவச் சேவைகள் பாதிக்கப்பட்டது தெரிய வந்தது. இந்தப் பட்டியலில் முதலிடம் பெறுவது நோய்த்தடுப்பு மருந்து செலுத்துவது. இந்த நாடுகளில் 80 சதவீதம் பாதிக்கப்பட்டது. அதாவது குறைந்த வருவாய் உள்ள நாடுகள் அதிகம் பாதிக்கப்பட்டன. பணக்கார நாடுகளுடன் ஒப்பிடும்போது ஏழை நாடு களில் அத்தியாவசிய மருத்துவச் சேவைகள் 50 சதவீதம் பாதிப்படைந்தது.*

*இந்தியாவில் காசநோய் கண்டறியும் பணி 50 சதவீதம் பாதிக்கப்பட்டது. இதற்குக் காரணம் இதற்கான கருவிகளை கோவிட்-19 நோய் கண்டறிய பயன்படுத்தியதுதான். இதற்கான ஊழியர்களும் கோவிட்-19 கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டனர். கோவிட்-19 தொற்று பீதி மற்றும் பொது முடக்கம் காரணமாக போக்குவரத்து வசதி இல்லாததன் காரணமாக காசநோயாளிகள் சுகாதார மையங் களைச் சென்றடைய முடியவில்லை. இத்தகைய காரணங்களால் காசநோய், மலேரியா, பச்சிளம் குழந்தைகளுக்கான சேவைகள், நீரிழிவு மற்றும் இரத்த அழுத்தம் போன்ற தொற்று அல்லாத நோய்களுக்கு சிகிச்சை அளிப்பது பாதிக்கப்பட்டது. ஏன் புற்றுநோய் சிகிச்சைகூட வெகுவாக பாதிக்கப்பட்டது.*

*போலியோ ஒழிப்புத் திட்டமும் பாதிக்கப்பட்டது. போலியோ ஒழிப்புத் திட்ட முன்களப் பணியாளர்கள் பலர் கோவிட்-19 நோய்த் தடுப்புத் திட்டங்களுக்கு பயன்படுத்தப்பட்டனர். ஒரே நாளில் ஒரு புதிய நோய்க்கு ஒரு புதிய கண்காணிப்புத் திட்டத்தை உருவாக்க வேண்டியிருந்தபோது அவர்களின் திறமை, அனுபவம், சமூகத்தில் அவர்களுக்கு உள்ள தொடர்பு கைகொடுத்தது.*

*விரிவாகச் சொல்ல வேண்டு மானால், உங்களிடம் நல்ல பயிற்சி பெற்ற, நன்கு செயல்படும் பணியாளர்கள் இருந்தால், நீங்கள் அதை பல்வேறு விஷயங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். போலியோ கட்டுப்பாட்டில் இருந்த பல நாடுகளில் பணியாளர்களுக்கு மீண்டும் பயிற்சி அளிக்க வேண்டியிருந்தது என்றார் சௌம்யா சுவாமிநாதன்.*

போலியோ ஒழிப்பில் கடைசி கட்டத்தில் இருக்கிறார்கள். இதை கடந்து செல்லவேண்டும். அதே நேரத்தில் காசநோய் ஒழிப்பு சவால்களும் இருந்தன. இதை அவர்கள் எற்கெனவே சமாளித்து வருகிறார்கள். தொற்றுநோயால் பல்வேறு சிரமங்களைச் சந்தித்து வரும் இளம் பெண்கள் மற்றும் சிறுவர்களின் கல்விக்கு நாம் அனைவரும் உதவ வேண்டும். அவர்கள் வாழ்க்கையில் முன்னேற அவர்களை கைதூக்கி விட வேண்டும். எல்லாம் டிஜிட்டல் மயமாகிவிட்டன. ஆன்லைன் உலகத்தில் நாம் வாழ்கிறோம்

மனிதர்களிடம் இரக்கம், கருணை வேண்டும். இயல்புநிலை திரும்ப இன்னும் இரண்டு வருடம் ஆகலாம் என்பதால் வாழ்க்கை நடத்த சிரமப்படுபவர்களுக்கு நாம் கருணை உள்ளத்தோடு உதவ வேண்டும். கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்கான தடுப்பூசிகள் பல வந்துள்ளன. அவை பாதுகாப்பாகவும் சிறப்பான பலனைக் கொடுப்பதாகவும் இருக்கும் என்று நம்புகிறேன். தடுப்பூசி மூலம் மக்கள் தொகையில் பெரும்பகுதியினருக்கு நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்க முடியும். ஆனால், இதற்கு சிறிது காலம் பிடிக்கும். இவை ஒரே இரவில் நடந்துவிடாது. 2021 ஆம் ஆண்டின் முற்பகுதியில்கூட நடக்காமல் போகலாம். ஆனால், இரண்டாவது பகுதியில் இவை நடந்து முடியலாம். எனவே நாம் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். அனைத்து பொது சுகாதார நடவடிக் கைகளையும் பின்பற்ற வேண்டும்.

அவர் மேலும் கூறியதாவது: ரோட்டரி என்பது மிகவும் சக்தி வாய்ந்த ஓர் அமைப்பு. உங்கள் மீது மக்கள் நம்பிக்கை வைத்தி ருக்கிறார்கள். சேவை செய்யும் எண்ணமும் உங்களுக்கு உள்ளது. சமுதாயத்தின் அடிமட்டம் வரை சென்று உங்களால் சேவையாற்ற முடியும். மனிதகுலத்தின் மிகப் பெரிய துன்பங்களில் ஒன்றிலிருந்து மக்களை நீங்கள் விடுவித்துவிட்டீர்கள். நாம் தொடர்ந்து ஒன்றிணைந்து செயல் படுவோம் என்றார்.■

# பன்முகத்தன்மைதான் நம்மை செயல்படவைக்கிறது: ஜெனிபர் ஜோன்ஸ்

ரஷீதா பகத்

நீங்கள் இங்கே உருவாக்கியுள்ளது தான் ரோட்டரியின் எதிர்காலம். கடந்த 10 மாதங்களில் உலகெங்கிலும் உள்ள ரோட்டேரியன்கள் தொழில்நுட்பத்தில் முன்னேற்றம் கண்டுள்ளனர். இது போன்ற ஒரு குழுவைக் கூட்டி, அதன் மூலம் பகிர்ந்து கொள்ளப்பட்ட அனுபவம்தான் எதிர்காலம். நீங்கள் அனைவரும் மெய்நிகர் தளத்துக்கு விரைவாகச் சென்று அதை உலகளாவிய சமூகமாக மாற்றியுள்ளீர்கள் என்று ரோட்டரி கிளப் ஆஃப் மெட்ராஸ் (RCM) மற்றும் சினெர்ஜி ரோட்டரி நட்புக் கூட்டணி ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட மெய்நிகர் தளங்களின் இரண்டு வெவ்வேறு கூட்டங்களில் உரையாற்றும் போது கூறினார் RIPN ஜெனிஃபர் ஜோன்ஸ். பிந்தையது 11 ஆசிய நாடுகளின் உறுப்பினர்களுடன் முன்னாள் மாவட்ட ஆளுநர் சுனீல் ஜக்காரியா, RID 3201ல் உருவாக்கப்பட்டு வளர்க்கப்பட்டது.


இந்த இரண்டு நிகழ்வுகளிலும் இவ்வளவு பெரிய பங்கேற்பைப் பார்ப்பது மகிழ்ச்சியாக இருந்தது என்று அவர் கூறினார். RCM கூட்டத்தில் 25 நாடுகளிலிருந்து 525 பேர் மெய்நிகர் மூலம் உள்நுழைந்து பங்கேற்றுள்ளனர். சினர்ஜி மெய்நிகர் கூட்டத்தில் உலகம் முழுவதிலிருந்து மூன்று முன்னாள் இயக்குநர்கள், 6 மாவட்ட ஆளுநர்கள், 14 DGEக்கள், 10 DGNகள், 35 முன்னாள் ஆளுநர்கள் உட்பட 390 பேர் பங்கேற்றுள்ளனர்.

மெய்நிகர் சந்திப்பு கூட்டத்திற்கு ஜெனிஃபர் வருகையை முன்னிட்டு RCM இரண்டு டயாலிஸிஸ் கருவிகளை சென்னை அருகில் சங்கம் ஏற்படுத்தியுள்ள ACS-RCM டயாலிசிஸ் மையத்திற்கு நன்கொடையாக வழங்கியது. இதன் மூலம் சிறுநீரக செயலிழப்பு நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க நிறுவப்பட்டுள்ள டயாலிஸிஸ் கருவிகளின் எண்ணிக்கை 7 ஆக அதிகரித்துள்ளது என்றார் சங்கத்தின் தலைவர் கபில் சிடலே.

சங்கத்தின் முதன்மைத் திட்டமாக 35 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள RCM பாய்ஸ் டவுன் சொஸைட்டியில் 117 பழம்தரும் மரங்கள் நடப்பட் டுள்ளன. 2022ம் ஆண்டு ரோட்டரி தொடங்கி 117 ஆண்டுகள் ஆவதைக் குறிக்கும் வகையில் 117 மரங்கள் நடப்பட்டன. அந்த ஆண்டு ஜூலை மாதம் ஜெனிஃபர், RI தலைவராகப் பதவியேற்கிறார்.

ரோட்டரியின் சர்வதேச பாஸ்போர்ட் இப்போது போல எளிதானதல்ல என்று ஜோன்ஸ் கூறினார். எல்லைகளை இணைப்பது என்பது ரோட்டரி பல காலமாக மேற்கொண்ட ஒரு முயற்சியாகும். நாம் இப்போது மெய்நிகர் மூலம் உலகம் முழுவதும் பயணம் செய்து நமது பாஸ்போர்ட்டில் உலகளாவிய முத்திரையை பதித்துள்ளோம். இது அற்புதமானது.

கரோனா தொற்று காலத்தில் நான் பல்வேறு மெய்நிகர் சந்திப்புகளில் பங்கேற்றிருக்கிறேன். இதன் மூலம் உலகம் முழுவதும் புதிய நண்பர்களும் கிடைத்திருக்கிறார்கள். ஆனால், நான், நாம் எல்லோரும் நேரிடையாக சந்திக்கும் நாளை எதிர்பார்த்து காத்திருக்கிறேன். நம்பமுடியாத அளவுக்கு நாம் நண்பர்களைப் பெற்றிருக்கிறோம். அது ரோட்டரிக்கு பிரகாசமான எதிர்காலம் இருப்பதையே காட்டுகிறது. நீங்கள் காட்டிய தலைமைக்கு நன்றி. நாம் இதிலிருந்து வெளியே வரும்போது, இந்த மெய்நிகர் நிகழ்ச்சிகளும் இருக்கும், என்று சினெர்ஜி சந்திப்பில் அவர் கூறினார். ரோட்டரியின் எதிர்காலத்தைப் பற்றி குறிப்பிட்ட



## தடுப்பூசி விழிப்புணர்வு பிரசாரத்துக்கு தயாராகுங்கள்

*கடந்த பல மாதங்களாக நாம் இருட்டில் இருந்தோம். கரோனா தொற்று பரவலுக்கு ஆளாகாத ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளே இல்லை என்று சொல்லலாம். ஆனால், ஒரு தனித்துவமான வழியில், இந்த தொற்றுநோய் நம்மைத் தூண்டிவிட்டுள்ளது. நாம் செயல்படும் மக்கள் என்பதை நிரூபித்துவிட்டோம். நாம் ஒன்றுசேர்ந்து செயல்பட வேண்டும் என்பதை விரைவாகவே உணர்ந்தோம், தொடர்பு கொண்டோம், சேவைகளை பகிர்ந்துகொண்டோம். நீங்கள் அனைவரும் மெய்நிகர் தளங்கள் மூலம் பல்வேறு நாடுகளிலிருந்து சிறந்த பேச்சாளர்களை இதில் பங்கேற்கச் செய்து நிகழ்ச்சிகளை முழுமையாகவும் சிறப்பாகவும் நடத்தினீர்கள்.*

*புதிய ஆண்டு நம்பிக்கையுடன் தொடங்கியுள்ளது. நாம் ஒவ்வொருவராக தடுப்பூசி போட்டுக்கொள்ளப் போகிறோம். நாம் தடுப்பூசி போடும் நபர்கள் என்பதால் இதைப் பற்றி அக்கம்பக்கத்தில் உள்ளவர்களிடமும் நண்பர்களிடமும் இதனால் ஏற்படும் பயன்களை எடுத்துச் சொல்லப் போகிறோம். அன்று நாம் குரலை உயர்த்தி போலியோவை ஒழிக்க முடியும் என்றோம். இப்போது அதேபோல தடுப்பூசி போடுவதற்கு தயக்கம் காட்டுபவர்களிடம் அது பாதுகாப்பானது, நோய்த்தொற்று தாக்காமல் இருக்க அவசியமானது என்று குரலை உயர்த்தி எடுத்துக்கூறி அவர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.*

*ரோட்டரி தலைவர் என்ற முறையில் தனது பிராந்தியத்தில் ஜோன்ஸ் ஒரு முறை இப்படிக் கூறினார். போலியோ வரைஸுக்கு எதிராக 3 பில்லியன் குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்குவதற்காக 2.1 பில்லியன் டாலர் தொகையை திரட்ட வேண்டும் என்று 30 ஆண்டுகளுக்கு முன்பு நாங்கள் ரோட்டரியினரிடம் கூறியிருந்தோம். 30 ஆண்டுகளில் இது சாத்தியமான என நினைத்தபோது இல்லை என்றே தோன்றியது. ஆனால், இன்று ரோட்டரி சுகாதார கட்டமைப்பை வலுப்படுத்தி, யுனிசெப், உலக சுகாதார நிறுவனம், கேட்ஸ் அறக்கட்டளை உள்ளிட்ட கூட்டாண்மையாளர்களுடன் சேர்ந்து 70 நாடுகளில் போலியோ மற்றும் போலியோ பிளஸ்ஸை முடிவுக்கு கொண்டு வரும் நிலையில் இருக்கிறோம். இப்போது மலேரியா, காசநோய் போன்றவற்றைத் தவிர கோவிட் இருக்கும்.*

*2020ம் ஆண்டு மார்ச் மாதம் முதல், உலகம் முழுவதிலும் பொது முடக்கம் அறிவிக்கப்பட்ட நிலையில், போலியோ தடுப்பூசி போடும் பணியை நாம் இடைநிறுத்த வேண்டியிருந்த போது ரோட்டேரியன்கள் மனச்சோர்வு அடைந்தனர். ஆனால், சற்று கற்பனை செய்து பாருங் கள். அந்த முன்னணி களப்பணியாளர்கள் இப்போது போலியோவிலிருந்து கோவிட் தொற்றை தடுக்கும் களப் பணியாளர்களாக முன்னிலைப்படுத்தப்படுகிறார்கள். போலியோ தடுப்பூசி பணி இடைநிறுத்தப்பட்டிருந்தாலும் கொவிட் வைரஸ் எங்குள்ளது என்பதை அடையாளம் காண்பதிலும், கண்காணிப்பதிலும், தொடர்புத் தடமறிதல் பணியையும் அவர்கள் இடைநிறுத்தவில்லை. இதையும் நம்மால் தடுத்து நிறுத்த முடியும். இதற்கான கட்டமைப்பு நம்மிடம் உள்ளது. எனவே இது குறித்து நாம் பெருமைப்பட வேண்டும் என்றார்.*

அவர், இதுபோன்று ஈடுபாட்டுடன் இணைந்திருப்பதற்கு முன்னுரிமை அளித்த ஒவ்வொரு ரோட்டேரியன்களும்தான் ரோட்டரியின் எதிர்காலம் என்று கூறினார். ஆனால் அனைத்து ரோட்டேரியன்களுக்கும் முன்பாக ஒரு சவால் என்னவென்றால், அவர்களுடைய சங்கங்களை பார்வையிட்டு மற்றவர்களும் இதேபோன்ற அனுபவங்களைக் கொண்டிருக்கிறார்களா, குழு கூட்டங்களில் ஈடுபாடு காட்டுகிறார்களா என்பதை உறுதி செய்ய வேண்டும்.

நாங்கள் தொடர்புகொள்ளும் போது, இந்த சவாலான காலங்களில் ஒன்றாக பயணிக்கிறோம் என்ற உறுதி மொழியை மக்கள் பெறுகிறார்கள். இப்போது தடுப்பூசிகள் வந்து விட்டதால் நம்பிக்கை ஒளி தெரிகிறது.

கோவிட்-19 தடுப்பூசிகள் தயாரிக்கப்பட்டு, ஒரு வருடத்திற்குள் மக்களின் பயன்பாட்டுக்கு வந்துள்ளது மாயாஜாலமானது. அந்த தடுப்பூசிகள் நமக்கு கிடைக்கும் வரை, நாம் இஷ்டம்போல் பயணிக்க முடியாது என்று சினெர்ஜி சந்திப்பில் அவர் கூறினார். 2021 டிசம்பரில் சென்னை மகாபலிபுரத்தில் RIDE A S வெங்கடேஷ் ஏற்பாடு செய்துவரும் மண்டல கழக கூட்டத்திற்கு நேரில் வரமுடியும் என்று நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆனால், இப்போதே ரோட்டரியின் ஒரு முக்கிய நெறிமுறையாக சங்கங்கள் அளவில் தங்கள் சக உறுப்பினர்களைப் பற்றி சிந்திக்க ஒவ்வொரு ரோட்டேரியனுக்கும் பொறுப்பு உள்ளது. ஒரு நபரை ரோட்டரிக்கு அழைத்த பிறகு, அந்த அனுபவத்திலிருந்து அவர்கள் என்ன விரும்புகிறார்கள் என்று அவர்களிடம் கேளுங்கள், பின்னர் அதை வழங்குங்கள்.

ரோட்டரியில் நம்முடன் இருப்பவர்களைப் பற்றிக் கவலையில்லை. இந்த அமைப்பில் சேர விரும்புபவர்கள் மற்றும் அதிலிருந்து வெளியேறுபவர்கள் பற்றித்தான் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று ஜோன்ஸ் கூறினார். இதற்கான விடை மிகவும் எளிதானது. நட்புக்காகவும் சேவைக்காகவும் அவர்கள் ரோட்டரியில் இணைகிறார்கள் என்று ஆய்வுகள் சொல்கின்றன. நாம் அனைவரும் உலகில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். மாற்றத்தை உருவாக்கவே நாம் மக்களுடன் ஒன்றிணைகிறோம் என்பதுதான் நமது கண்ணோட்டம் என்று சொல்லப்படுகிறது.

ஆனால், எல்லாவற்றிற்கும் மேலாக ரோட்டரி அதன் உறுப்பினர்களுக்கு தங்களுக்குள் மாற்றத்தை கொண்டுவர ஒரு வாய்ப்பளித்துள்ளது. இது நமது

# இளைஞர், பெண்களின் உறுப்பினர்கள் சேர்க்கையை ஊக்குவித்தல்

R C மெட்ராஸ் மற்றும் சினெர்ஜி அலையன்ஸ் சந்திப்புகளில், ரோட்டரியில் இளைய மற்றும் பெண்கள் உறுப்பினர்களை ஊக்குவிப்பது குறித்தும், பல தடைகளைத் தாண்டி RI தலைவர் பதவியை பிடித்தது குறித்தும் RIPN ஜெனிஃபர் ஜோன்ஸிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு ஜோன்ஸ் கூறுகையில், ரோட்டரியில் நாங்கள் 40 வயதிற் குட்பட்ட பெண்கள் மற்றும் இளைய வர்களை ஈர்க்க முயற்சிக்கிறோம். இது ஒரு முன்னுரிமையாக இருந்தது, ஆனால், மிகவும் நேர்மையாக அணுக வேண்டியிருந்தது. தலைமைத்துவ அனுபவத்தை எதிர்பார்க்கும் பெண்களும் இளைஞர்களும் அந்த வாய்ப்பை ரோட்டரியில் பார்க்க வேண்டும்.

இப்போது நமது அமைப்பின் மிக உயர்ந்த நிலையில் பன்முகத்தன்மை மீது கவனம் செலுத்தப்படுகிறது. ஒரு பெண் தலைவர் பதவிக்கு வந்துள்ளதால், பெண்கள் மற்றும் இளைஞர்களை ரோட்டரிக்கு ஈர்க்கும் என்று நம்புகிறேன். சங்கம் மற்றும் மாவட்ட அளவில் இது ஒரு சவாலாகவும், தலைமைப் பதவிகளைப் பெற பெண் களுக்கு ஒரு உத்வேகமாகவும் இருக்கும் என்று நம்புகிறேன். இது ஒரு சிறந்த நடைமுறையாகவும் வளர்ச்சிக்கும் வித்திடும் என்று எதிர்பார்க்கிறேன்.

ரோட்டரிக்கு இளம் சிந்தனை யாளர்கள் தேவைப்பட்டாலும், ஒரு குறிப்பிட்ட வயதினரைக் கொண்டிருப்பது முன்னோக்கி



ரஷீதா பகத்

RIPN ஜெனிஃபர் ஜோன்ஸ் (வலது) மற்றும் PDG ஷ்யாமா ஸ்ரீ சென்.

செல்வதற்கான வழியல்ல என்றும் அவர் கூறினார். நாம் எல்லோரும், நிச்சயமாக ஒரு 25 வயது இளைஞரை சந்திக்கும்போது அவர் ஒரு 85 வயதானவரைப் போலவே சிந்திக்கலாம். நமக்குத் தேவை நம்மை முன்னெடுத்துச் செல்லும் முற்போக்கு சிந்தனைதான்.

பாலின இடைவெளியைக் குறைப்பதில் ரோட்டேரியன்கள் இந்தப் பிரச்னையை வர்த்தக கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும் என்று ஜோன்ஸ் அறிவுறுத்தினார். நமது நிறுவனத்தில் செயல்படாத சந்தைப் பங்கைப் பார்த்தால், நாம் என்ன செய்வோம்? உதாரணமாக, ரோட்டரியில் பெண் உறுப்பினர் எண்ணிக்கை 24 சத வீதம் மட்டுமே. சில பகுதிகளில் இது அதிகமாக இருக்கலாம். வடஅமெரிக்கா வில் இது சுமார் 35 சதவீதம் மற்றும் கரீபியன் பிராந்தியத்தில் 48 முதல் 52 சதவீதம் வரை. நாம் வர்த்தக நோக்கத்தை மாற்றியமைப்போம். ரோட்டரியில் பாலின சமநிலையைக் கொண்டுவருவதற்கான வாய்ப்பைப் பெறுவோம் என்றார்.

RIன் புதிய பன்முகத்தன்மை, சமபங்கு மற்றும் சேர்த்தல் பணிக்குழு தலைவர் RI இயக்குநர் வாலெரி வாஃபர் தலைமைப் பண்புகளையும், திறன்களை மேம்படுத்துவதற்கும் தனிப்பட்ட வளர்ச்சியை அடைவதற்குமான வாய்ப்பு அல்ல, மற்றவர்கள் நம்முடன் சேரவும், சேவை செய்வதற்கும் அளிக்கப்பட்ட வாய்ப்பாகும்.

ரோட்டேரியன்கள், தங்கள் சங்கத்தின் இதர உறுப்பினர்கள் எப்படிச் செயல்படுகிறார்கள், அவர்கள் நல்ல மனநிலையில் இருக்கிறார்களா என்று பார்க்க வேண்டும். வாழ்க்கைப் போராட்டம், பணத்தை இழத்தல், வேலையை இழப்பது உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகள் அவர்களுக்கு இருக்கலாம். அவற்றை நாம் சரிபார்க்க வேண்டும். எந்தச்சூழலிலும் அவர்கள் தனிமைப்படுத்தலிலோ அல்லது மனநல பிரச்னைகளிலோ சிக்கிக்கொள்ளக்கூடாது. அப்போதுதான் இருள் சூழ்ந்த நேரத்தில்கூட நம்பிக்கை ஒளி தெரிகிறது என்பதை மக்கள் புரிந்துகொள்வார்கள் என்று அவர் அறிவுரை கூறினார்.

RID 3291ன் முன்னாள் மாவட்ட ஆளுநரான ஷியாமஸ்ரீ சென் நடத்திய கேள்வி-பதில் உரையாடல் அமர்வில் ஜோன்ஸ் பேசினார். அப்போது, இனி வரும்காலங்களில் இ-சங்கங்கள் முக்கிய பங்கு வகிக்கும். நிச்சயம் அவை செழித்து வளரும், உயிர்வாழும். ஒரு நாட்டின்

*பேசுகையில், நமது சங்கங்களில் இதுபோன்ற சவாலான உரையாடல்கள் எங்களுக்குத் தேவை என்றார்.*

*ஆனால் ரோட்டேரியன்கள் அவர்கள் ஆண்களானாலும் சரி பெண்களானாலும் சரி சிறந்தவற்றில் கவனம் செலுத்தவேண்டும் என்றார். ஒரு வருடத்திற்கு முன்பு நடைபெற்ற ரோட்டரி இன்டர்நேஷனல் கூட்டத்தில் நாம் புதிய பன்முகத்தன்மை, சமபங்கு மற்றும் சேர்த்தல் அறிக்கையை ஏற்றுக்கொண்டோம். இது உலகெங்கிலும் உள்ள அரசாங்கங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்களில் நடப்பது தான். எனவே, நமது சங்கங்களில் ஒரு மாறுபட்ட கண்ணோட்டத்தை எவ்வாறு உருவாக்குவது என்பதை கூர்ந்து கவனிப்போம். இது உலகின் மிக முக்கியமான சவால்களை தீர்க்க உதவும். ஏனென்றால், விஷயங்களை மாறுபட்ட கண்ணோட்டத்தில் பார்ப்பதாலும், ஒன்றிணைந்து செயல்படுவதாலும் உலகப் பிரச்னைகள் சிலவற்றுக்கு நம்மால் தீர்வுகாண முடியும்.*

*பெண் ரோட்டேரியன்கள் தடைகளைக் கடந்து தலைமைப் பதவிக்கு வந்து வழிகாட்டும் விஷயத்தில் நாம் கவனமாக இருக்க வேண்டும். ஆண்கள்,பெண்கள் யாராக இருந்தாலும் சரி அவர்களை வளர்த்தெடுத்து அவர்களும் தலைமைப் பதவிக்கு வருவதற்கான வாய்ப்பை கொடுக்க வேண்டும். ஒருவரே மீண்டும் மீண்டும் தலைமைப் பதவிக்கு வருவது தவிர்க்கப்பட வேண்டும். புதிய தலைமை வாய்ப்புகளை பெறுவதற்கு ஏற்றவாறு இளைஞர்களுக்கு முக்கிய பங்குகளை அளிக்க வேண்டும். அவர்கள் சுதந்திரமாக செயல்பட அனுமதிக்க வேண்டும். புதிய சிந்தனைகளுடன் சிறப்பாகச் செயல்படுபவர்களுக்கு வாய்ப்பு கொடுத்தால்தான் நாம் வளர முடியும். மூத்த தலைவர்கள் அதற்கு வழிவகுக்க வேண்டும்.*

*ரோட்டரி தலைவர் பதவியை எட்டிப்பிடித்தது குறித்து ஜோன்ஸ் கூறுகையில், எனது ஆண் சகாக்கள் செய்ததைப் போலவே நான் செய்தேன். நாங்கள் அனைவருமே சங்கத் தலைவர், மாவட்ட ஆளுநர், ரோட்டரி இயக்குநர் என படிப்படியாக வளர்ந்து RI பதவிக்கு வந்துள்ளோம். தலைமைப் பதவிக்கு வருவதற்கான தகுதிகளில் இதுவும் ஒன்று. மேலும் TRF அறங்காவலராக பணியாற்றுவதற்கும், வெவ்வேறு தலைமைப் பதவிகளில் உலகத் தலைவர்களுடனான உரையாடல்களில் பங்கேற்பதற்கும் எனக்கு வாய்ப்புக் கிடைத்தது.*

*ரோட்டரியில் தலைமைப் பங்கை அதிகரிக்க ஆண்கள், பெண்கள் அனைவருக்கும் ஒரு வாய்ப்பு உள்ளது என்று குறிப்பிட்ட அவர், RI தலைவராக பரிந்துரைக்கப்பட்ட வாய்ப்பால் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். இது ரோட்டரிக்கும் ஒரு சாதகமான முன்னேற்றம். ஆனால் நான், பாலினம் காரணமாக தேர்ந்தெடுக்கப் படவில்லை, தகுதிகளின் காரணமாகவே தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளேன் என்று உறுதியாக நம்புகிறேன் என்றார்.*

பல்வேறு பகுதிகளிலிருந்தும் வெவ்வேறு நாடுகளிலிருந்தும் மக்கள் கூடுவது வளரும். உண்மையில், தொற்றுநோய் 5-10 ஆண்டுகளுக்குப் பிறகு இருக்க வேண்டிய நிலைக்கு நம்மை முன்னேற்றியுள்ளது. நாம் சௌகரியமாக இருந்த நிலையிலிருந்து வெளியேறி புதிய தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் மூலம் நாம் முன்னேற புதிய தளங்களை உருவாக்கியுள்ளது என்றார்.

மற்றொரு கேள்விக்கு அவர் பதிலளிக்கையில், பன்முகத்தன்மை, சமபங்கு மற்றும் உள்சேர்த்தல் ஆகியவற்றுக்கு ரோட்டரியில் தொடர்ந்து அதிக கவனம் செலுத்தப்படும் என்றார். தமது தலைமை காலத்தில் இவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாம் இதுவரை இந்த மூன்றையும் பாலினம், வயது, இனம், மதம், கலாச்சாரம் மற்றும் பாலியல் நோக்குநிலை ஆகியவற்றின் மூலம் பார்த்து வந்தோம். இந்த கடினமான உரையாடல்களில் சிலவற்றைச் செய்ய நான் ரோட்டரியர்களுக்கு சவால் விடுவேன். நமது சமூகத்தின் உண்மையான பிரதிபலிப்பு நாம் தான் என்பதை உறுதிசெய்ய வேண்டும். இந்த உரையாடல் உலகின் பல பகுதிகளில் வயதுடையதாக இருக்கலாம், சில பகுதிகளில் பாலினம் மற்றும் கலாசாரம் அடிப்படையிலும் இருக்கலாம்.

ஆனால், இந்த உரையாடல் வெவ்வேறு பிராந்தியங்களில் வேறுபடும் என்றாலும், இறுதி முடிவு ஒரே மாதிரியாக இருக்கும். நாம்தான் நமது சமூகங்களின் உண்மையான பிரதிபலிப்பு என்பதை உறுதிசெய்ய வேண்டும். நமது பன்முகத்தன்மையும் ஒருமித்த கண்ணோட்டமும்தான் நமது சமூகம் அல்லது நாடு எதிர்கொள்ளும் சில கடினமான சிக்கல்களைச் சமாளிக்கவும் தீர்வுகாணவும் நாம் கொண்டுவரும் மாற்றங்கள் உதவும். நாம் வெவ்வேறு கோணங்களில் சிந்திப்பதால், அணுகுவதால், ஒருவருக்கொருவர் சவால் விடவும், மிகச் சிறந்ததைக் கொடுக்கவும் நம்மால் முடியும். நாம் பிரச்னைகளை ஒரே கண்ணோட்டத்தில் பார்த்தால் புத்திசாலித்தனமாகச் செயல்பட முடியாது, பிரகாசமாக இருக்க முடியாது, மக்களுக்கு நம்பிக்கை அளிக்க முடியாது என்று அவர் கூறினார்.

இந்தியாவில் போலியோ ஒழிப்பில் முக்கிய பங்கு வகித்ததற்காக மெட்ராஸ் ரோட்டரி சங்க உறுப்பினர்களுக்கு ஜோன்ஸ் பாராட்டுத் தெரிவித்தார். நீங்க செய்திருக்கும் மிகச் சிறந்த பணிகளில் இதுவும் ஒன்று என்று குறிப்பிட்ட அவர், தம்மை கௌரவிப்பதற்காக இரண்டு திட்டங்களை அறிமுகப்படுத்தியது மனதை தொட்டதாகவும் அவற்றை நேரில் பார்வையிட வருவதாகவும் தெரிவித்தார்.■

THE ODYSSEY
ROTARY INSTITUTE 20-21

# மெய்நிகர் மாநாட்டிலிருந்து







V முத்துகுமரன்

# சில துளிகள்












*1.RID கமல் சங்வி, சோனல், Rtn ககன் துதானியின் மகன் மோஹக், PDG சந்திப் நரங், ஸ்ருஷ்டி (PDG சஞ்சய் கேம்காவின் மகள்) RID கமல் சங்வியின் மகன் ராவிஷு, அனு நரங், PDG கேம்கா மற்றும் மீனாக்ஷி; 2.இன்ஸ்டிட்டியூட் அமைப்பாளர் கமல் சங்வி மற்றும் சோனல், 3.இன்ஸ்டிட்யூட் தலைவர் சஞ்சய் கேம்காவின் மகன் சுபம் மற்றும் மகள் ஸ்ருஷ்டி, மற்றும் அவர் அலுவலகத்திலிருந்து ஸ்நேஹலதா மற்றும் காஜல்.*

*4.கொச்சியில் நடைபெறவிருந்த இன்ஸ்டிட்யூடிற்கான விளம்பர நிகழ்ச்சி இந்தூர் இன்ஸ்டிட்யூட்டில்: RIPE சேகர் மேத்தா, ராஷி, RID கமல் சங்வி, சோனல், மாதவி பாண்ட்யாவுடன் IPDGகளின் துணைவியர்.*






இன்ஸ்டிட்யூட்டில்
ஒரு கலாச்சார நிகழ்ச்சி.

**மேலே:** *இன்ஸ்டிட்யூட் அமைப்பாளர் கமல் சங்வி மற்றும் தலைவர் சஞ்சய் கேம்கா.*

**கீழே:** *(இடதிலிருந்து)* அனு, PDG சந்தீப் நரங், சோனல், RID *கமல் சங்வி, மீனாக்ஷி மற்றும்* PDG *கேம்கா.*



THE ODYSSEY
ROTARY INSTITUTE 20-21

# அடுத்த மாநாடு: மகாபலிபுரம், சென்னை

v முத்துகுமரன்

அடுத்த ரோட்டரி பிராந்தியச் சந்திப்பு, டிசம்பர் 10–12ல், சென்னைக்கு அருகிலுள்ள, பல்லவர் கட்டடக்கலையின் சிறப்புகள் நிறைந்த பண்பாட்டு நகரமான மகாபலிபுரத்தில் நடைபெறவுள்ளது.

மஹாப்ஸ் ரோட்டரி சந்திப்பு, நோக்கம் மற்றும் மகிழ்ச்சி ஆகிய இரண்டுக்கும் ஒரு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கும். ஏனெனில், ரோட்டரியன்கள் சுவையான நிகழ்ச்சிகளில் சிறந்த பேச்சாளர்களுடைய பேச்சுகளைக் கேட்கலாம், அழகான கடற்கரைகளின் பின்னணியில் நடனம், இசை, மகிழ்ச்சி, சிரிப்பு மற்றும் கொண்டாட்டத் திருவிழாவிலும் பங்கேற்கலாம், கடற்கரையோரச் சொகுசுத் தங்குமிடம் ஒன்றில் சிந்தனை நிறைந்த கலப்பு மற்றும் உண்மையான சுவைப் பண்டங்களை அனுபவிக்கலாம்'' என்று மெய்நிகர் ரோட்டரி சந்திப்பில் PDG M முருகானந்தம், RID 3000, தெரிவித்தார்.

மஹாப்ஸ் சந்திப்பின் ஒருங் கிணைப்பாளரான RIDE A S வெங்கடேஷ் பேசுகையில், பல பண்பாட்டுத் தலங்கள், அழகான கடற்கரைகளைக் கொண்ட இந்த வரலாற்று நகரத்தில்'' நடைபெறும் சந்திப்பில் கலந்துகொள்கிறவர்கள், பிராந்தியங்களைச் சேர்ந்த ரோட்டரி தலைவர்களுடன் உரையாடுகிற, ஆர்வமூட்டும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிற மற்றும் மிகச் சிறந்த பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளைக் காண்கிற வாய்ப்பைப் பெறுவார்கள் என்றார்.

இந்த இடத்துக்கு அருகில் உள்ள அரவிந்தர் ஆசிரமத்துக்காகப் புகழ் பெற்ற பாண்டிச்சேரி மற்றும் கையால் நெய்யப்பட்ட பட்டுச் சேலைகள் மற்றும் காமாட்சி ஆலயத்துக்காகப் புகழ் பெற்ற பழங்காலப் புனிதப் பயண நகரமான காஞ்சிபுரம்.

RI தலைவர் சேகர் மேத்தா (2021–22) இந்தச் சந்திப்பில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்பார்.

டிசம்பர் 2019ல், PM நரேந்திர மோடி மற்றும் சீன அதிபர் ஜீ ஜின்பிங் இடையிலான உயர்நிலை மாநாட்டுக்கான இடமாக மகாபலிபுரம் அமைந்தது.

### மஹாப்ஸில் என்ன சிறப்பு?

மகாபலிபுரம் பற்றிய ஓர் அறிமுகப் படம் இங்கு திரையிடப்பட்டது. மகாபலி என்ற இரக்கமுள்ள அரசருடைய பெயரைக் கொண்டுள்ள இந்த நகரம், 3–7வது நூற்றாண்டின் போது, நரசிம்ம வர்மன் என்ற பல்லவ அரசரால் நிறுவப்பட்டது. சென்னை யிலிருந்து 37 மைல் தெற்கில், வங்காள விரிகுடாவுக்கருகில் கோரமண்டலக் கடற்கரையில் இருக்கும் இந்தப் பழங்கால நகரத்தின் இன்னொரு பெயர், மாமல்லபுரம். இது ஒரு UNESCO பண்பாட்டுத் தலமாகும்.

ரதங்கள், மண்டபங்கள், கங்கை இறங்கி வருதல் மற்றும் கண்ணபெருமானுடைய வெண்ணெய் உருண்டை ஆகியவை, இங்கு வாழ்ந்த கைவினைஞர்களுடைய கட்டுமானச் சிறப்பைக் காண்பிக்கும் மிகச் சிறந்த நினைவுச் சின்னங்கள். இங்கு கண்டிப்பாகக் காணவேண்டிய இடங்களில் ஒன்று, மூன்று தலை முறைப் பல்லவ அரசர்கள் கட்டிய புகழ் பெற்ற ஏழு ஆலயங்களில் இப்போது மீதமிருக்கிற ஒரே கட்டடமாகிய கடற்கரைக் கோயில், இந்த இடம் முழுவதையும் கட்டிமுடிப்பதற்கு 200 ஆண்டுகளுக்கு மேல் ஆனது.




RIDE A S *வெங்கடேஷ்*

பல்லவ வம்சத்தின் பழங்காலப் பண்பாட்டைக் காப்பதற்காகவும் கொண்டாடுவதற்காகவும் ஒவ்வோராண்டும் செவ்வியல் நடனம் மற்றும் நாடகத் திருவிழாக்கள் நடத்தப்படுகின்றன, கண்களுக்கு விருந்தளிக்கும் இந்த நிகழ்ச்சிகள் மனத்தை அமைதியாக்கி ஆன்மாவை உறையச்செய்கின்றன.

மஹாப்ஸ் ரோட்டரி சந்திப்பு, 'ஷெராட்டனின் ஃபோர் பாயின் ட்ஸில்' நடைபெறும், இங்கு மிகப் பெரிய ஒரு மாநாட்டு மையமும், தொழில்நுட்பத்தையும் அழகியலையும் ஒருங்கிணைக்கும் செழிப்பான வளாகமும் உள்ளது. இங்கு அழகாக வடிவமைக்கப்பட்ட தொகுப்பு அறைகள், கருத்தரங்கு அறைகள் மற்றும் ஒரு பிரமாண்டமான புல்வெளி ஆகியவை உள்ளன.

இணைக் கருத்தரங்குகள் மகாபலிபுரத்திலுள்ள 'ராடிசன் ப்ளூ ரெசார்ட் டெபிள் பே' என்ற இடத்தில் நடைபெறும், இங்கு வங்காள விரிகுடாக் கடலின் மிகச் சிறந்த காட்சி களைக் காணலாம்.

மஹாப்ஸ் 2021ன் இணை ஒருங்கிணைப்பாளராக RIDE மகேஷ் கொட்பாகி செயல்படுவார், PRID C பாஸ்கர் மற்றும் PDG அபிராமி ராமநாதன் ஆகியோர் ஆலோசகர்களாக, சுரேந்திரா பொம்மிரெட்டி இணைத் தலைவராக, PDG மாதவ் சந்திரன் செயலாளராக, மற்றும் C R ராஜூ பொருளாளராகச் செயல்படுவார்கள். மேலும் தகவல்களுக்கு, இந்த இணையத் தளத்துக்கு வாருங்கள்: www.riinstitutemahabs21.org.

THE ODYSSEY
ROTARY INSTITUTE 20-21

# கார்ப்பொரேட் குடியுரிமையின் புதிய பரிமாணம்: பிர்லா


ரஷீதா பகத்

கார்ப்பரேட்டுகளின் வழக்கமான பங்கு மற்றும் வர்த்தகத்தில் உள்ள சமூகப் பொறுப்பு ஆகியவை நியாயமான இலாபத்தைத் தொடர்வது மற்றும் பங்குதாரர்களின் மதிப்பை உயர்த்துவது என்பது ஒரு திட்டவட்டமான மாற்றத்திற்கு உட்பட்டுள்ளது என்று ‘ஒடிஸி’ மெய்நிகர் சந்திப்பு நிகழ்ச்சியின் தொடக்கவிழா அமர்வில் உரையாற்றுகையில் ஆதித்யா பிர்லா குழுமத்தின் தலைவர் குமார் மங்கலம் பிர்லா கூறினார். இந்த கூட்டத்திற்கு RI இயக்குநர் கமல் சங்வி ஏற்பாடு செய்திருந்தார்.

நோபல் பரிசு பெற்ற மில்டன் ப்ரீட்மேன் வர்த்தக நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு அதன் இலாபத்தை அதிகரிப்பதுதான் என்று கூறினார். ஆனால், முரண்பாடாக, அவரது பிரபலமான அறிக்கையின் 50வது ஆண்டு, கோவிட்-19 தொற்றுக்கு நடுவே வந்தது. அந்த அறிக்கை அப்போது தர்க்க ரீதியாக பலமுள்ளதாக இருந்தது. ஆனால், அந்த கருத்து இப்போது மாறிக்கொண்டிருக்கிறது என்று அவர் கூறினார்.

அமெரிக்காவில் உள்ள பெரு நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரிகளின் கூட்டமைப்பு 2019ம் ஆண்டு ஒரு நிறுவனத்தின் நோக்கத்தை மறுவரையறை செய்து ஓர் அறிக்கை வெளியிட்டது. J P மோர்கன், அமேசான், வால்மார்ட் உள்ளிட்ட 200 பெரு நிறுவனங்களின் தலைமை அதிகாரிகள் கையெழுத்திட்டுள்ளனர். அவர்களின் கூட்டு அறிக்கை வணிகத்தின் வர்த்தகம் என்பது வெறும் பங்குதாரர் முதலாளித் துவத்திலிருந்து பங்குதாரர்கள் முதலாளித்துவத்தை நோக்கி நகர்ந்து வருகிறது என்பதை திறம்பட அடிக் கோடிட்டுக் காட்டுகிறது. ஒரு நிறுவனம் பங்குதாரர் மதிப்பை அதிகரிப்பது மட்டுமல்லாமல், ஊழியர்கள் மற்றும் சமூகத்தின் நல்வாழ்வையும் அதிகரிக்க வேண்டும். ஒரு காலத்தில் முக்கியமாக கருதப்பட்ட ப்ரீட்மேனின் வார்த்தைகள் இப்போது கேள்விக்குறியாகி விட்டது. கார்ப்பரேட் பொறுப்புணர்வு என்பது பங்குதாரர்களின் மதிப்புக்கு அப்பாற்பட்டது, மேலும் அனைத்து பங்குதாரர்களுக்கும் பலவிதமான நன்மைகளைக் கொண்டுள்ளது.

பிர்லா மேலும் கூறுகையில், அவ்வாறு செய்யும்போது, சமுதாயத்தில் பெருமளவில் இயங்குவதற்கான மறைமுக உரிமத்தையும் இது பெற வேண்டும். இது இந்தியாவில் ‘பெர்மிட் ராஜ்’ காலத்தில் இயக்கப்பட்ட வழக்கமான உரிமம் அல்ல, 30 ஆண்டுகளுக்கு முன்பே அது கைவிடப்பட்டது. இதைத்தான் கார்ப்பொரேட் குடியுரிமைக்கான புதிய முன்னுதாரணம் என அழைக்கிறேன். இது சட்டம்



*ஆதித்யா பிர்லா குழு தலைவர் குமார் மங்கலம் பிர்லா*

## தொற்றை எதிர்த்துப் போராடுவதில் ரோட்டரியின் "நட்சத்திர பங்குக்கு" பாராட்டு

*கோவிட் தொற்று குறித்து ஆதித்யா பிர்லா குழுமத்தின் தலைவர் குமார மங்கலம் பிர்லா கூறுகையில், நாம் நம்பிக்கையுடன் புதிய ஆண்டைத் தொடங்கினோம். தடுப்பூசி விரைவாக கண்டுபிடிக்கப்பட்டு வெளிவந்தது மட்டும் காரணமல்ல, நாம் கொரோனா தொற்றால் ஏற்பட்ட சவாலை திறமையாக மன உறுதியுடன் சமாளித்தோம். சுகாதாரப் பணியாளர்களின் உழைப்பும் இதற்கு காரணமாகும். இதற்காக அவர்கள் பாராட்டப்பட வேண்டும்.*

*உலகெங்கிலும் ஆண்டு முழுவதும் தொற்று அச்சுறுத்திய போதிலும் மனிதநேய செயல்பாடுகள் முக்கிய பங்கு வகித்தது. முன்னணி சுகாதார ஊழியர்களின் அச்சமில்லாமல், தன்னலமற்று அர்ப்பணிப்பு உணர்வுடன் செயலாற்றினார்கள். மக்களும் அரசு விதிமுறைகளை பொறுமையுடன் கடைபிடித்தார்கள். அரசுக்கு மக்கள் அளித்த ஒத்துழைப்பால் தொற்று கணிசமாக அளவில் கட்டுப்படுத்தப்பட்டது.*

*விஞ்ஞானிகள், மருந்தாளுநர்கள் மற்றும் பலர் சேர்ந்து குறுகிய காலத்தில் தடுப்பூசிகளை கண்டுபிடித்தனர். மேலும் தனியார் நிறுவனங்களும் ரோட்டரியினரும் கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஒருங்கிணைந்து முக்கியப் பங்காற்றினர். பொது சுகாதாரத்துக்கு நெருக்கடி ஏற்படும் போது ரோட்டேரியர்கள் இதுபோன்று முக்கியப் பங்கு வகிப்பது இது முதல் முறை அல்ல. 1918 ஆம் ஆண்டு ஸ்பானிஷ் ப்ளு பரவல் நேரத்தில்கூட ரோட்டரியினர் சமூக சேவையில் முன்னணியில் இருந்ததாக எனக்குத் தெரிவிக்கப்பட்டது. உலகில் சில நிறுவனங்கள் இரண்டு தொற்றுநோய்களின் காலத்தின்போது உங்களைப் போலவே நூற்றாண்டுக்கும் மேலாக மனிதகுலத்திற்கு சேவை செய்ததாகக் கூறலாம்.*

*வர்த்தக நிறுவனங்களுக்கு கூட, இந்த அளவிலான நெருக்கடியில் சமுதாயத்திற்கு நன்மை செய்ய வேண்டியதன் அவசியத்தை நினைவூட்டுவதாக பிர்லா கூறினார். எங்கள் ஆதித்யா பிர்லா குழுவினர் கோவிட்-19 தொற்றின போது உள்ளூர் சமூகங்களுக்கு உதவ பலவித அணுகுமுறையுடன் செயல்பட்டது. கோவிட்-19 நிவாரணப் பணிகளுக்கு ரூ.500 கோடி நிதி பங்களிப்பு தவிர, எங்கள் குழு பல நூறு முகக்கவசங்கள், பி.பி.இ. கருவிகள், கிருமிநாசினிகள் மற்றும் உணவுப் பொட்டலங்களை தேவைப்படுபவர்களுக்கு விநியோகித்தது. நாடு முழுவதும் உள்ள எங்கள் மருத்துவமனைகளில் கோவிட் -19 நோயாளிகளுக்கு நூற்றுக்கணக்கான படுக்கைகளையும் நாங்கள் ஒதுக்கியுள்ளோம். என்றார்.*

*உலகின் ஒவ்வொரு மூலையிலும் உள்ள எங்கள் கிளைகள் மூலம் உள்ளூர் சமூகத்தினருக்கு தங்களால் முடிந்த உதவிகளை தன்னலமின்றி செய்து வருகிறார்கள்.*

*சிறிய நிறுவனங்கள் முதல் பெரு நிறுவனங்கள் வரை கூட்டு முயற்சியால் தொற்றுநோயால் மக்களுக்கு ஏற்பட்ட வலியைப் போக்க இணைந்து செயல்பட்டது எனக்கு புதிய உத்வேகத்தை அளித்துள்ளது என்றார்.*

மற்றும் ஒழுங்குமுறைகளுக்குக் கீழ்ப்படிவதற்கு அப்பாற்பட்டது, இது இப்போது ஊழியர்களின் நலனுக்கும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும் பொருந்தும்.

நல்ல கார்ப்பொரேட் குடியுரிமை அத்தகைய சட்ட இணக்கத்திற்கு அப்பாற்பட்டது மற்றும் இது தார்மீக மற்றும் நெறிமுறை சார்ந்த நடத்தை பற்றியது. நிர்வாகத்தின் தந்தை பீட்டர் ட்ரக்கர், ஒரு வெற்றிகரமான வர்த்தகம் ஒழுக்கத்தின் அடித்தளமாக நிற்கிறது. இது ஒரு உயிரற்ற விஷயம் அல்ல, ஆனால், மனிதாபிமானத்துடன் சமூகத்தின் அக்கறையுள்ள நண்பராகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அவர் மேலும் கூறுகையில் இந்த புதிய முன்னுதாரணத்தில், செயல்படுவதற்கான உரிமம், மரியாதை, நம்பகத்தன்மை மற்றும் ஏற்றுக்கொள்ளுதல் ஆகியவற்றின் அடிப்படையிலானது. இது உண்மையானது மற்றும் வார்த்தையையும் செயல்பாட்டையும் இணைக்க கொள்கைகள் மற்றும் நெறிமுறைகளுக்கு கட்டுப்படுவது, எதுவாக இருந்தாலும் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். எந்தவொரு அரசாங்கமோ அல்லது உரிமம் வழங்கும் அதிகாரமோ அதை வழங்க முடியாது.

உண்மையில், இந்த வர்த்தக கூட்டமைப்பின் அறிக்கை இந்தியா 2013 இல் வெளியிட்ட சமூக பொறுப்புணர்வு சட்டத்தின் அடிப்படையிலானதுதான். மேலும் வர்த்தக நிறுவனங்கள் தங்களின் வரிக்கு பிந்தைய லாபத்தில் 2 சத வீதத்தை கட்டாயமாக கார்ப்பொரேட் சமூக பொறுப்புணர்வு திட்டத்துக்கு ஒதுக்க வேண்டும் என்று கூறியுள்ள ஒரே நாடு இந்தியாவாகத்தான் இருக்கும்.

ஆனால், எங்களைப் போன்ற கார்ப்பொரேட் நிறுவனங்கள் இப்போது CSR என்று அழைக்கப்படும் திட்டத்தை ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக செயல்படுத்தி வருகின்றன. என்னுடைய தாத்தா, ஜி டி பிர்லா, கார்ப்பொரேட் நிறுவனங்கள் சமூக செல்வத்தின் அறங்காவலர்கள் என்ற மகாத்மா காந்தியின் பார்வையில் நம்பிக்கை கொண்டவர். அதை எங்கள் சமூக ஈடுபாட்டில் வெளிப்படுத்துகிறோம். எங்கள் சமூக பொறுப்புணர்வு நடவடிக்கை மூலம் எங்கள் நிறுவனம் ஒன்பது மில்லியனுக்கும் அதிகமான மக்களின் நெஞ்சங்களை தொட்டுள்ளது என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்


கொள்கிறேன். எனது தாய் ராஜாஷ்ரீ பிர்லா இதை வழிநடத்தி வந்தார்.

நல்ல கார்ப்பொரேட் சமூக குடியுரிமை நலன் என்பது உதட்டு சேவைக்கு அப்பாற்பட்டது. இது சில விமர்சகர்கள் கூறுவதுபோல வெறும் அறிக்கையல்ல.

ஒரு நல்ல கார்ப்பொரேட் குடியுரிமையைப் பராமரிப்பது என்பது ஒரு அமைப்பின் உள்ளார்ந்த குணங்களை பிரதிபலிக்கிறது. நெறிமுறைகளை பின்பற்றிச் செயல்படுவது அதன் அடித்தளமாக இருக்கிறது. மேலும் அவை அடிக்கடி வெளிப்படுத்தப்படுகின்றன.அன்றாட நடவடிக்கைகளில் மூலம் கூட இதைத் தெரிந்துகொள்ளலாம் என்று பிர்லா கூறினார்.அவர் ஓர் உதாரணத்தையும் குறிப்பிட்டார். கோவிட் தொற்று ஆரம்பக்காலத்தில் உலகெங்கும் ஒருவிதமான பீதி பரவியது. இங்கிலாந்தில் உள்ள சில்லறை விற்பனையாளர், ஒவ்வொரு நாளும் தனது கடையை ஒரு மணி நேரத்துக்கு முன்னதாக திறந்தார். மூத்த குடிமக்கள் தங்களுக்குத் தேவையான பொருள்களை வாங்கிக்கொள்வதற்காகவே அவ்வாறு செய்தார். இது அவரின் நன்மதிப்பை உயர்த்தியது. இது அனைத்து நல்ல நிறுவனங்களுக்கும் இருக்க வேண்டும் என்பதை உணர்த்தியது.

பொறுப்பான நிறுவனங்கள் நல்லனவற்றை செய்வதுடன் நிற்காமல், மற்றவர்களையும் ஒன்று சேர்க்க வேண்டும். இதனால் நல்ல கார்ப்பொரேட் குடியுரிமை என்பது தனியார் துறையின் தலைமையிலான இயக்கமாக மாறும், அரசாங்கத்தால் அல்லது விதிமுறைகளால் கட்டாயப் படுத்தப்படாது. எடுத்துக்காட்டாக, எங்கள் ஃபைபர் வர்த்தகத்தில் ஆதாரமாக இருப்பது மரக்கூழ் தான். இந்த மூலப்பொருளை காடுவளர்ப் போரிடமிருந்து வாங்குவதையே நாங்கள் நடைமுறையாகக் கொண்டுள்ளோம். இத்தகைய நடத்தை விரைவில் ஒரு முக்கிய புள்ளியை எட்டும் என்று நான் நம்புகிறேன், என்றார் அவர்.

ஒரு வர்த்தக நிறுவனத்தின் தன்னார்வ கலாச்சாரத்தின் முக்கியத்து வத்தையும் பிர்லா அடிக்கோடிட்டுக் காட்டினார். சமூக சேவை அல்லது இளைஞர்களை வழிநடத்துவதற்காக ஊழியர்கள் தங்கள் நேரத்தை செலவிட முன்வந்தால், அவர்கள் தங்கள் முதலாளியின் அந்தஸ்தை மேம்படுத்து கிறார்கள். தொற்றுநோயின் உச்சத்தின் போது, புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் துயரங்களை அனுபவித்தபோது ஆதித்யா பிர்லா குழுமத்திற்குள் உதவிக்கு அழைத்தபோது அதன் 26,000க்கும் மேற்பட்ட ஊழியர்கள் முன்வந்து தொழிலாளர்கள், தங்கள் செல்லிடபேசி இணைப்புகளை ரீசார்ஜ் செய்ய உதவினார்கள். ஒரு நிறுவனம் அத்தகைய முன்முயற்சிகளை ஊக்குவிக்கவும், அங்கீகரிக்கவும், வெகுமதி அளிக்கவும் முடியும். இது போன்ற நிறுவனங்களில் ஊழியர்கள் ஊக்கத்துடனும் முழு ஆற்றலை பயன்படுத்தியும் வேலை செய்வார்கள் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மேலும் நுகர்வோர் கூட இதுபோன்ற நடைமுறைகளைப் பின்பற்றும் நிறுவனங்களால் தயாரிக்கப்பட்ட தயாரிப்புகளுக்கு மதிப்பு கொடுப்பதுடன் கொஞ்சம் கூடுதல் கட்டணம் செலுத்தவும் தயாராக இருப்பார்கள். இதன் மூலம் அதிக நன்மைகளை பெறமுடியும்.



தொற்றுநோயின் உச்சத்தின் போது, புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் துயரங்களை அனுபவித்தபோது ஆதித்யா பிர்லா குழுமத்திற்குள் உதவிக்கு அழைத்தபோது அதன் 26,000க்கும் மேற்பட்ட ஊழியர்கள் முன்வந்து தொழிலாளர்கள், தங்கள் செல்லிடபேசி இணைப்புகளை ரீசார்ஜ் செய்ய உதவினார்கள்.

ரோட்டரியின் நான்கு வழி சோதனையிலிருந்து நான்கு கொள்கைகளை மேற்கோள் காட்டி, பிர்லா பேசினார். இவை நிறுவனங்களின் முடிவுகளுக்கு வழிகாட்ட எளிய சக்திவாய்ந்த விதிகளாக நான் கருதுகிறேன்.

நிறுவனத்தின் மதிப்பு மற்றும் செல்வத்தை முறையில்லாத வழியில் உருவாக்குவதை நான் ஆதரிக்கவில்லை. ஒரு நிறுவனம் உயர்ந்த நிலைக்குச்செல்வது விற்பனை மற்றும் லாபத்தின் நோக்கில் மட்டுமல்ல. நல்ல கார்ப்பரேட் குடியுரிமையும் அதில் பொதிந்துள்ளது. ■




# 20 ஆண்டுகளுக்கு நமக்கு நேர்வித நலன் திட்டம் தேவை: பரத் பாண்ட்யா

V முத்துக்குமரன்

முந்தைய ஒன்றரை ஆண்டுகளில், நாடு முழுவதும் உங்கள் எண்களை அறிந்திருங்கள் முகாம்களை நடத்துவதில் ரோட்டரி சங்கங்கள் மிகச் சிறந்த பணியை ஆற்றியுள்ளன. தயவுசெய்து, இந்த முகாம்களைத் தொடர்ந்து நடத்துங்கள். நோய்ப்பரவல் நேரத்திலும் இவற்றை நடத்தலாம். ஏனெனில், ஒரு முகாமில் நாம் சுமார் 150–200 நோயாளிகளைப் பரிசோதிக்கிறோம் என்பதால், கோவிட் முன்னெச்சரிக்கைகள், சமூக விலகலைச் சிரமமில்லாமல் பின்பற்றலாம், என்றார் RI இயக்குநர் Dr பரத் பாண்ட்யா. மெய்நிகர் ரோட்டரி சந்திப்பில், நேர்வித நலன் திட்டத்தைப்பற்றிய (PPH) ஒரு நிகழ்ச்சியில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஒவ்வொரு மனிதரும் தன்னுடைய இந்த எண்களை அறிந்திருக்க வேண்டும்: உயரம், எடை (இவை இரண்டும் உடல் பருமனைச் சுட்டிக் காட்டும் BMI), ரத்த அழுத்தம் மற்றும் நீரிழி வுக்கான ரத்தச் சர்க்கரை அளவு. உடல் பருமன், உயர் ரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு ஆகியவை சேர்ந்து பெரிய NCDகளுக்குப் பங்களிக்கின்றன, இந்தியாவில் 60 சதவிகிதம் மரணங்களுக்குக் காரணமாகின்றன என்றார் அவர்.

மேற்கத்திய நாடுகளுடன் ஒப்பிடும் போது, இந்தியாவில் NCDகள் 15–20 ஆண்டுகள் முன்பாகவே வருகின்றன என்று அவர் எச்சரித்தார்.

நோய்ப்பரவலால் கிடைத்த நன்மைகளில் சில, நல்ல




ஆரோக்கியத்தின் முக்கியத் துவத்தின் மீது அது கொண்டு வந்திருக்கும் கவனம், அடுத்து, ஒன்றுக்கு மேற்பட்ட நோய்களைக் கொண்ட, NCDக் களைக் கொண்ட மக்கள் கூடுதல் தீவிரமாகப் பாதிக்கப்படுகிறார்கள், என்று அவர் குறிப்பிட்டார்.

## வெடிக்கத் தயாராக உள்ள எரிமலை

NCDக்கள் வெடிக்கக் காத்திருக்கும் ஓர் எரிமலை என்று அவர் கூறினார், இந்திய உணவில் கொலஸ்ட்ரால், கலோரிகள், உப்பு, எண்ணெய் மற்றும் சர்க்கரை மிகுதியாக உள்ளது. புகையிலை மற்றும் மது உட்கொள்ளுதல் போன்ற கெட்ட பழக்கங்கள் மிகுதியாகிவருகின்றன.

ரோட்டரி இந்தியாவில் NCDக்களைக் கையாள்வதற்கு மூன்று முனை அணுகுமுறை ஒன்றைக் கொண்டுள்ளது: உங்கள் எண்களை அறிந்திருங்கள் முகாம் களை நடத்துதல், ரோட்டரி முகாம்கள் மற்றும் நிகழ்ச்சிகளின் வழியாக, ஒரு ஸ்பூன் குறைவு, நான்கு படிகள் முன்னால் என்ற முழக்கத்தைப் புகழ்பெறச் செய்தல்.

எளிமையாகச் சொன்னால், இந்த முழக்கம் உங்களை உங்களுடைய அன்றாட உணவில் ஒரு ஸ்பூன் உப்பு, எண்ணெய் மற்றும் சர்க்கரையைக் குறைவாக எடுத்துக்கொள்ளச் சொல்கிறது, அத்துடன், நாள்தோறும் குறைந்தது 30 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்யச் சொல்கிறது, அதன் மூலம் NCDக்களை வெல்லலாம் என்கிறது.

பள்ளிகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துவதன்மூலம், நல்ல பழக்கங்கள், நலத்தைத் தரும் உணவுகளின் முக்கியத்துவம் மற்றும் உடற்பயிற்சியின் தேவைபற்றிய குழந்தைகளின் மனநிலையை மாற்றுவதற்கு ரோட்டரி முயல்கிறது. பதிலுக்கு அவர்கள் தங்களுடைய பெற்றோர்கள், மூத்தவர்கள் மற்றும் உறவினர்களுடைய மனநிலையை மாற்றுவார்கள்.

## தடுப்பு நலப் பராமரிப்பு

ஓர் அறுவைச் சிகிச்சை வல்லுனர் என்றமுறையில், நான் எப்போதும் குணப்படுத்தும் நலப் பராமரிப்புக்கு என்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளேன், ஆனால், நலப் பராமரிப்பின் எதிர்காலம், தடுப்புப் பராமரிப்பில்தான் இருக்கிறது என்று நான் உணர்கிறேன்'' என்று பாண்ட்யா தொடர்ந்து கூறினார். PPH என்பது வெறும் 2–3 ஆண்டுத் திட்டம் இல்லை, அது குறைந்தது 15–20 ஆண்டுகளுக்கு மற்றும் அதற்குமேல் நடக்கவேண்டும் என்றார்.■

THE ODYSSEY
ROTARY INSTITUTE 20-21

# கற்பித்தல் என்பது கல்வி அறிவை பிறருக்கு கொடுப்பது

ஜெய்ஸ்ரீ

மத்தியப் பிரதேச மாநிலம், சோலாப்பூரில், பரிதேவாடி கிராமத்தில் உள்ள ஜில்லா பரிஷத் தொடக்கப்பள்ளியின் ஆசிரியர் ரஞ்சித் சிங் திசாலே பெண் கல்வியை ஊக்குவிப்பதற்காகவும், QR கோட் முறையில் பாடபுத்தகத்தை உருவாக்கி புரட்சி செய்ததற்காகவும் 2020ம் ஆண்டுக்கான சர்வதேச அளவிலான சிறந்த ஆசிரியருக்கான 1 மில்லியன் டாலர் பரிசுத் தொகையை வென்றுள்ளார். ஒவ்வொரு ஆண்டும் கல்வித்துறையில் சிறப்பான பங்களிப்பை அளித்துவரும் ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து கௌரவிக்கும் வகையில் இங்கிலாந்தைச் சேர்ந்த வர்கே அறக்கட்டளை இந்த விருதை ஏற்படுத்தியுள்ளது.

பரிசுத்தொகையை எனது ஒன்பது சக இறுதிப் போட்டியாளர்களுடன் பகிர்ந்துகொள்ளப்போவதாக அறிவித்துள்ளேன். இது அவர்கள் பணியில் மேலும் சிறந்து விளங்க உதவிகரமாக இருக்கும். கற்பித்தல் என்பது நாம் பெற்ற கல்வி அறிவை பிறருக்கு கொடுப்பது அல்லது பிறருடன் பகிர்ந்துகொள்வதாகும். இதன் மூலம் அவர்களும் திறமை யானவர்களாக உருவாக முடியும் என்று ரோட்டரி இன்ஸ்டிட்யூட்டில் RILM அமர்வில் பேசுகையில் திசாலே குறிப்பிட்டார்.

2009ம் ஆண்டில், தனது பள்ளிக்கு திசாலே வந்தபோது, அது மாட்டுக்கொட்டகைக்கும் கிடங்குக்கும் இடையில் பாழடைந்த நிலையில் இருந்தது. மாணவர்களுக்கு உள்ளூர் மொழியில் பாடபுத்தகங்கள் கிடைப்பதை உறுதி செய்வது அவரது முதல் பணியாக இருந்தது. பாடங்களை மராத்தியில் மொழிபெயர்த்து, மாணவர்கள் கவிதை, விடியோ விரிவுரைகள் மற்றும் இதர பணிகளை மாணவர்கள் எளிதில் அணுகும் வகையில் அவற்றை QR கோட் மூலம் இணைத்தேன். எனது யோசனையை மகாராஷ்டிராவில் உள்ள தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (NCERT) ஏற்றுக்கொண்டது. இதன் மூலம்



*சர்வதேச சிறந்த ஆசிரியர் ரஞ்சித் சிங் திசாலே ஒரு மாணவியுடன்.*

பள்ளிக்கு வரமுடியாத குழந்தைகள் தங்கள் வீடுகளிலிருந்தே பாடங்களை வேகமாக கற்றுக்கொள்ள முடியும் என்றார்.

நான் பணிபுரியும் பள்ளியில் படிக்கும் மாணவர்களில் 90 சதவீதம் பேர் சிறப்பான கல்வித்தரத்தை பெற்றுள்ளதாக அவர் பெருமையுடன் குறிப்பிட்டார். வகுப்பறையில் இருந்தபடியே மாணவர்கள் 140 நாடுகளுக்கு மெய்நிகர் மூலம் பயணம் செய்துள்ளனர். இந்த நாடுகளில் உள்ள மக்கள் பேசும் மொழி, அவர்களின் கலாசாரம் போன்றவை மாணவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்களின் கண்ணோட்டம் விரிவடைந்துள்ளது. உலகளாவிய குடிமக்கள் என்று அவர்கள் சொல்லிக் கொள்வதை நான் வரவேற்கிறேன். பூகம்பம் என்பது ஜப்பானில் அடிக்கடி நிகழும் சம்பவம். ஜப்பானிய குழந்தைகளுடன் உரையாடிய பிறகு எங்கள் மாணவர்கள் பூகம்பத்தை பற்றி தெரிந்துகொண்டு அதை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்று புரிந்துவைத்துள்ளனர் என்று குறிப்பிட்ட அவர், மேலும் தனது பரிசுத் தொகையில் 20 சதவீதத்தை தமது எல்லை தாண்டிச் செல்வோம் திட்டத்துக்கு ஒதுக்க திட்டமிட்டுள்ள தாகவும் தெரிவித்தார். அதாவது மோதல்களுக்குப் பெயர் போன பாகிஸ்தான், பாலஸ்தீனம், இஸ்ரேல், ஈரான், இராக் மற்றும் வடகொரியா போன்ற நாடுகளில் மாணவர்களிடமும் இளைஞர்களிடமும் அமைதியை கட்டியெழுப்புவதே இதன் நோக்கம் என்றும் அவர் குறிப்பிட்டார். பரிசுத் தொகையில் மேலும் 30 சதவீதத்தை ஆசிரியர்களின் புதுமை கண்டுபிடிப்பு நிதி ஒன்றை ஏற்படுத்தி அதற்கு ஒதுக்கீடு செய்யப்போவதாகவும் கூறினார்.

திசாலேயின் தலையீட்டின் காரணமாக கிராமத்தில் பெண்களுக்கு வளர் இளம் பருவத்திலேயே திருமணம் செய்யும் நிகழ்வுகள் இல்லை. மேலும் பள்ளிக்கு 100 சதவீத பெண்கள் வருகை தருகின்றனர்.

### ரோட்டரி இந்தியா எழுத்தறிவு இயக்கம்:

RILMன் இணை தலைவரான RIDE மகேஷ் கோட்பாகி கூறுகையில், நாடு முழுவதும் 300 ரோட்டரி சங்கங்களின் ஒரு லட்சம் ரோட்டேரியன்கள், 2014ம் ஆண்டில் RILM தொடங்கப்பட்டதிலிருந்து அதன் கற்பித்தல் (TEACH) திட்டத்தில் இணைந்து செயல்பட்டு வருகிறார்கள். கொவிட் தொற்று பரவலால் பள்ளிகள் மூடப்பட்ட நிலையில், ஸ்வாதி ஹெர்கல் போன்ற ரோட்டேரியன்கள், இந்தியாவின் மேற்கு பகுதியில் உள்ள 80,000 ஆசிரியர்களுக்கு எளிய முறையில் ஸ்மார்ட் ஆன்லைன் மூலம் கற்பித்தல் முறைகளில் பயிற்சி அளித்துள்ளனர். இதனால் நாடு முழுவதும் ஆசிரியர்கள் பயனடைந்துள்ளனர். 'இ-சிக்ஷா' திட்டம் நாடு முழுவதும் 30,000 பள்ளிகளில் ஒலி-ஒளி நாடாக்கள் மூலம் கற்பிக்கும் வசதியை ஏற்படுத்தி யுள்ளது. இதன் பாடத்திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் அளித்து அவை நாடு முழுவதும் கல்விச் செயலியான தீக்ஷா மூலம் ஒளிபரப்பப்பட்டு வருகிறது. இதன் மூலம் இந்த ஆண்டு இந்தியாவில் 15 கோடி குழந்தைகள் பலன்பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

RILM தனது வயது வந்தோர் கல்வித் திட்டத்தில், வயதுக்கு வந்த ஆனால், கல்வியறிவு பெறாதவர்களுக்கு வழிகாட்டும் பணியில் மாணவர்களை ஈடுபடுத்தி வருகிறது. வயது வந்தோரில் 80,000 பேர் எழுத்தறிவு பெற்றுள்ளனர். 'சுவாபிமான்', 'கண்ணியம்' மற்றும் 'சாக்க்ஷம் பாரத்' போன்ற திட்டங்கள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. ரோட்டரியின் இந்த திட்டங்கள் மூலம் பெண்களும் இளைஞர்களும் தங்களின் திறன்களை வளர்த்துக்கொண்டு தங்கள் வாழ்வாதாரத்தை பெருக்கிக் கொள்ள முடியும். தனித்திருக்கும் சுமார் 1,000 பெண்கள், கண்ணியம் திட்டத்தின் மூலம் பயிற்சி பெற்று தகுந்த தொழில்களைச் செய்து வருகின்றனர்.

சாக்க்ஷம் பாரத் திட்டத்தின் மூலம் RILM இளைஞர்கள் தங்கள் பகுதியில் உள்ள அப்பல்லோ மெட்ஸ்கில்ஸின் எந்த ஒரு கிளையிலும் ரோட்டரி சங்கம் மூலம் பெயர்களைப் பதிவு செய்ய ஊக்குவித்து வருகிறது. இதற்கான பயிற்சிக் கட்டணத்தில் ரூ.4,400ஐ மானியமாக வழங்க ரோட்டரி முன்வந்துள்ளது. பயிற்சி வகுப்புகள் முடிந்ததும் அவர்களுக்கு வேலை வாய்ப்பும் உறுதி செய்யப்படுகிறது.

நாடு முழுவதும் சுமார் 3,000 மகிழ்ச்சிப் பள்ளிகள் மற்றும் 3,000 நூலகங்களை RILM ஏற்படுத்தித் தந்துள்ளது என்றார் RIDE கோட்பாகி. ■




RILM *இணைதலைவர் மகேஷ் கோட்பாகி*




# ரோட்டராக்டர்களுக்கு ரோட்டரி நெகிழ்வுத்தன்மையுள்ள வாய்ப்புகளை வழங்கவேண்டும்

கிரண் ஜெஹ்ரா

ரோட்டரி சங்கங்களின் முதன்மையான இலக்குகளில் ஒன்று, ரோட்டராக்டர்கள் எதை விரும்புகிறார்கள் என்பதைக் கவனிப்பது, அங்கீகரிப்பது, இன்னும் நெகிழ்வுத்தன்மையோடு இருப்பதன்மூலம் அவர்களுடைய அனுபவத்தை வடிவமைக்க ஒரு வாய்ப்பை அவர்களுக்கு வழங்குவது'' என்றார் RID வலெரி வாஃபெர். ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, பிரேசில், ஜப்பான் மற்றும் தெற்கு ஆசியாவிலிருந்து பங்கேற்பாளர்கள் கலந்துகொண்ட ரோட்டராக்டர்களுடைய நிகழ்ச்சியொன்றைத் தொகுத்து வழங்கும்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ரோட்டரியன்கள் ரோட்டராக்டர்களுடன் தொடர்ந்து உரையாடவேண்டும், அவர்களுடைய யோசனைகள், ஆலோசனைகளை நாடவேண்டும் என்றார் அவர்.

ரோட்டராக்ட் ஆஸ்திரேலியா பல மாவட்டத் தகவல் அமைப்பு (MDIO) தலைவரான சமந்தா ஃப்யூஸ்டர் பேசுகையில், இளைஞர்கள் தங்களைப் போன்ற வாழ்க்கை நிலையில் இருக்கும் மற்ற மக்களுடன் சேர்ந்து, ஓர் ஆதரவான சூழலில் கற்றுக்கொள்ளவும் வளரவும் ரோட்டராக்ட் ஒரு மிகச் சிறந்த வாய்ப்பை அளிக்கிறது. நாம் சமூகத்துக்குச் செய்கிற சேவையின் மூலம் தலைமைப்பண்புகள், தொழில் திறன்கள் மற்றும் பிற பயனுள்ள திறன்களைக் கற்றுக்கொள்கிறோம்'' என்று சுட்டிக்காட்டினார். ரோட்டராக்டர்கள் இந்தத் திறன்களைத் தங்களுடைய அன்றாட வாழ்க்கைகளில், பணியிடத்தில், தங்களுடைய சமூகங்களில் பயன்படுத்தவேண்டும் என்று அவர் ரோட்டராக்டர்களைக் கேட்டுக்கொண்டார். வருங்காலத்தில் அவர்கள் ரோட்டரியில் தலைமைப் பொறுப்புகளை ஏற்க விரும்பினால், இந்தப் புதிய திறன்கள் அவர்களுக்கு உதவும் என்றார் அவர்.

ரோட்டரிக்கு இணையாக ரோட்டராக்டரை உயர்த்தும் தீர்மானத்தால், ரோட்டராக்டர்கள் ஒரு ரோட்டரி சங்கத்தில் சேரத் தீர்மானிக்கும்போது, ரோட்டராக்டில் அவர்கள் பெற்ற பல ஆண்டுச் சேவை அனுபவம் அவர்களுக்கு உதவும்'' என்றார் அவர். இதன் பொருள், அனுபவம் இல்லை என்ற காரணத்தால் முன்னர் இளைஞர்களுக்கு மறுக்கப்பட்ட பொறுப்புகளை இப்போது அவர்கள் பெறலாம்.



RID *வலேரி வாஃபெர்*

ரோட்டராக்டரை ரோட்டரியின் ஒரு பகுதியாக ஆக்கினால், இன்னும் பரந்த மக்கள்தொகையைச் சேர்ந்தவர்கள் தலைமைப் பொறுப்புகளை ஏற்கலாம்.

**வயது வரம்பைத் தளர்த்தல்**

ரோட்டராக்டர்களுடைய அதிகபட்ச வயது வரம்பு நீக்கப்படுவதைப்பற்றி ஓஜாஸ் ஜோஷி, DRR, RID 3141, பேசுகையில், ரோட்டராக்ட் சங்கங்கள் தங்களுடைய திட்டங்களைப்பற்றி, தாங்கள் உண்டாக்க விரும்பும் தாக்கத்தைப்பற்றி, தாங்கள் உரையாட விரும்பும் மக்களைப்பற்றியெல்லாம் தீர்மானமெடுக்க இது உதவியுள்ளது என்றார்.

நிஷிதா பெட்னேகர், முன்னாள் DRR, RID 3170, இதைப்பற்றி மேலும் பேசுகையில், அதிகபட்ச வயது வரம்பை நீக்குவது, இளைஞர்கள் ரோட்டராக்டரில் இணைவதைத் தடுக்காது என்றார். RI ரோட்டராக்ட் குழுவின் உறுப்பினரும், பிரேசிலைச் சேர்ந்த அறங்காவலர்களுக்குச் சிறப்பு ஆலோசகருமான பேட்ரீசியா குஹ்ன் பேசுகையில், ரோட்டரி சங்கங்கள் பன்னாட்டு நல்கைகளில் ரோட்டராக்ட் சங்கங்களுடன் இணைந்து பணியாற்றவேண்டும் என்று TRF அறங்காவலர்கள் ஊக்குவிப்பதாகக் கூறினார். அத்துடன், ரோட்டரியன்களை இன்னும் நெருங்குவதற்கு இது ஒரு நல்ல வழியாகவும் இருக்கும்.

பிரேசிலிலிருந்து TRF அறங்காவலர்களுக்கான சிறப்பு ஆலோசகராகத் தேர்ந்தெடுக்கப்படும் முதல் ரோட்டராக்டர் பேட்ரீசியா. அவர் இதுபற்றிப் பேசுகையில், நான் அறங்காவலர்களிடமிருந்து நிறையக் கற்றுக்கொண்டுள்ளேன். வெவ்வேறு







தலைமுறையினர் ஒன்றாக வேலை செய்யும்போது, நம்முடைய அறிவும் யோசனைகளும் ஒன்றாகச் சேர்ந்து மேலும் உறுதியான ஓர் எதிர்காலத்தைக் கட்டமைக்கின்றன என்று அவர்கள் நமக்குக் காண்பிக்கிறார்கள் என்றார்.

ரோட்டரியும் டோஸ்ட்மாஸ்டர்ஸும் இணைந்து பணிபுரிவது ஒரு மகிழ்ச்சியளிக்கும் கூட்டணி'' என்று ரோட்டராக்ட் தெற்கு ஆசியப் பல மாவட்டத் தகவல் அமைப்பின் (RSA MDIO) நிறுவனர் தலைவரான கார்த்திக் கிட்டு, முன்னாள் DRR, RID 3190 குறிப்பிட்டார். இந்தக் கூட்டணியால், ரோட்டரியன்களும் ரோட்டராக்டர்களும் தனிப்பட்ட முறையிலும் தொழில்முறையிலும் வளரலாம். ரோட்டராக்டர்களுடைய திறன்களை வலுவாக்கவும், தங்களுடைய சமூகங்களில் இன்னும் மேம்பட்ட ஒரு தாக்கத்தை உருவாக்க அவர்களுக்கு உதவவும் இது பயன்படும் என்றார் அவர்.

உகாண்டாவிலிருந்து RI ரோட்டராக்ட் மற்றும் இன்டராக்ட் குழுவின் தலைவராகிய ரொனால்ட் கவாட்வா பேசினார். ரோட்டராக்டர் களுக்கான இரட்டை உறுப்பினர் தன்மை ரோட்டரிக்குப் எவ்வாறு பலன் அளிக்குமா என்ற கேள்விக்கு அவர் பதிலளித்தார். முதலில், நீங்கள் ரோட்டரி மற்றும் ரோட்டராக்ட் ஆகிய இரண்டிலும் ஒரு சம உறுப்பினர். இரண்டாவது, இளம் ரோட்டரியன்கள் ரோட்டரி சங்கத்தில் சேரும் ரோட்டராக்டர் களுக்கு நல்ல வழிகாட்டிகளாக இருக்கலாம், ஏனெனில், அவர்களால் இவர்களை நன்கு புரிந்துகொள்ள இயலும்.

RSA MDIO தலைவர் யடின் செஹ்கல் பேசுகையில், ரோட்டராக்ட் சங்கங்களை ஆதரவளிக்கும் ரோட்டரி சங்கங்களுடன் அல்லது அவை இல்லாமலும் பதிவு செய்யலாம் என்கிற சமீபத்திய RI திருத்தம் ஒரு புரட்சிகரமான தீர்மானம் என்றார். புள்ளிவிவரங்களைப்பற்றி அவர் பேசு கையில், கடந்த மூன்று ஆண்டுகளோடு ஒப்பிடும்போது, முந்தைய ஆறு மாதங்களில் ரோட்டராக்ட் சங்கங் களின் வளர்ச்சியில் நாம் 1.65 சதவிகித உயர்வைக் காண்கிறோம்.தென் கிழக்கு ஆசியாவில், இதற்கான எதிர்வினை மிகச் சிறப்பாக உள்ளது. ஏனெனில், ஏற்கெனவே சுமார் 261 ரோட்டராக்ட் சங்கங்கள் வரவுள்ளன என்றார்.

இன்றைய இளைஞர்கள் சமூக மாற்றத்தின் வாகனங்கள் என்று அழைத்த RAC மும்பை ஜெனித் பதிவுத் தலைவர் அகன்ஷா சாங்க்வி, சேவையின் வழியாகத் தோழமையை முன்னிறுத்துவதற்கு, என்றென்றும் நீடிக்கிற மாற்றத்தை உருவாக்கக்கூடிய ஒரு நோக்கத்துக்காக மக்கள் கை கோக்கவேண்டும், ஒன்றாகச் சேரவேண்டும்'' என்றார்.■

# மாலேகாவ்ன் ரோட்டரி சங்கம் நடத்திய மருத்துவ முகாம்

ரோட்டரிசெய்திக்குழு




RC மாலேகாவ்ன், RID 3142, மகாராஷ்டிரத்தின் பக்லான் மாவட்டத்திலுள்ள தொலைதூரக் கிராமமாகிய ததானியில் ஒரு மருத்துவ முகாமை நடத்தியது. பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட 800க்கும் மேற்பட்ட கிராமவாசிகள் இதனால் பலன் பெற்றார்கள். ரத்த அழுத்தம், நீரிழிவு, மூட்டுவலி, தோல், கண்கள், காதுகளில் நோய்த்தொற்றுகள் தொடர்புடைய பிரச்சனைகளைக் கொண்ட நோயாளிகளுக்கு 20க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் சிகிச்சையளித்தார்கள்.

கண்புரை கொண்ட பதினொரு நோயாளிகளுக்கு மாலேகாவ்ன் ரோட்டரி கண் மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை அளிக்கப்பட்டது. நோயாளிகள், அவர்களைக் கவனித்துக் கொள்வோருக்கான போக்குவரத்து மற்றும் உணவை இந்தச் சங்கம் கவனித்துக்கொண்டது.

முகாமுக்கு வருகை தந்தவர்களுக்கு முகமூடிகளும் தூய்மைப்படுத்திகளும் வழங்கப்பட்டன. கோவிடிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காக, கை கழுவுதல், முகமூடிகள், தூய்மைப்படுத்திகளைப் பயன்படுத்துதல் உள்ளிட்ட அனைத்து நெறிமுறைகளையும் அவர்கள் கடைப்பிடிக்கவேண்டும், சமூக இடைவெளியைப் பின்பற்றவேண்டும் என்று மருத்துவர்கள் வலியுறுத்தினார்கள்.■

THE ODYSSEY
ROTARY INSTITUTE 20-21

# காலநிலை மாற்றத்துக்கு எதிராக ஒரு பரப்புரையைத் தொடங்கவேண்டும்

V முத்துக்குமரன்

மெய்நிகர் ரோட்டரி சந்திப்பில் உள்நோக்குச் சிந்தனை மிக்க இரண்டு நிகழ்ச்சிகளின் ஒரே நிகழ்ச்சி நிரல், பலப்பல மரங்கள், உயிரியல் பன்முகத்தன்மைக்கு நடுவில் வருங் காலத் தலைமுறைகள் பாதுகாப் பாக, மகிழ்ச்சியாக வாழ்வதற்காகச் சுற்றுச்சூழலையும் நம்முடைய பூமியையும் காக்கும் தேவைதான்.

சூழலியலாளர், உணவு இறை யாண்மைக் கருத்தாளர், ஆசிரியர் வந்தனா சிவா மற்றும் மணிப்பூரைச் சேர்ந்த ஒன்பது வயது லிசிப்ரியா கங்குஜம் ஆகியோர் இந்த நிகழ்ச்சி களை வழிநடத்தினார்கள், காலநிலை மாற்றம், மாசு, நோய்ப்பரவல்கள், பிரபஞ்சத்தில் உள்ள, செடி கொடிகள், மரங்கள் உள்ளிட்ட அனைத்து உயிரினங்களுடைய நலனையும் மதிக்கிற ஒரு சூழமைப்பில் மனித குலத்தின் நீடித்த வளத்தை உறுதிசெய்வதற்கான, சுற்றுச் சூழலுக்கு இதமான இயற்கைப் பண்ணைகள் போன்ற தலைப்புகளை விளக்கினார்கள்.

இந்த நோய்ப்பரவல் ஒரு நல நெருக்கடியாகக் கருதப்படுகிறது, ஆனால், நாம் வணிகக் கட்டுப்பாடு களை நீக்கி, மனிதச் செயல்பாட்டின் மிக உயர்ந்த பலனாகப் பேராசை யைக் கொண்டாடியதால்தான் முந்தைய சில பத்தாண்டுகளில் நோய்ப்பரவல்களும் தொற்று நோய்களும் வந்தன என்பதை நாம் புரிந்துகொள்ள மறுக்கிறோம்'' என்றார் வந்தனா. பூமியிலிருந்து, விவசாயிகளிடமிருந்து, சமூகங்களிலிருந்து, சமுதாயங் களிலிருந்து பறிப்பதன் மூலம் செல்வம் உருவாக்கப்படுகிறது. ஆனால், உண்மையான வளர்ச்சி என்பது, மரங்களை வளர்த்தல், குழந்தைகளுடைய நலன் மற்றும் சமூக நலனை முன்னிறுத்தவேண்டும்'' என்றார் அவர்.

நம் சமூகத்தில் சமநிலையின்மை முற்றிலும் பொறுத்துக்கொள்ள இயலாததாகிவிட்டது. ஏனெனில், மனித குலத்தில் பாதியைவிடக் கூடுதலான செல்வத்தை .0001 சத விகித மக்கள் கட்டுப்படுத்துகிறார்கள்.

நோய்ப்பரவலுக்கான வேர்கள் சூழியல் சிதைவில் உள்ளன என்பதையும், உலகுக்கு உணவளித்தல் என்ற பெயரில் நம்முடைய பேராசையானது காடுகளுக்குள் நுழைந்ததால் 300க்கும் மேற்பட்ட தொற்றுநோய்கள் வந்துள்ளன என்பதையும் நாம் மறந்துவிடுகிறோம்.

## பெருநிறுவனங்களா? அல்லது, நலனா?

பூமியின் நுரையீரல்களையும் கல்லீரல்களையும் எரித்து அமேசான் காடுகளில் வளர்க்கப்படுகிற, மரபணு அடிப்படையில் மாற்றப்பட்ட சோயா பீன்ஸில் வெறும் 10 சதவிகிதத்தை தான் மனிதர்கள் உட்கொள்கிறார்கள், மீதமிருப்பது விலங்குகளுக்கு மற்றும் உயிரியல் தீவனத்துக்குச் செல்கிறது என்று வந்தனா குறிப்பிட்டார். சில நிறுவனங்களுக்காக, பூமியின் பரப்பையே நாம் அழிக்கிறோம்.

பசுமை இல்ல வாயு (GHG) உமிழ்வுகளில் கிட்டத்தட்ட 20 சத விகிதம், முந்தைய 2–3 பத்தாண்டு களில் காடுகள் அழிக்கப்பட்டதால் உண்டாகியுள்ளது; அத்துடன், தொழில் துறை மற்றும் பன்னாட்டு உணவு அமைப்புகளைச் சேர்த்தால், அது நம் நலனை அழிக்கிறது. நீடிக்க இயலாத உணவு வழங்கல் அமைப்பிலிருந்து 50 சதவிகித GHG உமிழ்வுகள் வருகின்றன என்று நாம் பேசுகிறோம் என்று அவர் விளக்கினார்.

நம்முடைய நலன் உணவிலிருந்து தான் தொடங்குகிறது என்பதால், உணவு என்பது வாழ்க்கைக்கான நாணயமாகும். காலநிலை மாற்றம், இருத்தலியல் சவால்கள், நலன் மற்றும் நோய்ப்பரவல்கள் என்று நாம் சந்திக்கும் எல்லா நெருக்கடிகளுக்கும் பின்னால் நீடித்திருக்காத, நியாயமற்ற ஓர் உணவு அமைப்பு இருக்கிறது என்பதை நாம் உணரவேண்டிய நேரம் இது.

விவசாயத்தில் பயன்படுத்தப்படும் வேதிப் பொருட்களால் நம்முடைய உணவு 60–70 சதவிகித ஊட்டச் சத்துகளை இழந்துவிடுகிறது. அதன்பிறகு, நம்முடைய உணவில் ஒரு பகுதியை நாம் குப்பை உணவாக ஆக்குகிறோம். நம் குழந்தைகளைப் பருமனானவர்களாக, நீரிழிவுப் பிரச்சனை கொண்டவர்களாக ஆக்கும் ஒரு வறுவல் பொட்டலத்துக்காக நாம் நம்முடைய விவசாயிகளுக்குத் தருவது, வெறும் .04 பைசாதான். உயிரியல் பன்முகத் தன்மை என்பது, நம்



*லிசிப்ரியா கங்குஜம்*

முடைய சூழமைப்புகளின் நலனாகும். மேலும், பூமியை மீண்டும் உருவாக்குகிற ஓர் அக்கறைப் பொருளாதாரத்தை உருவாக்குகிற அடுத்த பத்தாண்டுப் பயணத்தில் ரோட்டரி எங்களுடன் சேரவேண்டும்'' என்று அவர் சுட்டிக்காட்டினார்.



வந்தனா சிவா.

### காலநிலைச் சட்டங்களை இயற்றவேண்டும்

மாசு மற்றும் பிற சூழியல் நெருக்கடிகளுக்கு நீண்ட கால, நிரந்தரத் தீர்வுகளைக் கண்டறிவதற்கு உலகத் தலைவர்கள் இப்போதே செயல்படவேண்டும் என்று அழைப்பு விடுத்த லிசிப்ரியா, புபனேஸ்வரில் வளர்ந்தவர்.

காலநிலை மாற்ற மசோதாக் களைக் கார்பன் உமிழ்வுகள் மற்றும் GHGஐக் கட்டுப்படுத்தும் சட்டங்களாக இயற்றவேண்டும் என்று PM நரேந்திர மோடி மற்றும் பாராளுமன்றத்தில் உள்ள MPக்களைக் கேட்டுக் கொள்கிறார் இவர். அடிப்படை நிலையிலிருந்தே இந்தியாவில் இந்தப் போர் தொடங்கவேண்டும் என்பதற்காக, காலநிலை மாற்றத்தைப் பள்ளிப் பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டும் என்று இவர் விரும்புகிறார்.

பள்ளிக் குழந்தைகளுக்கான "இயற்கை அன்னைக்காகத் திங்கட்கிழமை'' என்ற இயக்கத்தை லிசிப்ரியா தொடங்கியுள்ளார். ஓராண்டில் ஒரு மில்லியன் மரங்களை நடவேண்டும் என்ற இலக்கைக் கொண்ட இந்தத் திட்டத்தின் மூலம் இதுவரை 3.5 லட்சம் மரக்கன்றுகள் தளிர்த்து வளரத் தொடங்கியுள்ளன.

குழந்தைகள் இயக்கத்தின் நிறுவனரான இவர், ஆறு வயதில், மங்கோலியாவில் நடைபெற்ற UNன் பேரிடர் மேலாண்மைக் கருத்தரங்கில் கலந்துகொண்டதை நினைவு கூர்ந்தார், அது தன்னுடைய வாழ்க்கையை மாற்றிய அனுபவம் என்றார், ஸ்வீடனைச் சேர்ந்த க்ரெடா தன்பெர்க் தன்னுடைய எண்ணச் செயல் முறையில் தாக்கம் செலுத்தியதாகக் கூறினார். 2020ல், புது தில்லியில், புதுச்சேரி துணைநிலை ஆளுநர் கிரண் பேடியிடம் பன்னாட்டுக் குழந்தை மேதை விருதைப் பெற்றவர் இவர்.■

TRF உதவியுடன் நற்பணி

## குழந்தைகளுக்கான இதய அறுவைச் சிகிச்சைகளுக்கு வழி செய்யும் ரோட்டரி

ரோட்டரி செய்திக்குழு

ஹரியானாவிலிருக்கும் பல்வாலிலுள்ள சத்ய சாய் சஞ்சீவனி மருத்துவமனையில், நலிந்த குடும்பங்களிலிருந்து வருகிற அறுபத்து ஆறு சிறு குழந்தைகளுக்குப் பிறவி இதய நோய்களுக்கான அறுவைச் சிகிச்சை வழங்கப்பட்டது. RC குர்காவ்ன் ஹார்மனி இபெரிஸ், RID 3011ன் அர்ப்பணிப்புள்ள முயற்சிகளால் இது சாத்தியமானது. ரூ 1.65 கோடி மதிப்புள்ள இந்த அறுவைச் சிகிச்சைகள், RC ஃபோர்ட் வாய்னெ, RID 6540, USA வழங்கிய ஒரு பன்னாட்டு நல்கை ஆதரவின் மூலம் ஆதரிக்கப்பட்டன.

இங்கு சிகிச்சை பெற்ற இந்தக் குழந்தைகள் நாடுமுழுவது முள்ள பல மாநிலங்களிலிருந்து வந்தார்கள். சங்கத் தலைவர் முக்தா மல்கோத்ரா, முன்னாள் தலைவர் அப்துல் அஜீஜ் செயித் மற்றும் சங்க உறுப்பினர் விவேக் கௌர் ஆகியோர் சேர்ந்து, இந்தத் திட்டத்துக்கு ரூ 29.6 லட்சம் பங்களித்தார்கள்.

DG சஞ்சீவ் ராய் மெஹ்ரா, PDG வினய் பாட்டீயா மற்றும் மாவட்டச் செயலாளர் மோகித் ஆனந்த் பாட்டீயா ஆகியோர் முன்னிலையில் இக்குழந்தைகளுக்கு வாழ்க்கைப் பரிசுச் சான்றிதழ்களும் சில பொம்மைகளும் வழங்கப்பட்டன.



சங்க தலைவர் முக்தா மல்கோத்ரா குழந்தை நோயாளியுடன்.

இந்தச் சங்கம் இந்த மருத்துவமனைக்கு ஓர் இதய மற்றும் நுரையீரல் இயந்திரத்தை வழங்கியது. இந்த மருத்துவமனை தன்னுடைய அறுவைச் சிகிச்சை அரங்கத்தையும், ஓர் ICUஐயும் கட்டுவதற்காக, GGக்களின் வழியாக நாங்கள் அவர்களுக்கு ஆதரவளித்து வருகிறோம். இதுபோன்ற இன்னும் பெரிய மற்றும் இன்னும் ஆழமான இணைப்புகளைத் தொடர்ந்து பெற இயலும் என்று நாங்கள் நம்புகிறோம். ஏனெனில், 15,000க்கும் மேற்பட்ட குழந்தைகள், சிகிச்சைக் காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள், அவர்களுக்கு விரைவில் சிகிச்சை அளிக்கப்பட்டால்தான் அவர்களில் பலரைக் காப்பாற்ற இயலும் என்றார் முக்தா.■

இது எங்கள்
செயல் திட்டம்

# நம் முக்கியத்துவம்: நாம் நம்முடைய மாறும் திறனைப் பெருக்குகிறோம்

Rotary

**நாம் எப்படி இணைகிறோம், சேவை புரிகிறோம் என்பதை மறு கற்பனை செய்தல்.**
நாம் இன்னும் விரைவாகவேண்டும், புதிய யோசனைகளுக்கு எதிர்வினையாற்ற வேண்டும், மனத்தைத் திறந்துவைக்கவேண்டும் என்று நம் செயல் திட்டம் நம்மைக் கேட்கிறது. Covid–19 நோய்ப்பரவல் நமக்குக் காண்பித்துள்ளதுபோல், உலகம் விரைவாக மாறக்கூடும், நாம் எப்போதும் தயாராக இயலாத வழிகளில் அந்த மாற்றம் நிகழக்கூடும்.

ஆனால், நம்முடைய உறுப்பினர்கள் மீள்திறன் கொண்டவர்கள், ஒவ்வொரு சாதனையையும் பின்னடைவையும் கற்றல், புதுமைச் சிந்தனைக்கான ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்த விரும்புகிறவர்கள். நம்மால் பழையதையும் புதியதையும் சமநிலைப்படுத்த இயலும், நம்மை முன்னே அழைத்துச்செல்லக்கூடிய வகை அனுபவங்கள், உறவுகள், கட்டமைப்புகளை உருவாக்க இயலும்.

**நாம் என்ன செய்யப்போகிறோம்?**

மேலும் இணைப்புகளை உருவாக்குவதற்கு, பங்கேற்புக்கான புதிய வாய்ப்புகளை உருவாக்குவதற்குத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவோம்

ரோட்டரியின் எதிர்காலத்தைப்பற்றித் தீர்மானங்களை எடுக்கும்போது, பலவிதமான குரல்களைக் கவனித்துக் கேட்போம்

புதுமையான எண்ணங்களை ஆதரிப்பதற்கும் பரிசோதிப்பதற்கும் இடத்தை, வளங்களை உருவாக்குவோம்

கட்டுப்படுத்தும் மாதிரிகள், கட்டமைப்புகள் மற்றும் தொழில் செயல்முறைகளை மேம்படுத்துவோம்

**உங்கள் சங்கம் என்ன செய்யலாம்?**

**கட்டமைக்கலாம்**
புதிய யோசனைகள் அல்லது செயல்பாடுகளை முயல்வதற்கான ஒரு நிதியை

**முயன்று பார்க்கலாம்**
ஒரு புதிய சந்திப்பு நேர அட்டவணையை, இடத்தை அல்லது வடிவத்தை

**மறு மதிப்பீடு செய்யலாம்**
உங்கள் கட்டுப்படுத்தும் கட்டமைப்பை இன்னும் செயல்திறன் கொண்டதாக ஆக்குவதற்கு

**அழைக்கலாம்**
உறுப்பினர் அல்லாத ஆலோசகர்களை, புதிய பார்வைக் கோணங்களைப் பகிர்ந்துகொள்வதற்கு

**மேலும் அறிய விருப்பமா?**
முழுச் செயல் திட்டத்தை இங்கு படியுங்கள்: rotary.org/actionplan

# ரோட்டரி, அரிமா சங்கங்கள் இணைந்து செயல்படலாம்: RIPE சேகர் மேத்தா

V முத்துக்குமரன்

பிப்ரவரியின் முதல் வாரத்தில் அறிமுகப்படுத்தப் படவிருக்கும் புதிய உறுப்பினர் முழக்கம், ஒவ்வொருவரும் ஒருவரை அழைத்து வாருங்கள். உறுப்பினர் எண்ணிக்கை வளர்ச்சிக்கான பொறுப்பை சங்க நிலைக்கு, நகர்த்த விரும்புகிறோம்'' என்றார் RIPE சேகர் மேத்தா. கிழக்கு இந்திய அரிமா தலைமை அகாதெமி நடத்திய ஓர் இணையக் கருத்தரங்கில் பேசுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வளர்ச்சித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணம், நோய்ப்பரவல் காரணமாகத் தடுப்பு மருந்துகள் மற்றும் தடுப்பு மருந்து வழங்கல் திட்டங்களுக்குத் திருப்பிவிடப்படுகிறது என்ற உண்மையை எண்ணி அவர் கவலை தெரிவித்தார். வேலை இழப்புகள், பள்ளிகளிலிருந்து வெளி யேறுகிறவர்களுடைய எண்ணிக்கை மற்றும் வறுமை வளர்ந்துவருகிற இப்போதைய சூழ்நிலையில், நாம் இவற்றுடன் போராடவேண்டும்'' என்றார் அவர்.

இதையே நேர்விதமாகவும் பார்க்கலாம், நோய்ப்பரவலானது இன்னும் மேம்பட்ட, இன்னும் நலமான ஒரு வாழ்க்கையை நடத்துவதற்கான சில முக்கியப் பாடங்களை நமக்குக் கற்றுத்தந்துள்ளது. நாம் சுற்றுச்சூழலை மதிக்கவேண்டும். நம்முடைய அன்புக்குரியவர்களுடன் நாம் இணைந்திருக்கவேண்டுமென்றால், குடும்பத்துடன் ஒரு நலமான வாழ்க்கைமுறையைப் பின்பற்றுவது நமக்கு முக்கியம் என்று மேத்தா விளக்கினார்.

கோவிட் தடுப்பு மருந்து வழங்கல் திட்டங்களில் பங்கேற்பதாக RI வாரியம் தீர்மானமெடுத்துள்ளது, ரோட்டரி இதுபற்றி மாநில அரசாங்கங்களுடன் பேசிவருகிறது, சமீபத்தில், மிகப் பெரிய மாநிலமான உத்தரப்பிரதேசத்தில் தடுப்பு மருந்து வழங்கல் செயல்முறையைத் தொடங்குவதற்கு உதவும்படி ஓர் உயர்நிலை அலுவலர் ரோட்டரியை நாடியுள்ளதை மேத்தா சுட்டிக் காட்டினார்.

### இணைந்து செயல்படக்கூடிய NGOக்கள்

உலகில் மனிதாபிமானச் சேவைகளுக்கான தேவை வளர்ந்து வருவதால், ரோட்டரி மற்றும் அரிமா சங்கங்கள் ஒன்றாகச் சேர்ந்து பணியாற்ற வேண்டும், ஒருவருக் கொருவர் கை கொடுக்கவேண்டும் என்று மெத்தா கூறினார். அரிமா சங்கம் கண் பராமரிப்பு மற்றும் தொடர்புடைய சேவைகளில் சிறந்து விளங்குகிறது, ரோட்டரியோ எழுத்தறிவு, நீர் மற்றும் தூய்மை போன்ற வேறு கவனப் பகுதிகளைக் கொண்டுள்ளது. நாம் பெருநிறுவனங்கள் மற்றும் உள்ளூர் அரச ாங்கங்களுடன் இணைந்து பணியாற்றவேண்டும். தொடக்கத்தில், நாம் ஒரு சிறிய திட்டத்தில் பணியாற்றத் தொடங்கலாம், ஆனால், இன்னும் பெரிய காட்சியை நாம் மறந்துவிடக்கூடாது என்றார் அவர். இளம்பிள்ளைவாதத்தை எதிர்ப்பதற்காக WHO, UNESCO, பில் கேட்ஸ் அறக்கட்டளை மற்றும் பிற உள்ளூர் அமைப்புகளுடன் நாம் ஒரு பரந்த கூட்டணியை உருவாக்கியது போல, இந்த இரு அமைப்புகளும் அடிமட்ட நிலையில் கூட்டணிகளை உருவாக்க வேண்டும்.

தான் 15 கண் மருத்துவமனைகளை (அவற்றில் 11 மேற்கு வங்காளத்தில்) அமைத்ததாக நினைவு கூர்ந்த அவர், கண் பராமரிப்புத் துறையில் தன்னுடைய பங்களிப்புக்காகப் புகழ் பெற்றுள்ள அரிமா சங்கத்துடன் வல்லமையைப் பகிர்ந்துகொள்வதில் ரோட்டரி மிகுந்த ஆர்வத்துடன் இருக்கும் என்றார்.

RIPN ஜெனிஃபர் ஜோன்ஸ் பேசுகையில், இந்த இரண்டு சேவை அமைப்புகளும் தங்களுடைய சமூகத் திட்டங்களின் தாக்கத்தை மதிப்பிடுவதற்குச் சரியான அளவீடு கள் மற்றும் அளக்கும் கருவிகளைக் கண்டறிவதற்குக்'' கடுமையாக முயல்கின்றன என்றார். நாம், உலகை இயக்கும் பொருளாதார



RIPE *சேகர் மேத்தா*



RIPN *ஜெனிஃபர் ஜோன்ஸ்*

எஞ்சின்கள். கோவிட் எதிர்வினை நல்கைகள் மற்றும் பிற நல்கைகளின் வழியாக ரோட்டரி $29 மில்லியன் வழங்கியிருந்தாலும், மாவட்ட மற்றும் சங்க நிலைகளில் நாம் $100 மில்லியனுக்கு மேற்பட்ட மதிப்புள்ள உதவித் திட்டங்களை நிறைவேற்றியிருப்போம் என்றார்.

ரோட்டரியில் பெண் உறுப்பினர்களுடைய எண்ணிக்கை 25 சதவிகிதமாக உள்ளது. மேலும், தங்களுடைய தலைமைத் திறன்களை வளர்த்துக்கொள்ள அவர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்படவேண்டும். இது நிகழவேண்டுமென்றால், நம்முடைய வளர்ச்சி வியூகத்தில் பன்முகத்தன்மை, சமநிலை மற்றும் உள்ளடக்கல் ஆகியவை முக்கியமாகும்'' என்று அவர் கூறினார்.

புரூக்ளின், நியூயார்க்கிலிருந்து அரிமா இன்டர்நேஷனலின் முதல் துணைத்தலைவர் டக்ளஸ் அலெக்ஸாண்டர் பேசுகையில், நாம் முன்னேறவேண்டுமென்றால், புதிய தகவல் தொடர்பு வழிகளை ஏற்றுக்கொள்ளவேண்டும், மாற்றத்தை வரவேற்கவேண்டும்'' என்றார்.

நியூயார்க்கில் புற்றுநோய் மற்றும் நீரிழிவுச் சிகிச்சையில் அரிமா சங்கத்தின் முயற்சிகளை அவர் நினைவு கூர்ந்தார்.



*சர்வதேச அரிமா கழக* V P
*டக்ளஸ் அலெக்ஸாண்டர்*

மின்னசோட்டாவிலிருந்து இரண்டாவது V P பிரயன் ஷீஹன் மற்றும் கனடாவிலுள்ள எட்மன்டனிலிருந்து மூன்றாவது V P டாக்டர் பேட்ரீசியா ஹில் ஆகியோர், “புதிய இயல்பை”ச் சமாளிப்பதுபற்றிய தங்கள் பார்வைகளைப் பகிர்ந்து கொண்டார்கள்.■

# குளிர்கால மேலங்கிகளை வழங்கிய ஜலந்தர் ரோட்டரியன்கள்

ரோட்டரி செய்திக்குழு



RC ஜலந்தர், RID 3070ஐச் சேர்ந்த 20க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் ஒன்றாகச் சேர்ந்து, 550 நலிந்த குடும்பங்களுக்குக் குளிர்கால மேலங்கிகளை வழங்கினார்கள். இந்த முன்னெடுப்பு பல நோக்கங்களை நிறைவு செய்தது. நகரின் வெவ்வேறு பகுதிகளில் இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக நாங்கள் குறுங்குழுக்களை உருவாக்கினோம். இந்தத் திட்டத்தைச் சிந்தித்து ஆதரித்தவர் PDG S V ஹன்ஸ், என்றார் சங்கத் தலைவர் பிரப்பால் சிங் பன்னு அவர்களுடைய மனைவி ஜாஸ்மின் பன்னு.

எடை தூக்குவோர் மற்றும் பிற ரயில்வே ஊழியர்களுடைய நன்மைக்காக, ரயில் நிலையத்தில் ஒரு சிறப்பு வழங்கல் திட்டம் நடத்தப்பட்டது. விளையாட்டுப் பயிற்சியகங்கள் மற்றும் சேரிக் குடியிருப்புகள் போன்ற இடங்களில் நிகழ்ச்சிகளை நடத்திக் குளிர்கால மேலங்கிகளை மொத்தமாக விநியோகித்தது இச்சங்கம்.

இதனால் பலன் பெற்றோர், ரிக்ஷா இழுப்பவர்கள், அன்றாடக் கூலித் தொழிலாளர்கள், எடை தூக்குவோர், சேரிப் பகுதிகளில் வாழ்வோர், மாற்றுத் திறனாளி மக்கள், வீட்டு வேலை செய்கிறவர்கள் மற்றும் தெருவில் விற்பனை செய்வோர், பிர்ரிங் ஹாக்கி அகாதெமியில் பயிற்சி பெறுவோர் ஆவர்.■

THE ODYSSEY
ROTARY INSTITUTE 20-21

# இந்தியாவில் விளையாட்டு வீரர்கள் இளைஞர்களை ஊக்குவிக்கிறார்கள்: ராகுல் திராவிட்

V முத்துக்குமரன்

திறமை, கடின உழைப்பு, நோக்கத்தின் நேர்மை, எதிர்த்தரப்பை மதித்தல் மற்றும் ஆட்ட உணர்வு போன்ற பல விளையாட்டுக் குணங்கள் ஒன்றாகச் சேர்ந்தால்தான், விளையாட்டு வீரர்கள் தாங்கள் தேர்ந்தெடுத்த துறையில் நெடுங்காலம் நன்றாகச் செயல்படலாம், வெற்றியைச் சாதிக்கலாம் என்றார் இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான ராகுல் திராவிட்.

மெய்நிகர் ரோட்டரி சந்திப்பில், ஒரு கேள்வி பதில் நிகழ்ச்சியில் விளையாட்டு எழுத்தாளர் மற்றும் ஆலோசகர் எடிட்டர் அயாஜ் மேமனுடன் பேசிய திராவிட், விளையாட்டு விதிமுறைகளை, கட்டுப்பாடுகளை நாம் மதிக்கவேண்டும், இந்தச் செயல்பாட்டின் பரந்த நோக்கத்தைப் புரிந்துகொள்ளவேண்டும், அதற்கு விளையாட்டுத்தன்மை மிகவும் முக்கியமானது. “நீங்கள் எவ்வளவு நாள் ஒரு விளையாட்டை விளையாடுகிறீர்களோ, அந்த நாட்களுக்கு நீங்கள் அந்த விளையாட்டின் நியாயமான பாதுகாவலர்களாக இருக்கவேண்டும்” என்று டான் பிராட்மன் இதைச் சரியான சொற்களில் விவரித்திருக்கிறார். ஒருவர் வெற்றிபெறுவதற்காகவும், 10–15 ஆண்டுகளுக்குப் பணம் சம்பாதித்துவிட்டு விலகிச் செல்வதற்காகவும்மட்டும் களத்தில் இறங்குவதில்லை. என்றார்.

இந்தியா 1983 உலகக் கோப்பையில் பெற்ற வெற்றி நம் நாட்டில் கிரிக்கெட் சூழலை மாற்றியது. அதுவரை டெஸ்ட் கிரிக்கெட் தான் ஆர்வத்துடன் பார்க்கப்பட்டது. 1970–80களில் வளர்ந்துவந்த மற்ற திறமையாளர்களோடு நானும் இன்னொரு சுனில் கவாஸ்கராக, குண்டப்பா விஸ்வநாத்தாக, கபில் தேவாக ஆகவேண்டும் என்று ஆசைப்பட்டேன்.”

1983ஐப்போல், 2011லும் M S தோனியின் தலைமையின் கீழ் இந்திய அணி உலகக் கோப்பையை வென்றது. அதைக் கண்டு தன்னுடைய மகன் மிகவும் வியந்து நின்றதாகத் திராவிட் கூறினார். விளையாட்டு என்பது வெறுமனே வெல்வது அல்லது தோற்பது மற்றும் நிதி சார்ந்த பலன்களைப் பெறுவது இல்லை, நம் நாட்டிலுள்ள இளைஞர்களிடையே நீங்கள் சம்பாதிக்கும் மதிப்பும் அதில் உள்ளது. ஆகவே, நீங்கள் உங்களைச் சரியாக வழி நடத்திக்கொள்ளவேண்டும், நீங்கள் விரும்புவதைச் செய்வதும் இளைஞர்களை ஊக்குவிப்பதும் ஒரு சலுகை மிகுந்த நிலையாகும்.”

### பின்னடைவுகள், தோல்விகளைச் சந்தித்தல்

தன்னால் உலகக்கோப்பை ஒன்றை வெல்ல இயலவில்லை என்பதும், 2007 போட்டித்தொடரில் முன்கூட்டியே வெளியேற்றப்பட்டதும் அவருக்கு இன்னும் வருத்தம் தருகிறது. அது போன்ற தோல்விகளை நான் சந்திக்கவேண்டும், அவற்றிலிருந்து கற்றுக்கொள்ளவேண்டும், ஆனால், அதிலேயே நெடுநாள் தங்கியிருக்க இயலாது என்றார்.

கவாஸ்கர், சச்சின் டெண்டுல்கர் மற்றும் தோனி போன்ற சிறந்த வீரர்கள் தொடர் தோல்விகளுக்குப் பிறகு டெஸ்ட் அணித் தலைமையை விட்டார்கள், ஆனால் நீங்கள், இங்கிலாந்தில் ஒரு தொடரை வென்றபிறகு தலைமையை விட்டுக்



*இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ராகுல் திராவிட் மற்றும் விளையாட்டு எழுத்தாளர் அயாஜ் மேமன்.*

கொடுத்தீர்கள். அதைக் கொஞ்சம் விளக்க இயலுமா? என்று கேட்டார் மேமன்.

இங்கிலாந்தில் ஒரு தொடரை வென்ற பிறகு, ஒருவர் அணித் தலைமைக்கு 100 சதவிகித ஆற்றலையும் மன இடத்தையும் வழங்கவேண்டும் என்று நான் அறிந்து கொண்டேன், நான் அந்த நிலையில் இல்லை என்பதை உணர்ந்தேன், நான் மனத்தளவிலும் உடலளவிலும் சோர்ந்திருந்தேன், அதைத் தொடர்ந்து முன்னெடுத்துச்செல்ல என்னால் இயலவில்லை. ஆகவே, அதை இன்னொருவருக்குத் தந்துவிடலாம் என்று நான் தீர்மானித்தேன்."

தலைமைப்பண்புக் குணங்களைப் பற்றிய ஒரு நேரடிக் கேள்வியை மேமன் எழுப்பியபோது, இந்தியக் கிரிக்கெட்டின் "சுவர்" என்று பாராட்டப்படும் திராவிட், அது அனைவரும் ஒப்புக்கொள்கிற தலைமையாக இருக்கவேண்டும் என்றார். அதிகாரத்தால் வழி நடத்துவது, கொடுங்கோல் ஆட்சியாளரைப்போல் நடந்து கொள்வது ஆகியவையெல்லாம் இனிமேல் செல்லாது. மேம்பட்ட பலன்களைப் பெறவேண்டுமென்றால், எல்லாரும் சேர்ந்து அறிவை, தகவல்களைத் திரட்டவேண்டும் என்பதற்கான ஒரு தேவையைத் தகவல் பெருவெடிப்பு எழுப்பி யுள்ளது." இந்தியக் கிரிக்கெட் அணித்தலைவராக உள்ள ஒருவர் தன்னுடைய அணி உறுப் பினர்களுடைய ஒட்டுமொத்தத் திறன்களையும் திறமைகளையும் இணக்கமாக ஒருங்கிணைக்க இயல வேண்டும், அப்போதுதான் களத்தில் பலன்களைச் சாதிக்க இயலும் என்றார்.

19 வயதுக்குட்பட்டவர்களுக்கான உலகக் கோப்பையை வென்றபிறகு, அணித்தலைவர் என்றமுறையில் திராவிடுக்குக் கூடுதல் பணம் கிடைத்தது. ஆனால், அது ஒரு குழு முயற்சி என்பதாலும், எங்கள் வெற்றிக்கு எல்லாரும் பங்களித் தார்கள் என்பதாலும், பரிசுப் பணத்தைச் சமமாகப் பகிர்ந்தளிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டேன்."

பெங்களூர் பல்கலைக் கழகம் வழங்கிய கௌரவ முனைவர் பட்டத்தை அவர் நிராகரித்து விட்டார். என் தாய், 56–57 வயதில் கலைத்துறை முனைவர் பட்டம் பெற்றார். ஆகவே, எங்கள் குடும்பத்தில் இரண்டு டாக்டர்கள் உள்ளார்கள் (அவருடைய மனைவி ஓர் அறுவைச்சிகிச்சை வல்லுனர்). தனிப்பட்ட முறையில், நான் இந்த விருதிற்கு பொருந்த வில்லை. ஆண்டின் மிகச் சிறந்த வீரருக்கான ICC விருது, பத்ம ஸ்ரீ, பத்ம பூஷண் போன்ற பல விருதுகளை நான் என்னுடைய கிரிக்கெட் திறமைக்காகப் பெற்றுள்ளேன்" என்றார்.■

---

TRF **உதவியுடன் நற்பணி**

# ஜல்கான் மருத்துவமனையில் கோவிட் ICUஐ திறக்கிறது ரோட்டரி

ரோட்டரி செய்திக் குழு

RC டல்லஹஸ்ஸீ, USA, RID 6940ஐ ஒரு பன்னாட்டுக் கூட்டு நிறுவனமாகக் கொண்ட ஒரு பன்னாட்டு நல்கை ஆதரவின் வழியாக, RC ஜல்கான் வெஸ்ட், RID 3030, டாக்டர் உல்ஹாஸ் படீல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவ மனையில் ஒரு கோவிட் ICU பிரிவை நிறுவியது. இத்திட்டத்துக்கு ரூ.34 லட்சம் செலவானது.

இந்த ICU பிரிவுடன் இணைந்த ஒரு தனித்துவ மான கோவிட் பிரிவு, செயற்கை மூச்சுவிடல் கருவிகள், மோட்டரால் இயங்கும் படுக்கைகள், டீஃபிப்ரில்லேட்டர்கள், உட்செலுத்தல் பம்ப்கள் மற்றும் பார்வையிடும் கருவிகள், இன்னும் பலவற்றைக் கொண்ட அதி நவீனக் கருவிகள் அனைத்தையும் கொண்டுள்ளது. கோவிட் பிரிவு கொரோனா நோயாளிகளுக்கு மட்டுமில்லாமல், பிற சிகிச்சைகளுக்கும் பலன் தருகிறது. குறைந்த வருவாய்க் குடும்பங்களுக்குச் சிகிச்சைகள் இலவசமாக வழங்கப்படும் என்கிறார் சங்கத் தலைவர் துஷார் சிட்டெ.■




PDGs *கிஷோர் கேடியா மற்றும் ராஜீவ் சர்மா மருத்துவமனையில் ரோட்டரியின் கோவிட்* ICU *வை பார்வையிடுகின்றனர்.*

# ஒவ்வொரு துளியும் முக்கியம்

Go Green

பிரீத்தி மெஹ்ரா

*ரோட்டரி இன்டர்நேஷனல் "சுற்றுச் சூழலை ஆதரித்தல் என்பதைத் தன்னுடைய ஏழாவது கவனப் பகுதியாக ஆக்கியுள்ள இந்த நேரத்தில், நாங்கள் உங்களுக்காகப் "Go Green" என்கிற மாதப் பத்தியை வழங்குகிறோம். நம் பூமியைக் காப்பதற்கு நாம் எல்லாரும் தனிப்பட்டமுறையில் என்ன செய்யலாம் என்பதுபற்றிய எதார்த்தமான உதவிக் குறிப்புகள் இந்தப் பகுதியில் இடம்பெறும்.*



பூமி அன்னை அச்சம் தருகிற சுற்றுச்சூழல் மாற்றங்களை எதிர்கொள்கிறார் என்பதில் ஐயமில்லை. கடல் மட்டங்கள் ஏறிவருகின்றன, பனிப்பாறைகள் உருகுகின்றன, திடீர் வெள்ளம் போன்ற அதீதமான காலநிலை நிகழ்வுகள் வருகின்றன, இவையெல்லாம் நமக்கான எச்சரிக்கைக் குறிப்புகள்.

அச்சம் தருகிற இந்தப் போக்கை நிறுத்தவேண்டும் என்று நாம் விரும்பினால், அதைப்பற்றிப் பேசினால் போதாது, இன்னும் நிறையச் செய்யலாம். நாம் உடனே செயலில் இறங்கவேண்டும், மற்றவர்களையும் செயல்படத் தூண்டவேண்டும்.

இதற்காக நாம் எந்தப் பெரிய தியாகமும் செய்யவேண்டியதில்லை. இயற்கைக்கு இதமான வாழ்க்கை முறையைப் பின்பற்றுகிறவர்கள் வசதிகளை விட்டுக்கொடுத்துவிட வேண்டும், கடினமான, நேரமாகிற வேலைகளைச் செய்யவேண்டும், அதனால் வாழ்க்கையில் எந்த மகிழ்ச்சியும் இல்லாமல் போய் விடும் என்ற எண்ணத்தில் உண்மை இல்லை.

நம்முடைய அன்றாடப் பழக்கங் களில், நாம் எடுக்கிற தீர்மானங்களில் சில சிறிய மாற்றங்களைக் கொண்டு வந்தாலே போதும். உண்மையில், நாம் ஒவ்வொருவரும் நம்முடைய வளங்களைச் சற்று உணர்ந்து பயன்படுத்தினாலே போதும், தொலைநோக்கில் நாம் மிகப் பெரிய மாற்றங்களைக் கொண்டுவரலாம், இந்த உண்மை பலருக்கு வியப்பைத் தரும். பசுமைச் செயல்பாடுகளைத் தொடங்குவதற்கு மிகச் சிறந்த இடம், நம் வீடுதான்.

**முதலில், தண்ணீரின்மீது கவனம் செலுத்துவோம்.**

புவி வெப்பமாதலை எதிர்ப்பதற்கான மிகவும் செயல்திறன் மிக்க, சுற்றுச் சூழல் அடிப்படையில் சிறந்த வழி, தண்ணீரை சேமிப்பதுதான்.

நகர்ப்புறத்தில் இருக்கும் இந்தியர்கள் ஒவ்வொருவரும் ஒரு நாளைக்குச் சராசரியாக 135 லிட்டர் நீரைப் பயன்படுத்துகிறார்கள் என்று தெரிகிறது, இதில் வெறும் 3 லிட்டர்தான் குடிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது. மீதமுள்ள அனைத்தும் சமைக்க (4 லிட்டர்), குளிக்க (20 லிட்டர்), கழிவுகளை நீக்க (40 லிட்டர்), துணி துவைக்க (40 லிட்டர்), பாத்திரம் தேய்க்க (20 லிட்டர்) மற்றும் தோட்டத்துக்குச் (23 லிட்டர்) செல்கிறது.

நம்மில் பெரும்பாலானோர் நீரைத் தூய்மைப்படுத்துவதற்குப் பயன்படுத்து கிற ரிவர்ஸ் ஆஸ்மோசிஸ் (RO) அமைப்பு நிறைய நீரை வீணடிக்கிறது. இதில் வடிகட்டி வெளியேற்றப்படும் தூய்மையற்ற நீரைத் திரட்டிப் பலவிதங்களில் பயன்படுத்தலாம். வெளியேற்றும் குழாய்க்குக் கீழே ஒரு பெரிய பாத்திரத்தை வைத்து, குடிக்க இயலாத இந்த நீரை தரையைத் துடைக்க, கழிப்பறைகளைத் தூய்மைப்படுத்த மற்றும் செடிகளுக்கு நீரூற்ற பயன்படுத்தலாம்.

நீங்கள் கைகளை, முகத்தைக் கழுவும்போது, பல் தேய்க்கும்போது, அல்லது சவரம் செய்யும்போது, தேவையில்லாமல் குழாயைத் திறந்து விடாமல் கவனமாக இருங்கள். குளியலறைக் குழாய்கள் பொதுவாக

ஒரு நிமிடத்துக்கு 7 முதல் 8 லிட்டர் தண்ணீரை வெளி விடுகின்றன. பல் தேய்க்கும் போது, அல்லது, சவரம் செய்வதற்கு நுரையை உண்டாக்கும்போது அவற்றை மூடி வைத்தால், மாதந்தோறும் நிறையத் தண்ணீரைச் சேமிக்கலாம்.

அடுத்தமுறை நீங்கள் ஒரு குழாயை அல்லது ஷவரை அல்லது ஃப்ளஷ் செய்யும் அமைப்பை மாற்றவேண்டுமென்றால், குறைந்த ஓட்டமுள்ள ஷவர், குழாய்க் காற்றூதிகள் மற்றும் ஓர் இரட்டை ஃப்ளஷ் அல்லது தாழ் ஓட்டக் கழிப்பறையைத் தேர்ந்தெடுங்கள். நீரைச் சேமிக்கும் இந்தப் புதிய வடிவமைப்புகள் மற்றும் தொழில்நுட்பங்கள் ஒரு மிகப் பெரிய மாற்றத்தை உண்டாக்கலாம்.

அத்துடன், ஒழுகும் குழாய்கள் ஏதும் இல்லாதபடி பார்த்துக் கொள்ளுங்கள். ஏனெனில் ஒழுகும் குழாய் ஒன்றில் நாள்தோறும் 75 லிட்டர் நீர் வீணாகலாம், ஒழுகும் கழிப்பறையில் நாள்தோறும் 700 லிட்டர் நீர் வீணாகலாம்!

ஆடைகளைத் துவைப்பதற்கு நிறையத் தண்ணீர் தேவைப்படுகிறது. ஆடைகளைச் சிறிது நேரம் நீரில் ஊற வைத்தால், குறைந்த கழுவல்களிலேயே அழுக்கு நீங்கிவிடும். இதன்மூலம், நீர்ப் பயன்பாட்டைக் குறைக்கலாம்.

துவைக்கும் இயந்திரங்களைப் பயன்படுத்துகிறவர்களுக்கு ஓர் உதவிக் குறிப்பு, முன்னாலிருந்து துணிகளைப் போடக்கூடிய இயந்திரங்கள், மேலேயிருந்து துணிகளைப் போடக் கூடிய இயந்திரங்களைவிடக் குறைவான தண்ணீரையே பயன் படுத்துகின்றன என்று தெரிகிறது.

இதையெல்லாம்விட முக்கியம், நீங்கள் ஒரு புதிய துவைக்கும் இயந்திரம் வாங்குகிறீர்கள் என்றால், ஆற்றல் செயல்திறன் பணியகத்தின் நட்சத்திரச் சான்றைக் கொண்ட ஓர் இயந்திரத்தை வாங்குங்கள். ஐந்து நட்சத்திரச் சான்றுதான் இருப்பதிலேயே மிகச் சிறந்தது. இவை வழக்கமான துவைக்கும் இயந்திரங்களைவிட 30 சதவிகிதம் குறைவான நீரையும், 25 சதவிகிதம் குறைவான மின்சாரத் தையும் பயன்படுத்துகின்றன.

மழை நீரை வருங்காலப் பயன்பாட்டுக்காகப் பயன்படுத்து வது எளிது. ஓர் எளிய நீர் திரட்டல் அமைப்பை உண்டாக்க வேண்டு மென்றால், ஒரு பெரிய உருளைப் பாத்திரம் இருந்தால் போதும், இதை வல்லுனர்கள் “மழைப் பீப்பாய்” என்பார்கள். இது கூரையிலிருந்து, பக்க நடைப் பகுதிகளிலிருந்து மற்றும் வண்டி ஓட்டும் பாதையிலிருந்து வருகிற நீரைக் குழாய்கள் மற்றும் கீழ்நோக்கி அனுப்பும் குழாய்கள் வழியாகத் திரட்டுகிறது. இவ்வாறு திரட்டப்பட்ட நீரைத் தோட்டத்தில் உள்ள செடிகளுக்கு ஊற்றலாம், தூய்மைப்படுத்தவும் பயன்படுத்தலாம்.

அந்த உருளைப் பாத்திரத்தை மறக்காமல் ஒரு மூடி அல்லது தார்ப்பாலினால் மூடிவையுங்கள், இல்லாவிட்டால் கொசுத் தொல்லை வந்துவிடும்.

காலை நேரத்தில் உங்கள் செடி களுக்கு நீர் ஊற்றுவது நல்லது. ஏனெனில், குறைவான வெப்பநிலையில் அவற்றுக்குக் குறைவான தண்ணீரே தேவைப்படும்.

சுருக்கமாகச் சொன்னால், ஒவ்வொரு நிலையிலும் நீரின் செயல் திறனை மேம்படுத்தவேண்டும், அதன் இழப்பை, வீணாவதைக் குறைக்க வேண்டும், அதுதான் நம் உத்தி.

*எழுத்தாளர் மூத்த இதழாளர், சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதிவருகிறார்.*

---

Rotary PEOPLE OF ACTION

# பாண்டிச்சேரி மருத்துவமனைகளை மேம்படுத்தும் ரோட்டரி

ரோட்டரி செய்திக்குழு

RC பாண்டிச்சேரி ஃபோர்ட், RID 2981, உறுப்பினரான சமீர் கம்ரா, பொது மருத்துவமனையிலுள்ள கோவிட் பிரிவுக்கு ரூ.50,000 மதிப்புள்ள ஒரு மேசைக் கணினியையும், இந்திரா காந்தி மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சிக் கல்வி அமைப்புக்கு ரூ.2.5 லட்சம் மதிப்புள்ள ஒரு ice maker உருவாக்கியையும் வழங்கி ஆதரித்தார்.


பனித் துகளுக்குப் பலவிதமான மருத்துவ மற்றும் ஆய்வகப் பயன்பாடுகள் உள்ளன. எடுத்துக் காட்டாக, ஃபிசியோதெரபி, கருவிகளை அளவுத்திருத்தம் செய்தல், நன்கொடையாக அளிக்கப்பட்ட உறுப்பு களின் போக்குவரத்து போன்றவற்றைக் குறிப்பிடலாம். கோவிட் பரிசோதித்தலை மேம்படுத்தவும் இது பயன்படும்” என்றார் சங்கச் செயலாளர் ராஜேஷ் கந்தமூர்த்தி.

சங்கத் தலைவர் M நந்தகுமார், பொருளாளர் ஸ்ரீகாந்த் R D, கம்ரா, அவருடைய மனைவி நளினி ஆகியோர் இந்தக் கருவிகளை மருத்துவமனை அலுவலர்களுக்கு வழங்கினார்கள்.■



RC *பாண்டிச்சேரி ஃபோர்ட் உறுப்பினர்கள் இந்திரகாந்தி மருத்துவ கல்லூரி வளாகத்தில்.*

# கோவிட் தடுப்பு மருந்து வழங்கலுக்கான ரோட்டரி செயல் படை



ரோட்டரி செய்திக்குழு

ஜனவரி 16 அன்று, இந்தியாவில் கோவிட் தடுப்பு மருந்து வழங்கல் தொடங்கப்பட்டது, முதல் தடுப்பு மருந்துகள் நலப் பணியாளர்கள், களத்தில் முன்னின்று பணியாற்றும் ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்றன.

தடுப்பு மருந்து வழங்கும் திட்டத்தில் அரசுக்கு உதவுவதற்காக, PRID அசோக் மகாஜன் தலைமையில் "ரோட்டரி இந்தியா கோவிட் தடுப்பு மருந்து வழங்கல் செயல் படை" என்ற ஒரு செயல் படையை இந்திய ரோட்டரியின் மூத்த தலைவர்கள் உருவாக்கியுள்ளார்கள். இதுபற்றி மாவட்ட ஆளுநர்களுக்கு மகாஜன் எழுதியுள்ள ஒரு கடிதத்தில், இந்தத் திட்டத்தை இந்தியாமுழுவதும் அனைத்துக் குடிமக்களுக்கும் கொண்டுசெல்வதற்கு ரோட்டரி எப்படி உதவலாம் என்பதுபற்றிய தொடக்கப் பேச்சுவார்த்தைகளை நாங்கள் நடத்தியுள்ளோம். இளம்பிள்ளைவாதத் தடுப்பு மருந்து வழங்கல் திட்டத்தைக் கையாள்வதில் நாங்கள் பெற்றுள்ள திறன் மற்றும் வலைப்பின்னல் ஆகியவை அரசுக்கு மிகுந்த மதிப்பை வழங்கும். குறிப்பாக, சமூகத்தில் சரியாகத் தகவல் சென்று சேராத சில பிரிவுகளால் உண்டாகும் சில தவறான கருத்துகளை எதிர்கொள்ள நாங்கள் உதவுவோம்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

இவர்கள் ஒரு தன்னார்வலர் குழுவை வழிநடத்தவேண்டும், பொதுமக்களிடையே தடுப்பு மருந்து பற்றிய விழிப்புணர்வை உண்டாக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். எதிர்ப்பு இருக்கும் இடங்களிலெல்லாம், அதன் செயல்திறனைப்பற்றிய முறையான தகவல்களைப் பரப்பவேண்டும் என்கிறார்.

ஒவ்வொரு ரோட்டரி சங்கமும் தன்னுடைய பகுதியில் உள்ள பெரிய அமைப்புகளின் ஆதரவை நாடவேண்டும், இந்தத் திட்டத்துக்கான அவர்களுடைய பங்களிப்புகளையும், தடுப்பு மருந்துத் திட்டத்தின்போது அவர்களுடைய பல வளாகங்களைப் பயன்படுத்திக்கொள்வதற்கான அனுமதியையும் நாடவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

நாம் ஒன்றாகச் சேர்ந்து பணியாற்றுவோம், இந்திய ரோட்டரியன்களால் கையாள முடியாத பெரிய நோய்ப் பரவல் எதுவும் இல்லை என்பதை உலகுக்குக் காண்பிப்போம்'' என்றார் மகாஜன்.■

## இந்தியாவில் ரோட்டரியின் கோவிட் தடுப்பூசி செயற்படை

**Mentor**
Shekhar Mehta, RI President 2021–22

**Senior Advisor**
PRIP Rajendra Saboo

**Senior Advisor**
PRIP Kalyan Banerjee

**Chairman**
PRID Ashok Mahajan

**Advisory Board Members**
PP SK Jain, RID 3131
PDG Dilip Salgaocar, RID 3170
PDG DN Padhi, RID 3262
PDG Upkar Singh Sethi, RID 3070
PDG JB Kamdar, RID 3232
PP Ajay Saxena, RID 3120
PDG Jogesh Gambhir, RID 3250

**Vice Chairman**
PDG Deepak Kapur

**Vice Chairman**
PDG Ranjan Dhingra

**Zonal Coordinators (Assigned Districts)**
PDG TK Ruby (3070, 3080, 3090), PDG Anoop Agarwal (3100, 3110, 3120), PDG Vinod Bhatia (3011, 3012, 3053), PDG Ashok Panjwani (3040, 3054, 3060), PDG Jayant Kulkarni (3030, 3141, 3142), PDG Rajeev Pradhan (3131, 3132, 3170), PDG Kishore Cherukumali (3020, 3150, 3160), PDG Manjunath Shetty (3181, 3182, 3190), PDG CR Raju (2981, 3231, 3232), PDG Sunil K Zachariah (3201, 3204, 3211), PDG Mukul Sinha (3240, 3262, 3291), PDG Vivek Kumar (3250, 3261), PDG Gopalakrishnan (2982,3000, 3203, 3212)

# அனைத்து ரோட்டரி சங்கங்களுக்கும் PAN, KYCக்கு அவசியம்

ரோட்டரி செய்திக் குழு

RI இயக்குநர்கள் பரத் பாண்ட்யா மற்றும் கமல் சங்வி ஆகியோர் சங்க மற்றும் மாவட்டத் தலைவர்களுக்கு எழுதிய ஒரு கடிதத்தில், இந்திய ரோட்டரி சங்கங்கள் அனைத்தும் தன்னார்வலர் பிரிவுக்காக இந்திய அரசு செயல்படுத்தியிருக்கிற புதிய விதிமுறைகள் மற்றும் கட்டுப்பாடு களுக்கு இணங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்கள். அந்தக் கடிதம் இவ்வாறு சொல்கிறது:

ரோட்டரி சங்கங்கள் சுதந்தரமான சட்ட அமைப்புகள், அவை தங்களுடைய சொந்த அமைப்பு ஆவணங்கள், சாசனத்தின் மூலம் கட்டுப்படுத்தப்படுகின்றன என்பது உங்களுக்குத் தெரியும். அதே நேரம், ஒரு ரோட்டரி சங்கம் நிறுவப்பட்டிருந்தாலும்/பதிவு செய்யப்பட்டிருந்தாலும் சரி, அவ்வாறு செய்யப்படாவிட்டாலும் சரி, அந்தச் சங்கம் 1961 வருமான வரிச் சட்டத்தின் 2(31) பிரிவின்கீழ் ஒரு நபராக''த் தகுதி பெறுகிறது, ஆகவே, அந்தச் சட்டத்தின்கீழ் அது வரிவிதிக்கப்படக்கூடிய ஓர் அமைப்பாகும்.

ஒவ்வொரு ரோட்டரி சங்கத் துக்கு ஓர் ஆண்டுச் செலவுத் திட்டம் உள்ளது, இந்தத் தொகையை உறுப்பினர்கள் திரட்டுகிறார்கள், சங்க உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட கட்டணங்கள், கருத்தரங்குகளை நடத்து வதற்கு மூன்றாம் நபர்களிடமிருந்து பெற்ற ஆதரவுத் தொகை/விளம்பர வருவாய், வங்கிக் கையிருப்பு, சங்கத்தின் இட்டுவைப்புகளில் வட்டி போன்றவற்றுக்கான (வருவாய்) ரசீது களை இது கொண்டுள்ளது.

இதன்படி, சங்கங்கள் I-T சட்டத்தின்கீழ் 'மதிப்பிடப்படக்கூடிய' ஒருவராகத் தகுதி பெறுகின்றன, இதனால், சங்கங்கள் பெறும் வருவாய்க்கு வருமான வரி விதிக்கப்படலாம். சங்கங்கள் பதிவு செய்யப்படாவிட்டால், அதனால், PANக்கு விண்ணப்பம் செய்யாவிட்டால், நடப்பில் உள்ள சட்டங்களை, அதாவது, 1961 வருமான வரிச் சட்டத்தை இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்ட KYC விதிமுறைகளுடன் சேர்த்துப் படித்தால், ரோட்டரி சங்கங்கள் இதை மீறி இயங்குகின்றன என்று கருதப்படலாம்.

இந்தத் தேவைகளை எட்டாத காரணத்தால், பல ரோட்டரி சங்கங்கள்/மாவட்டங்கள் சங்க மற்றும் அறக்கட்டளைச் செயல்பாடு களுக்காக வங்கிக் கணக்குகளைத் திறக்கும்போது சவால்களைச் சந்தித்துள்ளன. ஆகவே, ஒவ்வொரு ரோட்டரி சங்கம்/மாவட்டமும் இந்தியச் சட்டங்களுக்கு இணங்கிச் செயல்படவேண்டும்.

இதன் பொருளை விளக்குவதற்காக, அடிக்கடி கேட்கப்படும் சில கேள்விகளை (FAQகள்) RISAO எழுப்பியுள்ளது, பதிலளித்துள்ளது.

### ரோட்டரி சங்கங்களைப் பதிவு செய்வது ஏன் அவ்வளவு முக்கியமாகிறது?

சங்கங்கள் அந்தந்த நாட்டிலுள்ள அப்போதைய சட்டங்களுக்கு இணங்கவேண்டும் என்று RI எப்போதும் ஊக்குவித்துவந்துள்ளது. 2020–21 மத்திய பட்ஜெட்டைச் சமீபத்தில் இயற்றப்பட்ட 2020 நிதிச் சட்டத்துடன் இணைத்துப் படிக்கும் போது நமக்குத் தெரியவருகிற விஷயம், நன்கொடைகள்/ தன்னார்வலர் பங்களிப்புகளின் கீழ் வருகிற பரிமாற்றங்களில் வெளிப் படைத்தன்மையைக் கொண்டு வருவதில் கவனம் செலுத்துகின்றன.

ஒரு பதிவு செய்யப்பட்ட ரோட்டரி சங்கம் தனக்கென்று சுதந்தரமான வங்கிக் கணக்கு, பதிவுசெய்யப்பட்ட முகவரி மற்றும் PANஐக் கொண்டி ருக்கலாம், பொருந்தும் அனைத்து நிதிப் பரிமாற்றங்களுக்கான KYCக்கு இவை இப்போது கட்டாயமாகும், இவற்றை வருமான வரி மதிப்பீட்டு அலுவலகம் எப்போது வேண்டு மானாலும் ஆராயலாம்.

### பதிவு செய்ய எந்தெந்த சட்டப் படிநிலைகள் தேவை?

உங்கள் சங்கத்துக்குக் கிடைக்கும் சிறந்த தெரிவுகள் மற்றும் செயல் முறைகளை அறிவதற்கு, நீங்கள் ஓர் உள்ளூர்ச் சட்ட ஆலோசகர் அல்லது பட்டயக்கணக்காளரைத் தொடர்பு கொள்ளலாம்.

### பதிவு செய்யப்பட்ட ஒரு ரோட்டரி சங்கத்துக்கு எந்தெந்தச் சட்ட இணக்கங்கள் தேவை?

இந்தச் செயல்முறையில் உங்களுக்கு வழிகாட்டக்கூடிய சிறந்த வல்லுனர்கள், உங்கள் சட்ட ஆலோசகர்/பட்டயக் கணக்காளர்.

### ஆண்டுதோறும் வருமான வரி (அல்லது பிற சட்டப்பூர்வமான) அலுவல் அமைப்புகளுடன் இணங்குவதற்கு யார் பொறுப்பு?

உங்களுடைய சங்கம் எந்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப் பட்டுள்ளது என்பதைப் பொறுத்து, சில குறிப்பிட்ட சட்டப்பூர்வமான இணக்கங்கள் இருக்கும்.

### ரோட்டரி செயல்முறைகள் கையேட்டின் கீழ், ரோட்டரி சங்கத்தைப் பதிவு செய்வது கட்டாயமா?

இல்லை. ரோட்டரியின் செயல் முறைகள் கையேடு ரோட்டரி சங்கங்கள் பதிவுசெய்யப்படுவதைக் கட்டாயமாக்கவில்லை. அதே நேரம், ரோட்டரியின் கொள்கை விதிமுறைகளின்படி, அதன் உறுப்பினர் சங்கங்கள் அனைத்தும் அந்தந்த நாட்டின் சட்டங்களுடன் கண்டிப்பாக இணங்கவேண்டும்.

### சங்கங்கள் தங்களுடைய PAN அட்டை/ இணக்கச் சான்றுகளை RISAOக்குச் சமர்ப்பிக்கவேண்டுமா?

இல்லை, சங்கங்கள் KYC நோக்கங்களுக்காக ஒரு PAN அட்டை மற்றும் தேவையான பதிவுகளைக் கொண்டிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப் படுகிறது.■

# பிரபஞ்சத்தின் மர்மத்தை அறிந்துகொண்ட குழந்தைகள்!

ரஷீதா பகத்

ஜவஹர்லால் நேரு கோளரங்கத்தைப் பார்வையிட்டதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தோம். அங்கு பல அறிவியல் உண்மைகளைத் தெரிந்துகொண்டோம். அந்தக் காலத்தில் மக்கள் எப்படி சூரியனை வைத்து நேரத்தை கணக்கிடுகிறார்கள், ஊசலாடும் தத்துவம் எப்படி வேலைசெய்கிறது, வெண்மை நிறம் ஏன் வெப்பத்தை உறிஞ்சுவதில்லை ஆனால், கருப்பு நிறம் அதிக வெப்பத்தை உறிஞ்சுவது ஏன் என்பது பற்றிய பல விஷங்களைத் தெரிந்துகொண்டோம். எந்தத் தொடர்பும் இல்லாமல் ஒருவருக்கொருவர் பேசுவது மிகவும் உற்சாகமாக இருந்தது. சூரியனும் இதர கிரகங்களும் எவ்வாறு தோன்றின என்பது பற்றிய வரலாற்றுக் காட்சி களை பார்த்தபோது ஆச்சரியமாக இருந்தது என்று தெரிவித்தார் பெங்களூரு வித்யாரண்யா கல்வி நிலையத்தைச் சேர்ந்த சங்கீதா.

இது எங்கள் வாழ்க்கையில் மறக்கமுடியாத தருணங்களில் ஒன்றாகும். உண்மையிலேயே எங்களது பயணம் பயனுள்ளதாக இருந்தது. சூரியன் மிகவும் பிரகாசமான கிரகங்களில் ஒன்று என்பதையும், கண்காட்சிகள் நாம் அறியவை எளிதாக கற்க உதவுகின்றன என்பதையும் நான் தெரிந்துகொண்டேன் என்றார் அரசுப் பள்ளியில் 8-ஆம் வகுப்பு படிக்கும் மாணவி மீனாட்சி. பெங்களூரு அரசு மகளிர் விடுதியைச் சேர்ந்த கலா மிகுந்த பரவசத்துடன், “நான் கிரகங்களுடன் இருப்பது போல உணர்ந்தேன். நான்அங்கே நின்றபோது விடியோ எடுத்துக்கொண்டேன்” என்றார்.

அங்கும் இங்கும் துள்ளித்திரிந்த அவரின் நண்பர் அம்ரிதா, நான் பல புதிய விஷங்களை இங்கு கற்றுக்கொண்டேன். இங்கேயே வழிகாட்டியாக பணிபுரிய விரும்பு கிறேன். அதுவும் நாளையே சேர விரும்புகிறேன் என்றார்.

இந்தியாவில் உள்ள முதல் 10 கோளரங்கங்களில் ஒன்றாக கருதப்படும் இந்த



கோளரங்கத்தில் வானவியல் அரங்க காட்சிகள் மிகவும் பிரபலமானவை. ஆண்டுக்கு சுமார் 2 லட்சம் பேர் இங்கு வந்துசெல்கிறார்கள். சிறப்பு அனிமேஷன் காட்சிகள், ஒலி, ஒளிப் பதிவுகள் மற்றும் விடியோக்கள் மூலம் பல்வேறு நாடுகளின் அறிவியல், கலை, இலக்கியம் மற்றும் கலாசார அம்சங்களை இங்கு காணமுடிகிறது.



ஆனால், இந்த நிகழ்ச்சிகளும் 1989ம் ஆண்டில் பெங்களூரு மாநகராட்சியால் தொடங்கப்பட்ட இந்த கோளரங்கம், கொடிய கொரோனா வைரஸ் தொற்று பரவல் மற்றும் அதைத் தொடர்ந்த கடந்த ஆண்டு மார்ச் மாதம் நடைமுறைபடுத்தப்பட்ட பொது முடக்கததால் மௌனமாகி விட்டது.

கடந்த நவம்பர் மாதம் இந்த கோளரங்கம், வானியல் அரங்கம் மற்றும் அறிவியல் பூங்காவைத் திறக்க அரசிடம் அனுமதி கோரியபோது, முறையான சுகாதார வசதிகள், சமூக இடைவெளியை பின்பற்ற வேண்டும் மற்றும் பார்வையாளர்களை கட்டுப்படுத்த வேண்டும் என்று பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்தது. கொரோனா காலத்தில் தூய்மையைப் பேணவேண்டும் என்பதால் பெங்களூர் R T நகர் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர் எஸ்.ஜெயராமனை அணுகினோம் என்றார் கோளரங்கத்தின் இயக்குநர் பிரமோத் கல்காலி.

பொது கழிப்பிடங்களில் கால்களால் இயக்கப்படும் குழாய் வசதிகள், பெங்களூர் அறிவியல் கல்விச் சங்கத் தால் நிர்வகிக்கப்படும் இடங்களில் தூய்மையைப் பராமரிக்கும் வசதி, நுழைவாயிலில் வெப்பநிலை அளவிடும் கருவி, வானியல் அரங்கம், தொடர்பில்லாமல் டிக்கெட் வழங்குமிடத்தை சுத்தமாக வைத்திருப்பது என பல்வேறு கட்டுப்பாடுகளைச் செயல்படுத்த நிதியுதவி அவருக்கு தேவைப்பட்டது.

ஜெயராமன், பெங்களூரில் மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்திவரும் தொண்டு நிறுவனத்தை நடத்தி வருகிறார். இவரது சேவை நிறுவனத் தில் 60 குழந்தைகள் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். சாதாரண நிலை யிலிருந்து கோளரங்கத்தின் இயக்குநராக உயர்ந்துள்ள பிரமோத் கல்காலியுடன் அவருக்கு நெருங்கியத் தொடர்பு இருந்தது. பிரமோத் கல்காலி ஓர் அற்புதமான மனிதர். கோளரங்கம் மக்களுக்கு பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்தில் செயல்பட்டு வருபவர். அவருக்கு ஏதாவது உதவி தேவைப்பட்டால் ரோட்டரி மாவட்டம் 3190ஐ தொடர்புகொள்வார். நாங்கள் அவர்களுக்கு உதவுவோம். இந்த முறை அவர் எனது உதவியை நாடியபோது “கிவானி லாப்வே இந்தியா” என்ற கார்ப்பொரேட் நிறுவனத்தின் மூலம் நிதியுதவி பெறமுடிந்தது என்கிறார் ஜெயராமன்.



ஆனால், கோளரங்கம் திறக்கப் பட்டிருந்தாலும் பள்ளிகள் இன்னும் மூடப்பட்டிருப்பதாலும், நகரில் உள்ள மக்கள் இதுபோன்ற பொது இடங்களுக்கு வருகைதரத் தயங்குவதாலும் ரோட்டரி ஆதரவற்ற குழந்தைகளை கோளரங்கத்திற்கு அழைத்து வரும் யோசனையை முன் வைத்தார். டிசம்பர் மாதத்தில் வானியல் அரங்கத்தை பார்வையிடுவதற்கான நுழைவுக் கட்டணம் ரூ.40ஐ தள்ளுபடி செய்யவும் அவர்

முன்வந்தார். எனவே இந்த வாய்ப்பை நாங்கள் பயன்படுத்திக் கொண்டு “தாராலயாபிரவாசா” என்னும் திட்டத்தைச் செயல்படுத்தினோம்.

பின்னர் அவர் அடுத்த கட்டமாக பல்வேறு தொண்டு நிறுவனங்களில் பராமரிக்கப்படும் ஆதரவற்ற குழந்தைகளை கோளரங்கத்துக்கு அழைத்துவர ஏற்பாடு செய்தார். ஒரு ரோட்டேரியன் என்ற வகையில் அவர் 31 ஆண்டுகளுக்கும் மேலாக சமூகப் பணியாற்றி வருகிறார். முதலாவதாக கோளரங்கத்துக்கு முன்னதாக பல்வேறு திட்டங்களுக்கு ஆதரவு அளித்துவந்த சங்க்யா வித்யா அறக்கட்டளை, ரோட்டேரியன்களுடன் கைகோர்த்து செயல்பட முன்வந்தது. அடுத்து அவர் மற்ற ரோட்டரி சங்கங்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களை அணுகி போக்குவரத்து மற்றும் குழந்தைகளுக்கு உணவு ஆகிய வற்றுக்கு ஏற்பாடு செய்தார். இதன் மூலம் அவர்களுக்கு சுற்றுலாவுக்கு சென்றுவந்த மகிழ்ச்சி ஏற்படும்.

பெங்களூரு ஆர்ச்சிட்ஸ் ரோட்டரி சங்க உறுப்பினரும் பாகிரதி டிராவல் சொல்யூஷன்ஸ் நிறுவனத்தை நடத்தி வருபவருமான நீல் மைக்கேல் ஜோசப், குழந்தைகளை கோளரங்கத்துக்கு அழைத்து வந்து திரும்ப கூட்டிச் செல்வதற்கு முன்வந்தார். அவரது நிறுவனப் பேருந்துகள் குழந்தைகளை பள்ளிக்கு அழைத்துச் செல்லும் பணியை ஏற்று செயல்படுத்தி வந்தது. கொரோனா தொற்று காரணமாக பள்ளிகள் இப்போது மூடப்பட்டிருப்பதால் குழந்தைகள் கோளரங்கத்துக்கு வந்து செல்ல குளிர் சாதன வசதி கொண்ட பேருந்தை வழங்கினார்.

பெங்களூர் ரோட்டரி சங்கத்தின் தலைவர் வின்சென்ட் ராஜ், அவரது சங்கத்தின் உறுப்பினர்களில் ஒருவரும் ஷ்ரீ சாய் ஆன்மிக மைய அறக்கட்டளை உறுப்பினருமான ஷ்ரீசந்த்ராஜ்பல் என்பவருடன் தொடர்பை ஏற்படுத்தினார். அவர் மூலம் குழந்தைகளுக்கு உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. முதலில் 500 குழந்தைகள் வருவார்கள் என எதிர் பார்க்கப்பட்டு 500 உணவுப் பொட்டலங்களுக்கு ஏற்பாடு செய்யப் பட்டது, பின்னர் இந்த எண்ணிக்கை 1,000 மாகவும், 1500 ஆகவும் அதிகரித்ததை அடுத்து அனைவருக்கும் சுவையான உணவு வழங்கப்பட்டது என்றார் ஜெயராமன்.

வளாகத்தில் உள்ள பசுமையான இடத்தில் குழந்தைகளுக்கு மதிய உணவை ரோட்டரியினரால் வழங்கப்பட்டது. எனக்குத் தெரிந்த சமூக சேவகிகளான தாரா மற்றும் சந்திரகலா இருவரும் அறக்கட்டளை யிலிருந்து உணவை கொண்டுவந்து குழந்தைகளுக்கு உணவை அன்போடு பரிமாறினார்கள். அதிர்ஷ்டவசமாக பள்ளிக்குழந்தைகளுக்கு உணவு சமைக்கும் சமையல்காரர் வேறு வேலை இல்லாததால் இந்த குழந்தைகளுக்கு வெஜிடபிள் புலவும், தயிர் சாதமும் தயாரித்து கொடுக்க முன்வந்தார். இதற்காக கொவிட்டுக்கு தான் நன்றி சொல்ல வேண்டும். கைகளை சுத்தமாக கழுவிவிட்டு பிரார்த்தனை செய்துவிட்டுத்தான் உணவு சாப்பிட வேண்டும் என்பதை குழந்தைகளுக்கு தாரா, சந்திரகலா இருவரும் விளக்கினார்கள்.





Rtn.S *ஜெயராமன், முகமது தஸ்லீல், அஷோக் மஹாதேவன், சர்வ சிக்ஷா அபியான் தலைவர் தீபா சோழன் மற்றும் கோளரங்க இயக்குனர் பிரமோத் கல்காலி.*

இதுபோல் சில நாட்கள் வெவ்வேறு நேரங்களில் குழந்தைகள் கோளரங் கத்துக்கு அழைத்துவரப் பட்டனர்.

பெங்களூர் வடமேற்கு ரோட்டரி சங்கத்தின் தலைவர் சுமதி ராவ், R T நகர் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த மணிஷா வாசன் மற்றும் மன்யாதா ரோட்டரி சங்கத்தின் தலைவர் தஸ்லீல் ஆகியோர் வேறு வகையில் எங்களுக்கு உதவிகரமாக இருந்தனர். இந்த திட்டத்தை சிவாஜிநகர் MLA ஹர்ஷத் தொடங்கி வைத்தார். மெர்ஸி மிஷன் என்னும் தொண்டு நிறுவனம் ஆயிரம் குழந்தைகளுக்கு சாக்லேட் வழங்கினர். இந்த திட்டத்தின் முக்கிய அம்சம் என்னவெனில் பல ரோட்டரி சங்கங்கள் ஒன்றிணைந்து ஆதரவற்ற குழந்தைகளை அடையாளம் கண்டு, தொண்டு நிறுவனங்கள் உதவியுடன் கோளரங்கத்துக்கு அழைத்து வந்தது தான். ஒருசில ரோட்டேரியன்கள் தங்கள் குழந்தைகளுடன் வந்திருந் தனர். இது நிகழ்ச்சியை சீராக நடத்திச் செல்ல உதவியது. மேலும் குழந்தைகளுக்கு கூடுதலாக ஸ்நாக்ஸ் வழங்கவும் உதவிகரமாக இருந்தது. குழந்தைகளும் அதை முழுமையாக அனுபவித்தனர் என்றார் ஜெயராமன்.

பெரும்பாலான குழந்தைகளும் அவர்களுடன் வந்த பராமரிப்பாளர் களும் முதன் முறையாக கோளரங் கத்துக்கு வந்துள்ளனர். அவர்கள் எல்லோரும் இது மகிழ்ச்சி நிறைந்த தாகவும், கற்றல் அனுபவத்தை தருவதாகவும் அமைந்திருந்தது. வருங்காலத்தில் இவர்களில் ஒரு சிலராவது வானியல் அறிஞர்களாக உருவாவதற்கான விதையை நாம் விதைத்துள்ளோம் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.


அரசு மகளிர் விடுதியைச் சேர்ந்த மாணவியான வாணி, தாம் பார்த்தவற்றை சுருக்கமாகச் சொன்னார். பிரபஞ்சம் இவ்வளவு பெரியதாக இருக்கும் என்று நான் கற்பனை செய்துகூட பார்த்ததில்லை. மனிதர்களாகிய நாம் சிறிய துகள் தான் என்பதை நான் இப்போது உணர்ந்து கொண்டேன். எங்களுக்கு வழங்கப்பட்ட உணவும் தரமானதாகவும் சுவையானதாகவும் இருந்தது என்றார்.■




*சமூக சேவகிகள் தாரா மற்றும் சந்திரகலா குழந்தைகளுக்கு உணவு அளிக்கின்றனர்.*

# Membership Summary

(As on January 1, 2021)



| Rotary at a glance | |
|---|---|
| Rotary clubs : 36,426 | Rotary members : 1,178,107 |
| Rotaract clubs : 11,253 | Rotaract members : 215,205 |
| Interact clubs : 15,482 | Interact members : 356,086 |
| *RCCs : 11,541 | *As on 18 January 2021* |





*Source: RI South Asia Office*

# இந்தியாவின் அழியாத அடையாளம் வாஜ்பாய்!

ரஷீதா பகத்

முன்னாள் பிரதமர் A B வாஜ்பாய், 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மறைந்தபோது இந்திய நாடே துயரத்தில் ஆழ்ந்தது. பா.ஜ.க. மற்றும் அதன் சித்தாந்த கொள்கைகளை எதிர்ப்பவர்கள்கூட இந்த துயரத்தில் பங்குகொண்டனர். இதற்கு முக்கிய காரணம் வாஜ்பாய் ஒரு மிதவாதியாக இருந்ததுதான். அவர் மிதவாதியாக இருந்தபோதிலும் தீவிரவாதிகளிகளை தனது கட்டுக்குள் வைத்திருந்தார் என்று சொல்வதுண்டு.

ஆனால், இது தவறான கணிப்பு என்கிறார் வாஜ்பாய்: இந்தியாவை மாற்றிய ஆண்டுகள் சுயசரிதை புத்தகத்தை எழுதியுள்ள சக்தி சின்ஹா. வாஜ்பாய் ஆட்சியில் இருந்தபோதிலும் சரி, ஆட்சி அதிகாரத்தில் இல்லாதபோதிலும் சரி பல்வேறு பிரிவினராலும் தொடர்ந்து விமர் சிக்கப்பட்டு வந்திருக்கிறார் என்று வாதிடுகிறார் சின்ஹா.



ஐ.ஏ.எஸ். அதிகாரியான சின்ஹா, வாஜ்பாய் ஆட்சி அதிகாரத்தில் இருந்தபோது அவரது தனிச்செயலராக நீண்டகாலம் பணியாற்றியவர். அதன் பிறகும் வாஜ்பாய்யுடன் தங்கி நேரத்தை செலவிட்டவர். அரசியல் மற்றும் அதிகார வட்டங்களில் நன்கு அறியப்பட்டவர். வாஜ்பாய் பற்றி பல விஷயங்களை அவர் தனது புத்தகத்தில் எழுதியுள்ளார். அரசியலில் எதிர் அணியில் இருந்தவர்களும் மறைந்த தலைவர் வாஜ்பாய் மீது தனி மரியாதைவைத்திருந்தனர். அவரது நேர்மையையும் நீதி உணர்வையும் பாராட்டியவர்கள் பலர். அதற்காகவே அந்தப் புத்தகத்தை நாம் படிக்க வேண்டும். சங்கப் பரிவாரத்தில் சண்டைக்கு காத்திருக்கும் பருந்துபோல் அல்லாமல் புறாவைப் போல் அமைதியானவர் என்று அவரை எதிரணியினர் கருதினர்.

அரசியல் எதிரிகள் தீண்டத்தகாதவர்கள் அல்ல என்று கருதப்பட்ட ஒரு சகாப்தத்திற்கு நம்மை அழைத்துச் செல்கிறார் சின்ஹா. 1957ம் ஆண்டு ஜனசங்கம் சார்பிலான மக்களவை உறுப்பினராக வாஜ்பாய் இருந்தபோது பிடித்தமான வெளிநாட்டுக்கொள்கை பற்றி அவர் ஆற்றிய உரையை நினைவுகூறுகிறார் சின்ஹா. அந்த சமயத்தில் வெளியுறவுத்துறையை தனது பொறுப்பில் வைத்திருந்த பிரதமர் ஜவாஹர்லால் நேரு, வாஜ்பாய் எழுப்பிய கேள்விகளை கவனத்தில் கொண்டு அதை நிவர்த்தி செய்வதில் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டார். நேருவின் கொள்கைகளை வாஜ்பாய் கடுமையாக விமர்சித்து வந்தாலும், அவர் பிந்தையவர்களால் மிகைப்படுத்தப்பட்டவராகத் தோன்றினார். நேரு மறைவுக்குப் பிறகு மாநிலங்களவையில் வாஜ்பாய் ஆற்றிய உரை (அப்போது அவர் மாநிலங்களவை உறுப்பினராக இருந்தார்.) நேருவிடம் அவர் எவ்வளவு அபிமானம் வைத்திருந்தார் என்பதை புத்தகம் வெளிப்படுத்துகிறது.

1994ம் ஆண்டில் அப்போதைய பிரதமர் V நரசிம்மராவ் வேண்டுகோள் பேரில், ஐ.நா.வுக்கு இந்திய தூதுக்குழுவை வழிநடத்தியது வாஜ்பாய்தான். ஐ.நா. மனித உரிமை நிகழ்ச்சி நிரலில் காஷ்மீர் பிரச்னையை பாகிஸ்தான் முன்வைத்தபோது அதை வாஜ்பாய் தலைமையிலான தூதுக்குழு வெற்றிகரமாக எதிர்கொண்டது.

சின்ஹா, வாஜ்பாய்யுடன் நீண்டகாலம் பணியாற்றியதால் அவர் எழுதியுள்ள புத்தகம் மிகவும் சுவாரஸ்மாக அமைந்துள்ளது. உதாரணமாக, வாஜ்பாய் இயற்கையாகவே கூச்ச சுபாவம் உள்ளவர். எந்த விஷயத்திலும் அவர் பின்வாங்குவதில்லை. அரசியலில் அவருக்கு வழிகாட்டி யாரும் இல்லை. தனது தகுதியால் மட்டுமே அவர் உயர்ந்த இடத்தைப் பிடித்துள்ளார். தனது எல்லை எது என்பதை நன்கு உணர்ந்தவர். அதுதான் அவரது வெற்றிக்கு முழு காரணம் என்கிறார் சின்ஹா.


அவரது பேச்சுத் திறன் பற்றி நிறைய எழுதப்பட்டுள்ளன. மிக முக்கியமான நேரங்களில் வார்த்தைகளை அளந்து பேசக் கூடியவர், ஒரு விஷயம்

முக்கியமானது எனில், அதை உன்னிப்பாக கவனித்து அதைச் சரியாகச் செய்வதற்கு எவ்வளவு முயற்சி மேற்கொள்கிறார் என்பதை மக்கள் ஒருபோதும் புரிந்து கொண்டதில்லை என்கிறார் சின்ஹா. அவர் பேசும்போது இடைநிறுத்துவது அழகுக்காக அல்ல, பேச்சு துல்லியமாக இருக்க வேண்டும் என்பதற்குத்தான்.

1998ம் ஆண்டு அவரது அரசுக்கு கூட்டணிக் கட்சிகள் குறிப்பாக அதிமுக தலைவர் ஜெ.ஜெயலலிதா மற்றும் திரிணமூல் காங்கிரஸ் கட்சித் தலைவர் மம்தா பானர்ஜி இருவரும் அரசியல் ரீதியில் தொல்லைகள் கொடுத்தபோது நெருக்கடியான சூழல் ஏற்பட்டது.

கவனமாகத் தேர்ந்தெடுக்கப் பட்ட இரண்டு படங்கள் ஒரே பிரேமில் வெளியிடப்பட்டுள்ளன. ஒன்று எதிரே ஜெயலலிதா அமர்ந்திருக்கும் நிலையில் அவர் கொடுத்த சில ஆவணங்கள் மற்றும் கோரிக்கைகள் பட்டியலை சற்றே கோபப் பார்வையுடன் ஆய்வு செய்கிறார் வாஜ்பாய். மற்றொன்று நம்பகமான கூட்டாளிகளில் ஒருவரான தெலுங்குதேசம் கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடுவுடன், சிரித்த முகத்துடன் பேசிக்கொண்டிருக்கிறார். ஜெயலலிதாவின் முக்கிய கோரிக்கை களில் ஒன்று தனக்கு எதிரான ஊழல் வழக்குகளைத் திரும்பப் பெறவேண்டும். மற்றொன்று சுப்பிரமணியன் சுவாமியை நிதியமைச்சராக்க வேண்டும் என்பதுதான். மேற்கு வங்க மாநிலம் புறக்கணிக்கப்படுவதாகக் கூறி எதிர்ப்பு தெரிவித்து தேசிய ஜனநாயகக் கூட்டணி ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்திலிருந்து வெளியேறினார்

Vajpayee: The years that changed India
Author: Shakti Sinha
Publisher: Penguin
351 pages
₹599




மம்தா பானர்ஜி. ஜெயலலிதா தொடர்ந்து அரசியல் ரீதியாக வாஜ்பாய்க்கு தொல்லை கொடுத்து வந்தார். வாஜ்பாய் அமைச்சர வையில் யார் யார் சேர்க்கப்பட வேண்டும். யார் யாரை நீக்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டே வந்தார்.

1998 மார்ச் மாதத்தில் வாஜ்பாய் பிரதமராக பதவியேற்றபோதும் சரி, பின்னர் லாகூர் பயணம் சென்றுவிட்ட வந்தபோதும் சரி அவரை ஆட்சி செய்யவிடவில்லை. லாகூருக்கு பஸ் பயணம் சென்று விட்டு வந்த அவர், இந்தியா-பாகிஸ்தான் உறவில் மேம்பாடு ஏற்படும் என்று நம்பிக்கையுடன் தெரிவித்தார். ஆனால், அவரின் நல்லெண்ணத்தைப் புரிந்து கொள்ளாத பாகிஸ்தான் ராணுவத் தலைமைத் தளபதி ஜெனரல் பர்வேஸ் முஷாரப், பிரதமர் நவாஸ் ஷெரீப்பை சட்டை செய்யாமல் கார்கில் ஊடுருவலுக்கு வழிவகுத்தார். இது இரண்டு நாடுகளையும் போரின் விளிம்புக்கு கொண்டு சென்றது.

முன்னதாக, தில்லியில் அரசியல் நாடகம் உச்சக்கட்டத்திற்கு வந்தது. 1999 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29ம் தேதி சோனியா காந்தி மற்றும் ஜெயலலிதா இருவரும் தில்லியில் சுப்பிரமணியன் சுவாமி ஏற்பாடு செய்திருந்த ஒரு தேநீர் விருந்தில் கலந்துகொண்டனர். இறுதியில் வாஜ்பாய் அரசு, நம்பிக்கை வாக்கெடுப்பில் ஒரு வாக்கு வித்தியாசத்தில் கவிழ்ந்தது. நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வி அடைந்ததும் வாஜ்பாய் மிகுந்த கலக்கத்துடன் நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள தமது அறைக்குச் சென்றார். இதுபோல் மிகுந்த மன உளைச்சலுடன் அவர் இருந்ததை நான் பார்த்ததில்லை. உற்சாகமற்ற நிலையில் அவரது கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது.

எனினும் வாஜ்பாய் அரசின் வீழ்ச்சியை உறுதி செய்த காங்கிரஸ் கட்சியால் மாற்று அரசை அமைப் பதற்கான போதுமான எண்ணிக்கையை திரட்ட முடியவில்லை. இதையடுத்து வாஜ்பாய்யிடம் இடைக்கால அரசாகச் செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. அடுத்த தேர்தலுக்கு முன்னதாக சோனியா வெளிநாட்டவர் என்பது பிரச்னையாக முன்வைக்கப்படாது என்றும் ஆளுமையின் அடிப் படையில் தேசிய ஜனநாயகக் கூட்டணி தேர்தலை சந்திக்காது என்றும் அதற்கு பதிலாக நாட்டில் உள்ள முக்கியமான பிரச்னைகள் மற்றும் தமது அரசின் சாதனைகளை முன்வைத்தே தேர்தலை சந்திக்கப் போவதாகவும் வாஜ்பாய் தெளிவுபடுத்தினார்.

ஏப்ரல் மாதத்தில் அரசு வீழ்ந்தது. கார்கில் ஊடுருவல் மே மாதம் நடந்தது. அப்போது அமெரிக்க அதிபராக இருந்த பில் கிளிண்டன் தலையீட்டின் பேரில், ஜூலை மாதம் 4-ஆம் தேதி பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப், எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டிலிருந்து தமது படைகளை வாபஸ் பெறுவதாக உறுதியளித்தார். இதை திரும்பிப் பார்த்தால் மிகவும் முதிர்ச்சியுள்ள மற்றும் புத்திசாலித்தனமான வாஜ்பாய் தலைமையிலான காபந்து அரசு, கார்கில் ஊடுருவல் விவகாரத்தை நேர்த்தியாகக் கையாண்டு பேரழிவைத் தரக்கூடிய போரைத் தவிர்த்தது புரியவரும்.

இந்தியாவில் அழியாத அடையாளத்தை அவர் விட்டுச் சென்றுள்ளார் என்பதை இந்த புத்தகம் அழகாக எடுத்துரைக்கிறது.■

## கொரோனா சவால்கள் இருந்தபோதும், 1000 புதிய உறுப்பினர்களை இலக்காகக் கொண்டுள்ளார்

K பாண்டியன்
தணிக்கையாளர், RC வேலூர் மிட் டவுன், RID 3231



கடந்த பல ஆண்டுகளாக, பாண்டியன் பல மாவட்டத் திட்டங்களை வழிநடத்தியுள்ளார், அதில் பெரும் எண்ணிக்கையிலான ரோட்டரியன்கள், அவர்களுடைய குடும்பத்தினர் கலந்துகொண்டுள்ளார்கள், பொங்கல் விழா, தீபாவளி விழா போன்ற சிறப்பு நிகழ்வுகள், இளம்பிள்ளைவாத மாரத்தான் ஓட்டங்களை நடத்துதல் போன்றவற்றின்மூலம் நான் வலுவான நட்புப் பிணைப்புகளை உருவாக்கியுள்ளேன் என்கிறார் இவர்.

97 சங்கங்கள் மற்றும் 3,850 ரோட்டரியன்களைக் கொண்டுள்ள இவர், 1,000 புதிய உறுப்பினர்களைச் சேர்க்கத் திட்டமிடுகிறார். கடந்த சில மாதங்களில், கொரோனா நோய்ப்பரவல் மற்றும் பிற காரணங்களால் 300 உறுப்பினர்கள் ரோட்டரியிலிருந்து விலகியுள்ளார்கள் என்பது இவருக்கு வருத்தமளிக்கிறது.

இந்த மாவட்டத்தில் 75 ரோட்டராக்ட் சங்கங்கள் உள்ளன, இவற்றில் சுமார் 2,000 ரோட்டராக்டர்கள் உள்ளார்கள். ஆனால், கல்லூரிகள், பள்ளிகள் மூடப்பட்டதால், இப்போது புதிய ரோட்டராக்ட் சங்கங்களைத் திறப்பது கடினம் என்கிறார் பாண்டியன்.

இயல்பு நிலை திரும்பியதும், இவருடைய மாவட்டம் ஒரு லட்சம் விதைப் பந்துகளை ஹெலிகாப்டர்கள்மூலம் விநியோகிப்பதற்கான பணிகளைத் தொடங்கும். இதற்கான அனுமதிகள் ஏற்கெனவே பெறப்பட்டுள்ளன.

RC குடியாத்தம் தேவையுள்ள குடும்பங்களுக்கு 65 புதிய வீடுகளைக் கட்டும் (GG: ரூ.1.5 கோடி), RC ராணிப்பேட் சிப்காட் ஜனவரியின் கடைசி வாரத்தில் ஒரு மிகப் பெரிய இளம்பிள்ளைவாத மாரத்தான் ஓட்டத்தை நடத்தும்.

மருத்துவத் துறையைப் பொறுத்தவரை, RC திருவள்ளூர் ராயல், அரசு மருத்துவமனையுடன் ஓர் உடன்படிக்கையில் கையொப்பமிட்டுள்ளது, இதன்படி, அரசு மருத்துவமனையின் ரத்த வங்கியை இந்த ரோட்டரி சங்கம் 10 ஆண்டு காலகட்டத்துக்குப் பராமரிக்கும், இதற்கான செலவு, ரூ.85 லட்சம்.

RC திருவண்ணாமலை மூன் சிட்டி, டேங்கர் அறக்கட்டளையுடன் கை கோத்து, சில நேபாளச் சங்கங்களுடன் செய்யப்படும் ஒரு GG திட்டத்தின் ($85,000) வழியாக, எட்டு இயந்திரங்களைக் கொண்ட ஒரு டயாலிசிஸ் மையத்தைத் திறக்கும். RC வேலூர் மிட் டவுன் ஒரு CT ஸ்கேன் மையத்தை அமைக்கும் (GG: $60,000), மேலும், RC வேலூர் ஃபோர்ட், 18 இயந்திரங்களைக் கொண்ட ஒரு டயாலிசிஸ் மையத்தை மேலும் எட்டு இயந்திரங்களுடன் விரிவாக்குகிறது.

TRFக்குப் பாண்டியனின் திட்டம், 2 மில்லியன். ரத்த தான முகாம்களின் வழியாக, 5,000 யூனிட் ரத்தத்தைத் திரட்ட இவர் இலக்கு அமைத்துள்ளார்.

1987ல், என்னுடைய தணிக்கையாளர் நண்பர் வழியாக நான் RC வேலூர் ஈஸ்ட்டின் பதிவு உறுப்பினரானேன், பின்னர் 1990ல் RC வேலூர் மிட் டவுனுக்கு மாறினேன். கை, கால் அகற்றப்பட்ட 300 பேருக்குப் பயன் தரும் செயற்கைக் கை, கால் பொருத்தல் முகாம்களை நான் நடத்தியுள்ளேன் என்று தொடர்ந்து கூறுகிறார் இவர்.

# ரோட்டரி ஆளுநர்களுடன் சந்திப்பு

V முத்துகுமரன்

## மகிழ்ச்சிப் பள்ளிகளும் மருத்துவப் பணிகளும் மாவட்டத் திட்டங்களில் முதன்மையாக அமையும்



**சௌம்ய ரஞ்சன் மிஷ்ரா**
**வழக்கறிஞர், RC புபனேஸ்வர் கன்ஃப்ளுயன்ஸ்,** RID 3262

ரோட்டரியை எளிமையாக வையுங்கள், அதைப் பொதுமக்களுக்குக் கொண்டு செல்லுங்கள் என்பது, பொதுத் தோற்றத்தை மேம்படுத்தும் ஒரு பணியின் ஒரு பகுதியாக இவர் உருவாக்கிய மாவட்ட முழக்கம் ஆகும்.

இந்த மாவட்டத்தில் இப்போதுள்ள 107 சங்கங்கள் மற்றும் 3,800 ரோட்டரியன்கள் என்ற கணக்குடன் 10 புதிய சங்கங்கள், 500 புதிய ரோட்டரியன்களைச் சேர்க்க இவர் விரும்புகிறார். இங்கு 60 ரோட்டராக்ட் சங்கங்கள் மற்றும் 1,500க்கும் மேற்பட்ட ரோட்டராக்டர்கள் உள்ளார்கள். பத்துப் புதிய சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன, ஜூன் மாத நிறைவுக்குள் மேலும் பத்து இதில் சேர்க்கப்படும் என்கிறார் சௌம்ய மிஷ்ரா. தன்னுடைய பொறுப்புக் காலத்தில் 50 ரோட்டராக்டர்களை ரோட்டரியன்களாக மாற்றவும் இவர் திட்டமிடுகிறார். TRF வழங்கலுக்கு இவருடைய இலக்கு, $200,000. கட்டாக்கிலுள்ள (DDF) JPM ரோட்டரி கண் மருத்துவமனை மற்றும் பெர்ஹம்பூர் அரசு மருத்துவமனையில் இரண்டு டயாலிசிஸ் மையங்கள் அமைக்கப்படும் (GG: ரூ 40 லட்சம்).

பெர்ஹம்பூர், புவனேஸ்வர் மற்றும் பலசோரில் ஐம்பது மகிழ்ச்சிப் பள்ளிகள் அமைக்கப்படும். DDF, தனியார் ஆதரவு மற்றும் CSR நிதிகளின் கலவை வழியாக இது நிறைவேற்றப்படும்.

கொல்கத்தாவிலுள்ள அமெரிக்க மையத்தில் வழக்கறிஞருக்கான மேம்பட்ட பயிற்சியைப் பெற்றுக்கொண்டிருந்தபோது, Rtn கைலாஷ் கனுங்கோ என்னை ரோட்டரிக்கு அறிமுகப்படுத்தினார், 2000ல், RC புபனேஸ்வர் காஸ்மோபாலிட்டனில் சேரும்படி என்னை அழைத்தார்.'' பின்னர், இவர் 2008ல் RC புபனேஸ்வர் கன்ஃப்ளுயன்ஸ் பதிவுச் செயலாளரானார்.

இவருடைய நினைவில் நிற்கும் ரோட்டரி கணங்களில் ஒன்று, இவர் சங்கத் தலைவராக இருந்தபோது, கோர்தா மாவட்டத்திலுள்ள ஃபிர்கினாலி மற்றும் பிடகாடியா கிராமங்களைத் தத்தெடுத்ததாகும். இந்த இரு கிராமங்களிலும் நாங்கள் ஒரு பள்ளியைக் கட்டினோம், ஓர் அணுகல் சாலையை அமைத்தோம், ஒவ்வொரு வீட்டுக்கும் தண்ணீர், மின்சாரம் மற்றும் கழிப்பறைகளை வழங்கினோம் என்று நினைவு கூர்கிறார் இவர்.

## திருப்பூரில் வரவிருக்கும் ஒரு மிகப் பெரிய பல சிறப்புத்தன்மை மருத்துவமனை



**டாக்டர் ஹரி கிருஷ்ணன் நம்பியார்**
**பல் அறுவைச்சிகிச்சை வல்லுனர், RC காசர்கோடு,** RID 3202

கேரளம் மற்றும் தமிழ் நாட்டின் திருப்பூர், ஈரோடு மற்றும் ஊட்டியிலுள்ள வயநாடு, கண்ணூர், கோழிக்கோடு, காசர்கோடு மற்றும் மலப்புரத்தில் பரவியுள்ள இந்த மாவட்டத்தில் 142 சங்கங்கள் மற்றும் சுமார் 6,000 ரோட்டரியன்கள் உள்ளார்கள்.

தன்னுடைய பொறுப்புக் காலத்தில் குறைந்தது 800 புதிய உறுப்பினர்களைச் சேர்க்கலாம் என்று ஹரி கிருஷ்ணன் நம்பியார் நம்பிக்கையாக உள்ளார். இந்த ஆண்டுக்குத் திட்டமிடப்பட்ட 10ல் ஆறு புதிய சங்கங்களை நான் பதிவு செய்துள்ளேன், இதில் இரண்டு E-clubகளும் உண்டு.

RC திருப்பூர் வெஸ்ட், மங்களம் கிராமத்தில் ரூ.5 கோடி முதலீட்டில் ஒரு மூன்று-மாடிப் பல சிறப்புத்தன்மை மருத்துவமனையைக் (GG: $100,000) கட்டுகிறது. திருப்பூர் வெஸ்ட் மருத்துவ அறக்கட்டளை மருத்துவமனை என்ற பெயர் கொண்ட இந்த மருத்துவ மனை இரண்டு ஆண்டுகளில் தொடங்கிவைக்கப்படும். இதே சங்கம், இந்தக் கிராமத்துக்கு நீர்ப்பாசன வசதியை வழங்குவதற்காக, ஒரு GG திட்டத்தின்கீழ் 6கிமீ கால்வாய் ஒன்றைக் கட்டுகிறது.

TRFக்கு நம்பியாரின் இலக்கு, $770,000. திருப்பூரில் மூன்று அரசுப் பள்ளிகள் விரைவில் கழிப்பறைத் தொகுதிகளைப் பெறும் (GG: $45,000) மேலும், திருப்பூரிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் 10,000 பள்ளி மாணவர்களுக்கு அஞ்சல் நிலையச் சேமிப்புக் கணக்கு வழங்கப்படும், அந்தக் கணக்குகள் ஒவ்வொன்றிலும் குறைந்தபட்சம் ரூ.250 கையிருப்பு சேர்க்கப்படும்.

மறைந்த PDG சூர்யபிரகாஷ் பட் அவர்களைப் பார்த்து ஊக்கம் பெற்ற இவர், 1998ல் RC காசர்கோடில் சேர்ந்தார்.

## இவருடைய இரட்டைச் சவால்கள், உறுப்பினர் எண்ணிக்கை, TRF வழங்கல்



**B ராஜாராம பட்**
**கோழிப் பண்ணை, RC கல்லியான்பூர், RID 3182**

நோய்ப்பரவல் நேரத்தில் ராஜாராம பட் சந்திக்கும் இரண்டு முதன்மையான சவால்கள், உறுப்பினர்களைத் தக்க வைத்துக் கொள்ளுதல், TRFக்கு வழங்கும்படி ரோட்டரியன்களை ஊக்குவித்தல். 83 சங்கங்கள் மற்றும் 3,130 ரோட்டரியன்கள் இங்கு உள்ளார்கள், நான் உறுப்பினர் எண்ணிக்கையை 10 சதவிகிதம் வளர்த்தல், குறைந்தது 300 புதிய உறுப்பினர்களைச் சேர்த்தல் என்கிற எளிய இலக்கைதான் அமைத்துள்ளேன்.'' ஜூன் மாத நிறைவில், இந்த மாவட்டத்தில் 4–5 சங்கங்களைத் தொடங்கலாம் என்று இவர் நம்புகிறார்.

இந்த மாவட்டத்தில் 50 ரோட்டராக்ட் மற்றும் 103 இன்டராக்ட் சங்கங்கள், சுமார் 4,500 ரோட்டராக்டர்கள் உள்ளார்கள். நான் சமூக அடிப்படையிலான ரோட்டராக்ட் சங்கங்களை இன்னும் கூடுதலாகப் பதிவு செய்ய விரும்புகிறேன், ஏனெனில், அமைப்பு அடிப்படையிலான சங்கங்களில் உறுப்பினர்கள் தொடர்ந்த இடைவெளியில் விலகுகிறார்கள் என்கிறார் இவர்.

25 சதவிகித உறுப்பினர்கள் தான் TRFக்கு வழங்குகிறார்கள் என்பதைக் குறிப்பிடும் இவர், ஒவ்வொரு ரோட்டரியனும் ஒவ்வோர் ஆண்டும் குறைந்தது ரூ.2,000ஐ அறக்கட்டளைக்குப் பங்களிக்கும் படி கேட்டுக்கொண்டுள்ளார். ஒவ்வொரு ரோட்டரியனும் ஒவ்வோர் ஆண்டும் (EREY) என்கிற ஸ்லோகன் எனக்கு மிகவும் பிடித்தது'' என்கிறார் பட். TRFக்கு மாவட்டப் பங்களிப்பாக $200,000 என்கிற இலக்கை அமைத்துள்ளதாகத் தொடர்ந்து கூறுகிறார்.

பட் தன்னுடைய தொழில் நண்பரான நாராயண ஷெட்டியால் தாக்கம் பெற்று, 1985ல், RC கல்லியான்பூரின் பதிவு உறுப்பினராகச் சேர்ந்தார். நான் இந்த இடத்திலிருந்து மாறி வேறு இடத்துக்குச் சென்று என்னுடைய தொழிலை விரிவுபடுத்திவிட்டாலும், இப்போதும் என்னுடைய இல்லச் சங்கத்தில் ஒரு சுறுசுறுப்பான உறுப்பினராகத் தொடர்கிறேன் என்று தொடர்ந்து கூறுகிறார் இவர்.

## இவருடைய முக்கியத்துவம்,நேர்வித நலன் திட்டம்



**சுதீப் முகெர்ஜீ**
**உணவைப் பதப்படுத்தும் கருவி, RC கல்கத்தா லான்ஸ்டௌனெ, RID 3291**

இந்த மாவட்டத்தில் 159 சங்கங்களில் சுமார் 3,920 ரோட்டரியன்கள் இருக்கிறார்கள். இந்த ஆண்டு இந்த உறுப்பினர் எண்ணிக்கையை 15 சதவிகிதம் வளர்க்கலாம் என்று சுதீப் முகெர்ஜீ நம்புகிறார். நோய்ப்பரவல் முடக்கத்தின் ஒரு விளைவாகப் பொருளாதாரச் செயல்பாட்டில் மந்தம் ஏற்பட்டதால், சில உறுப்பினர்கள் சங்கங்களிலிருந்து விலகிவிட்டார்கள் என்கிறார் இவர்.

அதே நேரம், பல தடைகள் இருந்தபோதும் சிறு சங்கங்களுக்கான மாவட்ட நிதியளிக்கப்படும் திட்டங்கள் மற்றும் நடுத்தர அளவுச் சங்கங்களுக்கான மாவட்ட நிதியளிக்கப்படும் திட்டங்கள் பாதிக்கப்படக்கூடாது என்று இவர் முனைப்புடன் தெரிவிக்கிறார்.

நாங்கள் கருப்பை வாய்ப் புற்றுநோய்த் தடுப்பு மருந்து வழங்கல் முகாம்களைத் தொடங்கியுள்ளோம், ஒரு நடமாடும் கண் வடிகட்டல் வேன் கொடியசைத்துத் தொடங்கிவைக்கப்பட்டது, இத்துடன், நலிந்தோருக்கான IoL அறுவைச்சிகிச்சைகள் மற்றும் தேவையுள்ள மக்களுக்கான ஒரு பணி சார்ந்த மையம் ஆகியவையும் தொடங்கப் பட்டுள்ளன, இவை அனைத்தும் பன்னாட்டு நல்கைகளின் வழியாக நடைபெறுகின்றன என்று விளக்குகிறார் முகெர்ஜீ.

TRF வழங்கலுக்கு இவர் 400,000 இலக்கு அமைத்துள்ளார்.

நேர்வித நலன் திட்டம்: உங்கள் எண்களை அறிந்திருங்கள் என்பது, கொல்கத்தாவின் நகர்ப்புற மற்றும் கிராமப்புறப் பகுதிகளில் சங்கங்கள் மற்றும் RCCகளால் ஆண்டுமுழுதும் செயல்படுத்தப்படுகிறது. இதுவரை ஒன்பது தனி NCD முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன, அத்துடன், இன்னும் இரண்டு மிகப் பெரிய நல முகாம்களில் நோயாளிகளிடையே NCDகளுக்கான பரிசோதனைகளை நாங்கள் நடத்தியுள்ளோம் என்கிறார் இவர்.

இவருடைய தந்தை S K முகெர்ஜீ, RC பல்லிகுங்கெ தலைவராக இருந்தவர். 1981ல், ரோட்டராக்டரில் சேரும்படி இவருக்கு அவர் கற்றுத்தந்தார், பின்னர், 2001ல் RC கல்கத்தா லான்ஸ்டௌனெ உறுப்பினரா வதற்கு இவருக்கு உதவினார். என்னுடைய ரோட்டரி வழிகாட்டி, PDG அங்சுமன் பன்ட்யோபாத்யாய் என்று சிரிக்கிறார் இவர்.

# RI தெற்காசிய அலுவலகத்தின் செய்தி

**குறைந்துவரும் RF(I)-INR நிதிகள்:** கடந்த ஐந்து ஆண்டுகளாக, நன்கொடையாளர்களுடைய தாராள மனப்பான்மையால் ரோட்டரி அறக்கட்டளை (இந்தியா) போதுமான அளவு நிதிகளைக் கொண்டிருந்தது, அதன் மூலம், நல்கைப் பணம் வழங்கல்களை அனுப்ப இயன்றது.

கடந்த இரண்டு ஆண்டுகளில், நல்கைச் செயல்பாடுகள் பெருகி வருவதைக் கண்டு நாங்கள் மகிழ்கிறோம், அதே நேரம், நாம் எதிர்பார்த்ததைவிட மிக விரைவாக நம்மிட முள்ள உலக நிதியைமுழுக்கச் செலவழித்துவிட்டோம்.

இந்தியாவிலுள்ள ரோட்டரி சங்கங்களும் மாவட்டங் களும் தங்களையோ தங்களுடைய முழுமையாகக் கட்டுப் படுத்தப்படும் அறக்கட்டளை/சமூக அமைப்பையோ வெளிநாட்டுப் பங்களிப்புக் கட்டுப் பாட்டுச் சட்டத்தின்கீழ் (FCRA) பதிவுசெய்துகொள்ள வேண்டும் என்று வலுவாக ஊக்குவிக்கிறோம், இதன்மூலம், அவர்கள் TRFலிருந்து வெளிநாட்டு நிதியை நேரடியாகப் பெறலாம், பன்னாட்டுக் கூட்டு நிறுவனங்கள் அல்லது பிற வெளிநாட்டு மூலங் களிலிருந்தும் நேரடிப் பங்களிப்புகளைப் பெறலாம்.

FCRAன் கீழ் பதிவு செய்து கொள்ளாத சங்கங்கள், இந்தியாவுக்குள்ளிருந்து செய்யப்படும் பங்களிப்புகளி லிருந்து கிடைக்கும் நிதிகள் அடிப்படையிலான நல்கைப் பணம் செலுத்தல்களைத் தாமதமாகப் பெறலாம். இதன் விளைவாக, நல்கைகள் வரிசையில் நிறுத்தப்படும், முதலில் வந்தவருக்கு முதலில் சேவை என்ற அடிப்படையில்தான் அவற்றுக்குப் பணம் வழங்கப்படும், இதன் மூலம், அவர் களுடைய திட்டங்களைச் செயல்படுத்துவதில் தாமதம் ஏற்படும்.

சங்கங்கள் தங்களுடைய பட்டயக் கணக்காளரைத் தொடர்புகொள்ளலாம், FCRAவுடன் தங்களைப் பதிவு செய்துகொள்வதற்கு உதவி பெறலாம். நீங்கள் நேரடியாக FCRA இணையத் தளத்தையும் அணுகலாம்: https://fcraonline.nic.in/home/index.aspx.

**ரோட்டரியைக் கண்டறியுங்கள்:** உறுப்பினர்கள் அல்லது உறுப்பினரல்லாதோருடன் உரையாடும்போது/கூட்டங்களை நடத்தும்போது பயன்படுத்துவதற்கான ஒரு பயனுள்ள ஆவணம், சங்க உறுப்பினர்களுக்காகப் பவர்பாயின்ட் வழங்கல் வடிவில் கிடைக்கிறது. இது, ரோட்டரியைப்பற்றிய ஓர் அறிமுகத்தை வழங்குகிறது, அதனை இங்கு பெறலாம்: https://www.rotary.org/myrotary/en/document/discover-rotary.

**சங்கப் பதாகைகள்:** TRF நல்கைகள் மற்றும் திட்டங்களை ஆதரிக்கும் சங்கங்கள், அதற்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்கான பல வாய்ப்புகளை TRF அச்சங்கங்களுக்கு வழங்குகிறது. ரோட்டரி சங்கங்களுக்குக் கிடைக்கும் பல சங்கப் பதாகைகளின் பட்டியல் இதோ: 100% அறக்கட்டளைக்கு வழங்குதல் சங்கம்; 100% ஒவ்வொரு ரோட்டரியனும், ஒவ்வோர் ஆண்டும் சங்கம்; 100% பால் ஹாரிஸ் தோழமைச் சங்கம் (ஒருமுறை அங்கீகாரம்); ஆண்டு நிதி வழங்கலில் தனி நபர் அடிப்படையில் முதல் மூன்று மற்றும் 100% பால் ஹாரிஸ் சமூகச் சங்கம். ரோட்டரி இணையத் தளத்திலுள்ள அங்கீகாரங்கள் பக்கத்தை இங்கு காணுங்கள்: https://www.rotary.org/en/donate/recognition.


**TRFல் மிகப் பெரிய நன்கொடையாளர் அங்கீகாரம்:** தனியாக அல்லது தம்பதியாகச் சேர்ந்து $10,000 வழங்கியுள்ள அனைவரையும் TRF மிகப் பெரிய நன்கொடையாளராக அங்கீகரிக்கிறது, அந்தப் பரிசின் வகை எதுவாக இருந்தாலும் சரி. இந்த அங்கீகரிப்பு நிலையைத் தனிப்பட்ட பங்களிப்புகளின் வழியாக மட்டுமே பெற இயலும், இன்னொரு தனி நபர், சங்கம், மாவட்டம் அல்லது வேறோர் அமைப்பு வழங்கிய இணைப் பங்களிப்புகளின் வழியாகவோ அங்கீகாரப் புள்ளிகளின் வழியாகவோ பெற இயலாது.

**அங்கீகாரப் பொருட்கள் இந்த நிலைகளில் வழங்கலைக் கொண்டாடுகின்றன:**

- நிலை 1: $10,000 முதல் $24,999 வரை
- நிலை 2: $25,000 முதல் $49,999 வரை
- நிலை 3: $50,000 முதல் $99,999 வரை
- நிலை 4: $100,000 முதல் $249,999 வரை

**2021ல் சங்கங்கள்/மாவட்டங்கள் தங்களுடைய சமூக ஊடக உரையாடலை வலுவாக்க உதவும் குறிப்புகள்**

- சமூக ஊடகத்தில் உங்கள் சங்கம்/மாவட்டத்துக்கு மிகவும் பொருந்தும் தளங்களை அடையாளம் காணுங்கள்
- உள்ளடக்கத்திற்கு ஒரு தரப்பரிசோதனையை அமையுங்கள்
- சமூக ஊடகத்துக்கான நாட்காட்டியை உருவாக்குங்கள்
- ஆண்டு இலக்குகளை அமையுங்கள்
- தொடர்ச்சியான அணுகலுக்கு, பதிவுகளுக்காக ஒரு நபரை நியமியுங்கள்
- மொபைலில் நன்கு காணக்கூடிய படைப்புகளை உருவாக்குங்கள்
- உங்கள் சானல்களைச் சிந்தித்துத் தேர்ந்தெடுங்கள்
- பிற NGOக்கள், கூட்டு நிறுவனங்கள், RI பக்கங்கள், முக்கியமான உள்ளூர் அமைப்புகள் மற்றும் முன்னேற்ற அமைப்புகளின் சமூக ஊடகப் பக்கங்களைப் பின்தொடருங்கள்
- குறுகிய காலச் சமூக ஊடகப் பரப்புரைகளில் (இயற்கை யானவை அல்லது பணம் வழங்கிச் செய்யப்படுபவை) முதலீடு செய்யுங்கள்
- உங்கள் சமூக ஊடக நாட்காட்டியை உங்களுடைய ஒட்டுமொத்தப் பொதுத்தோற்றத்திட்டத்துடன் பொருத்துங்கள்
- உங்கள் சமூக ஊடகக் குழுவை அமைப்பதற்கு உதவு வதற்காக, நீங்கள் ரோடராக்டர்களுடன் உரையாடலாம்
- பலன்களைப் பின்தொடருங்கள், அளவிடுங்கள்
- எல்லா இடங்களிலும் இணையுங்கள். ■




# தன்னிகரில்லாத மேதை சித்தார் ரவிசங்கர்!


V ராம்நாராயண்

1946ம் ஆண்டு குளிர்காலத்தின் ஒரு நாள் காலைப் பொழுதில், மைசூரில், நடுத்தர வர்க்கத்தினர் வசிக்கும் ஒரு வீதியில் பழங்கால பாணியில் கட்டப்பட்ட ஓட்டு வீட்டின் முன் ஆஸ்டின் கார் வந்து நிற்கிறது. நீங்கள் வீட்டின் கொல்லைப்புற கதவின்அருகில் நின்றால் வீட்டிலுள்ள நான்கு அறைகளைத் தாண்டி வாசிலில் வருவது யார் எனத் தெரியும். அந்த வீதியை அக்ரஹாரம் என்றே சொல்லலாம். பைஜாமா குர்தா அணிந்த இரண்டு இளைஞர்கள், கையில் இசைச்கருவிகளுடன் காரிலிருந்து இறங்கி வீட்டில் வாசலை நோக்கி நடந்தனர். வராண்டாவில் செய்தித்தாளை படித்துக் கொண்டிருந்த இளைஞர், வருவது யார் என எட்டிப்பார்த்தார். வீட்டின் உள்ள அவனது தாத்தா மைசூர் வாசுதேவாச்சாரியார், காலை வேளையில் இசையை சாதகம் செய்துகொண்டிருந்தார். மைசூர் வாசுதேவாச்சாரியார், மூத்த கர்நாடக இசைக்கலைஞர். காரில் இருந்த மூன்றாவது நபர், அவர்கள் இருவரையும் ரவிசங்கர் மற்றும் அல்லா ராகா என்றும் ஹிந்துஸ்தானி இசைக் கலைஞர்கள் என்றும் அறிமுகப்படுத்துகிறார். முந்தைய நாள் மாலையில் ஒரு இசை நிகழ்ச்சியை நடத்தியதாகவும் சொல்கிறார். சித்தார் மற்றும் தபேலா இசைக்களைஞர்களான இருவரும் மூத்த கலைஞரான வாசுதேவாச்சாரியாருக்கு பயபக்தியுடன் தங்கள் மரியாதையை செலுத்துகின்றனர். பின்னர் தரையில் அமர்ந்து கொண்டு அவருக்கு சில ராகங்களை வாசித்துக்காட்டினர். ஆனால், வாசுதேவாச்சாரியார், அவர்களிடம், மன்னிக்கவும் உங்களின் இசை நிகழ்ச்சி பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்கிறார்.

வாசுதேவாச்சாரியார்



*பண்டிட் ரவிசங்கர் இள வயதில்.*




*புகழ் பெற்ற பாப் குழு பீட்டில்ஸின் கிட்டார் வாசிப்பாளர் ஜார்ஜ் ஹாரிசன்.*

இல்லத்துக்கு ரவிசங்கர் சென்றதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. அவருக்கு எப்போதுமே கர்நாடக இசை மீது மிகுந்த ஈடுபாடு உண்டு. தென்னிந்திய இசைக் கலைஞர்களான டைகர் வரதாச் சாரியார், வீணை தனம்மாள், M S சுப்புலெட்சுமி, T பாலசரஸ்வதி உள்ளிட்ட பல கலைஞர்களின் இசையை கலிபோர்னியாவில் சாண்டியாகோவில் உள்ள தனது இல்லத்தில் கேட்டு ரசித்திருக்கிறார்.


கிளாஸிக்கல் இசைக் கலைஞர்களிடையே ரவிசங்கரும் ஒரு புகழ் பெற்ற நபராக இருந்தார். மேற்கத்திய இசை ரசிகர்களை கவர்வதற்காக கர்நாடக இசையை நீர்த்துப்போகச் செய்துவிட்டார் என்ற குற்றச்சாட்டுகள் அவர் மீது வைக்கப்பட்டன. இதுபோன்ற குற்றச்சாட்டுகள் அவரது மனதை வேதனைப்படுத்தின. ஆனாலும், சித்தாரில் புதுப்புது ராகங்களை தெரிவு செய்து தனது சித்தார் இசையின் மூலம் தென்னிந்திய இசையை வடஇந்திய இசை ரசிகர்களிடம் கொண்டு சென்றார் என்பதை மறுப்பதற்கில்லை.

1920ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7ம் தேதி, உத்தரப்பிரதேச மாநிலம், வாராணசியில் ஷியாம் சங்கர் என்பவரின் நான்காவது மகனாகப் பிறந்தார். பெற்றோர் அவருக்கு நோபல் பரிசு வென்ற ரவீந்திர நாத் தாகூரை நினைவுபடுத்தும் வகையில் ரவீந்திரா என்று பெயர் வைத்தனர். அவரது தந்தை சட்ட மேதையாகவும் அப்போது இருந்த மன்னராட்சியில் அமைச்சராகவும் இருந்தார். உள்ளூரில் அமெச்சூர் பாடகராகவும் இருந்தவர்.

அவர்களது குடும்பமே இசைக் குடும்பமாக இருந்தது. மூத்த சகோதரர் உதயசங்கர் உலகப் புகழ்பெற்ற நடனக்கலைஞராக உருவாகி தனது குடும்பம், மற்றும் குழுவினருடன் மேலைநாடுகளுக்குச் சென்றார். மற்றொரு சகோதரர் ராஜேந்திரா நாடகத் துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டு தனது குழுவினருடன் உள்ளூரிலேயே இருந்துவந்தார்.



*மகள்கள் அனுஷ்கா சங்கர் (இடது) மற்றும் நோரா ஜோன்ஸ் ஆகியோருடன்.*



*மகள் அனுஷ்காவுடன் ஒரு கச்சேரியில்.*

உதய்சங்கருடன் அதிக நேரத்தை செலவிட்ட ரவிசங்கர், அவர்கள் நடத்தும் பாரம்பரிய நடனங்களில் இசைக்கருவிகள் வாசிப்பதை பார்த்தும் ரசித்தும் ஒரு சில விஷயங்களைக் கற்றுக்கொண்டார். தனது சகோதரரின் வெளிநாட்டுப் பயணம் மூலம் மேற்கத்திய கலைகளைப் பற்றியும் அவர் தெரிந்துகொண்டார்.

இளம்வயதில் குடும்பத்தை கைவிட்டு தந்தை சென்றுவிட்டதை எண்ணி வேதனை அடைந்தார் ரவி. வேறுவழியின்றி தாயார் குடும்பத்தை கவனித்து வந்தார். சகோதரர் உதய் சங்கர் மேலைநாடு களில் தனது நடனக்குழுவினர் மூலம் நிகழ்ச்சிகளை நடத்தி வந்த நிலையில், 9 வயதில் அவருடன் பாரீஸ் சென்றார். சகோதரரின் நடனக்குழுவில் தேர்ந்து விரைவிலேயே சிறந்த நடனக்கலைஞரானார். பின்னர் சித்தார் இசைக் கருவி மீது இருந்த தணியாத ஆர்வத்தால் இந்தியா திரும்பி பாபா அலாவுதீன் கான் என்பவரிடம் சித்தார் இசை பயின்றார். ஒரு நாளைக்கு 14 மணி நேரம் பயிற்சியில் ஈடுபட்டார். ஹிந்துஸ்தானி இசைக் கலைஞரும் ராஜேந்திராவின் மனைவியுமான லட்சுமி சங்கர், ரவிக்கு இசையை கற்பித்து அவருக்கு மெருகேற்றினார். உடல்நிலை மோசமானதன் காரணமாக பரதநாட்டியத்தை கைவிட்ட லட்சுமி, ஒரு முறை, சித்தார் இசையை வாசித்த ரவியின் கையிலிருந்து ரத்தம் வழிந்தோடுவதைப் பார்த்ததாகக் குறிப்பிட்டார்.

ரவிசங்கர் தனது கடுமையான நடவடிக்கைகளுக்கான காரணங் களை விளக்கினார். நான் குழந்தையாக இருந்த போது அம்மா என்னை சஞ்சலமானவன், அமைதியற்றவன் என அழைத்தார். எனது குரு நான் ஒரு பட்டாம்பூச்சி என்று அழைத்தார். நான் அமைதியற்றவன் என்பதற்கு கடிவாளம் போடவே அமைதியைத் தேடி அலைந்தேன். எனது இசையின் தெய்வீகம் இருப்பதையும், சந்தோஷம் இருப்பதையும், மனதிற்கு இதம் அளிப்பதுபோலவும் இருப்பதாக ரசிகர்கள் கருதினார்கள். ஒரு கலைஞன் மற்றவர்களுக்கு சொர்க்கத்தை உருவாக்குவதற்காக நரகத்தின் வழியே செல்ல வேண்டியிருக்கலாம் என்றார்.

ரவிசங்கர், அலாவுதீன் கானின் மகள் அன்னபூர்ணா தேவியை திருமணம் செய்துகொண்டார். அவர் சித்தாருக்கு ஒத்த கருவியான சுர்பாஹர் வாசிப்பதில் நிபுணர். தமது மனைவி திறமையான கலைஞராக இருப்பதை ரவிசங்கர் விரும்பவில்லை என்று பரவலாக முணுமுணுப்புகள் எழுந்த நிலையில் அவரது திருமண வாழ்க்கை வெகுநாள் நீடிக்கவில்லை. அன்னபூர்ணா தேவி, இன்னிசை நிகழ்ச்சிகளில் பங்கேற்பதிலிருந்து ஓய்வுபெற்றார். 2018ம் ஆண்டு இறக்கும்வரை தனியாகவே வாழ்ந்துவந்தார்.

1950களில் மீண்டும் மேலை நாடுகளுக்கு சித்தார் இசைக் கலைஞராகச் சென்றார். அவரது இசை நிகழ்ச்சிக்கு பார்வை யாளர்கள் குறைந்த அளவிலேயே இருந்தனர். மேலும் இந்திய இசையை அவர்கள் பாராட்டவும்


முன்வரவில்லை. படிப்படியாக அவர் இந்திய இசையை வளர்த்தார். பல்கலைக்கழகங்களில் எண்ணற்ற நிகழ்ச்சிகள் மூலமும், இந்திய இசையின் மகத்துவத்தை எடுத்துக்கூறியும் தமது திறமையான வெளிப்பாடுகிளினாலும், வசீகரத்தாலும் மேலை நாட்டவரின் மனதை வென்றார். இந்திய இசையை உலக அளவில் கொண்டு சென்றார். அதுமட்டுமல்லாமல் இந்திய இசையை மேற்கத்திய இசையுடன் கலந்தார். ரவியுடன் இணைந்து செயல்பட்ட அவரது நண்பரும், பிரபல வயலின் இசைக்கலைஞருமான யெஹுதி மெனுஹின் இப்படி குறிப்பிட்டார். நான் ரவியுடன் இணைந்து நிகழ்ச்சி நடத்த முதலில் பயந்தேன். நான் எந்த வகையிலும் அவருக்கு இணையானவன் அல்ல என்று உணர்ந்தேன் என்றார். ஜீன் பால் ராம்பால், ஆண்ட்ரே ப்ரெவின் மற்றும் இசையமைப்பாளர் பிலிப் கிளாஸ் மூவரும் ரவிசங்கரின் அசல் இசையமைப்பின் கீழ் பணியாற்ற முன்வந்தனர். பீட்டில் ஜார்ஜ் ஹாரிஸன், அவரிடம் சித்தார் இசையை கற்றுக் கொண்டார். இசை ஆல்பங்களை உருவாக்கி அவருடன் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். மேலும் அவரது சுயசரிதையை சீரமைத்து அறிமுகப்படுத்தினார்.

இந்திய கிளாஸிகல் இசையை மேலை நாடுகளில் தீவிரமாக பரப்புவதை ஒரு இயக்கமாகவே அவர் மேற் கொண்டார். 1950களில் அவர் மேற்கொண்ட பிரேஸில் நாட்டுப் பயணத்தின் ஒரு பகுதி இதை விரிவாக எடுத்துக்காட்டுகிறது. ஒருநாள் இசை நிகழ்ச்சி முடிந்து அவரும் அவரது குழுவினரும் ஹோட்டல் அறைக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். அப்போது தப்லா இசைக் கலைஞர் அல்லா ராகாவும் உடன் இருந்தார். திடீரென மின்சாரம் தடைபட்டது. எல்லோரும் சித்தார், தம்புரா, தப்லா உள்ளிட்ட வாத்தியக் கருவிகளுடன் 14-வது மாடியில் உள்ள அறைக்கு படிக்கட்டுகள் வழியே செல்ல நேர்ந்தது. ரவிசங்கர், சித்தார் இசைக் கருவியுடன் வேகமாக படியேறிச் சென்று கொண்டிருந்தார். மற்றவர்கள் பின்னால் வந்தனர். 14 மாடி ஏறவேண்டுமே என்று புலம்பிக்கொண்டே வந்தனர். 10-வது மாடிக்கு வந்ததும் அவர்களில் இருவர் மேலே ஏறமுடியாமல் அங்கேயே உட்கார்ந்துவிட்டனர். ரவிசங்கர் அறைக்குச் சென்று தனது கருவியை வைத்துவிட்டு, இரண்டு மூன்று முறை இறங்கி ஏறி அவர்களின் வாத்தியக்கருவிகளையும் எடுத்துச் சென்றார். அவர் கொஞ்சம்கூட சோர்வடையவில்லை. கடைசியாக தனது குழுவினரையும் கையை பிடித்து அழைத்து வந்தார். அதன் பிறகு அவர்களைப் பார்த்து ரவி சொன்னார். நாம் ஒரு பெரிய சாதனையைச் செய்து விட்டு வந்தோம் என்ற பெருமை உங்களுக்கு இல்லையா. நாம் ரியோடி ஜெனிரோவில் இருந்துகொண்டு பிரேஸில் நாட்டவர்களுக்கு நமது இந்திய இசையை கொடுக்கிறோம். அவர்களும் அதை ரசித்தனர். இது சிறிய சாதனை அல்ல. நாம் இப்போது படும் கஷ்டங்கள் பெரியவை அல்ல. நாம் இந்திய இசையை உலகின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் கொண்டு செல்கிறோம். அதுதான் முக்கியம் என்றார்.

ரவிசங்கரின் ஆதரவாளரான லட்சுமி சங்கர், ஒருமுறை கூறினார், ரவிசங்கர் இசை துருபத் ஸ்டைலில் உள்ளது. இது சாதாரணமானது அல்ல, அவரது இசைக்கு எதிராக எழுந்த விமர்சனங்களுக்கு பதில் கூறுவதாகும். அவர் “தும்ரி” அல்ல “காட்” வாசித்தாலும் அது



*மனைவி சுகன்யாவுடன்.*



*ரவிசங்கர் தம்பதியினர் ஸர் பால் மெக்கார்ட்னி மற்றும் பீட்டில்ஸின் ரிங்கோ ஸ்டாருடன்.*

இந்திய இசையாகத்தான் இருக்கும். மேற்கத்திய இசை ரசிகர்களை நம் பக்கம் இழுப்பதற்காக இந்திய இசையில் சில மாற்றங்களைச் செய்துள்ளார். இந்த மாற்றத்தை அவர் செய்யாவிட்டால் மேலை நாடுகளில் இந்திய இசை காணாமல் போயிருக்கும். என்றார்.

பல ஆண்டுகள் அயராத பயணம் மற்றும் இடைவிடாத நிகழ்ச்சிகள் மூலம் ரவிசங்கர் இந்தியாவின் மிக பிரபலமான இசைக்கலைஞர்களில் ஒருவரானார். 1999ம் ஆண்டு அவருக்கு “பாரத ரத்னா” விருது வழங்கப்பட்டது. 15 கௌரவ டாக்டர் பட்டம், மகசேசே விருது, 2 கிராமிய விருதுகள், டாவோஸில் கிறிஸ்டல் விருது, ஜப்பானில் ஃபுகுயோகா கிராண்ட் பிரிக்ஸ் விருது உள்ளிட்ட எண்ணற்ற விருதுகளை அவர் பெற்றுள்ளார். வாராணசி மற்றும் புனேயில் அறிவுசார் ரசிகர்கள் முதல் உட்ஸ்டாக் மற்றும் மான்டிரே பாப் இசை விழா வரை பல்வேறு பார்வையாளர்களை தமது இசை மூலம் அவர் கவர்ந்துள்ளார். அகில இந்திய வானொலியில் 1949ல் பணியாற்றினார். உருதுக் கவிஞர் முகமது இக்பாலின் “ஸாரே ஜஹான்சே அச்சா” பாடலுக்கு இசையமைத்தார். சத்யஜித் ரேயின் பதேர் பாஞ்சாலி, காபுலிவாலா, ரிச்சர்ட் அட்டன்பரோவின் “காந்தி” உள்ளிட்ட திரைப்படங்களுக்கும் இசையமைத்துள்ளார். அலி அக்பர் கானுடன் இணைந்து இந்திய கிளாஸிகல் இசையில் பல்வேறு ஜுகல்பந்தி நிகழ்ச்சிகளை அரங்கேற்றியுள்ளார்.

இசை உலகில் சிறந்த குருவாகவும் அவர் விளங்கினார். இசையில் ஆர்வம் உள்ள இளைஞர்கள் அவர்கள் எங்கிருந்து வந்திருந்தாலும் அவர்களை அரவணைத்து இசைப் பயிற்சி அளித்தார். இரண்டாவது திருமணத்தின் மூலம் பிறந்த மகள் அனுஷ்காவும் அவர்களில் ஒருவர். சில சமயங்களில் மகளை விளம்பரப்படுத்த முயன்றதாகவும் அவர் மீது குற்றச்சாட்டுகள் எழுந்தன.

1973–74ம் ஆண்டுகளில் அவர், வாராணசியில் “ஹேமங்கனா” என்ற பெயரில் இசைப்பயிற்சி அளிக்கும் குருகுலத்தை நிறுவினார். அதற்கு ரவிசங்கர் இசை மற்றும் கலைப் பயிற்சி நிலையம் என பெயரிடப்பட்டது. அங்கு ஆண்டுதோறும் இந்தியா முழுவதிலிருந்து 20 முதல் 25 மாணவர்கள் சேர்ந்து இசைப்படித்து வந்தனர். காலையில் கடுமையான இசைப்பயிற்சி மேற்கொள்ளும் மாணவர்களுக்கு மாலையில் கேளிக்கை நிகழ்ச்சிகளில் பங்கேற்கவும் ஏற்பாடு செய்தார். அவர் ஒரு கடினமான இசை ஆசிரியராகவும், எதைச் செய்தாலும் நிறைவாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்டவராகவும் இருந்தார். நேற்று இரவு நம்முடன் கேலியுடன் சிரித்து விளையாடிய இவரா இப்படி கடுமையாக இருக்கிறார்? என்று மாணவர்கள் ஆச்சரியப் படுவார்கள். ஹேமங்கனாவின் ஆண்டு விழாவில் பிரபல இசை மற்றும் நடனக் கலைஞர்களின் நிகழ்ச்சிகள் நடை பெறும். இறுதியாக ரவிசங்கர் தனது கச்சேரியை நடத்துவார்.

ஹேமங்கனா கலா நிலையம் அற்புதமாக கலை நுணுக்கத்துடன் வடிவமைக்கப்பட்டிருந்தது. மாணவர்கள் தங்கும் விடுதியும் அழகான தோட்டத்துடன் அமைந்திருந்தது. இயக்குநர் சத்யஜித்ரே ஒரு முறை இங்கு வந்து பார்த்து விட்டு மிகவும் ஆச்சரியப்பட்டுப் போனாராம். ஆனால், ரவிசங்கள் அடிக்கடி தனது இருப்பிடத்தை மாற்றிக்கொண்டே இருந்ததால் ஹேமங்கனா மூன்றாண்டுகளுக்கும் நீடிக்க முடியவில்லை.

ரவிசங்கர் 92 வயதில் மறைந்தார். அவரது தந்தையின் மர்ம மரணம், ஆரம்பகால பாலியல் துஷ்பிரயோகம், இளம் வயதிலேயே இறந்த அவரது மகன் சுபேந்திராவுடன் இருந்த சிக்கலான உறவு என பல கேள்விகளுக்கு இன்னமும் விடை கிடைக்கவில்லை. ஆனால், ரவிசங்கர் மாறுபட்ட ஓட்டத்துடன் தனது பயணத்தைத் தொடர்ந்தார். மனைவி மற்றும் தொகுப்பாளரான சுகன்யா அவருக்கு ஆதரவாகவும் பலமாகவும் இருந்தனர். திறமையான இளம் கலைஞர்களை உருவாக்கியதும், கூட்டுத் தயாரிப்பு நிகழ்ச்சிகளும் அவருக்கு மகிழ்ச்சியை கொடுத்தன. அதன் மூலம் அவர் அமைதியை அடைந்தார்.■

# மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு வாழ்வளிக்கும் கோவை மெரீடியன் சங்கம்

ஜெய்ஸ்ரீ

எலும்பியல் அறுவைச் சிகிச்சை நிபுணர்களும் பிஸியோதெரபிஸ்டுகளும் ஒன்று சேர்ந்தால் என்னவாகும்? குழந்தைகளுக்கு சரியான, சீரான முறையில் அறுவைச்சிகிச்சை செய்யப்பட்டு அவர்கள் சொந்த காலில் நின்று தரமான வாழ்க்கை வாழ வைக்கமுடியும். அறுவைச் சிகிச்சை நிபுணர்களான அப்துல் சலாம் மற்றும் கார்த்திகேயன் மற்றும் பிஸியோதெரபிஸ்டுகள் சதீஷ்குமார், காரத்தீஸ்வரன் மற்றும் மதனகோபால் ஆகியோரால் இது சாத்தியமானது. ரோட்டரி மாவட்டம் 3201க்கு உட்பட்ட, தொடங்கி ஒருவருடமே ஆன கோயம்புத்தூர் மெரீடியன் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர்கள். இவர்களை அனைவரும் ஒருங்கிணைந்து செயல்படுகின்றனர்.

RID 3220-க்கு உட்பட்ட RC கிரேட்டர் கொழும்பு, இலங்கை மற்றும் TRF ஆகியவற்றுடன் இணைந்து மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு அறுவைச்சிகிச்சை மற்றும் பிஸியோதெரபி சிகிச்சை அளித்து அவர்கள் நடப்பதற்கு உதவி வருகிறோம் என்கிறார் சங்கத்தின் தலைவர் Dr சதீஷ்குமார். குழந்தைகளுக்கு அறுவைச் சிகிச்சை மேற்கொள்வதற்காக கடந்த ஆண்டு சாசனத் தலைவர் தமிழ்ச் செல்வன் மற்றும் TRF தலைவர் சீனிவாசன் ஆகியோர் தலைமையில் சர்வதேச மானிய உதவிக்கு விண்ணப்பித்தோம். இப்போது சர்வதேச மானிய உதவி 36,000 டாலருடனும் சங்கத்தின் பங்களிப்பான 10,000 டாலருடனும் நகரத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் ஆண்டுக்கு 75 முதல் 100 குழந்தைகளுக்கு அறுவைச் சிகிச்சை செய்ய திட்டமிட்டுள்ளோம்.

சாதாரணமாக மருத்துவ மனையில் சேர்ப்பது, அறுவைச் சிகிச்சை, அதற்குத் தேவையான உபகரணங்கள், பிஸியோதெரபி இவற்றுக்காக ரூ.60,000 முதல் ரூ.80,000 வரை செலவாகும். ஏழை மக்களால் இவ்வளவு செலவு செய்ய முடியாது. ஆனால், கோயம்புத்தூரில் “ஒன் கேர்” மருத்துவமனையை நடத்தி வரும் Dr அப்துல் சலாம், தேவைப்படுபவர்களுக்கு இலவசமாக அறுவைச்சிகிச்சை செய்ய பெரிய மனதுடன் முன்வந்துள்ளார். அறுவைச் சிகிச்சைக்குத் தேவையான அடிப் படை செலவுகள் மற்றும் அறுவைச் சிகிச்சைக்கு பிந்தைய செலவுகளை ரோட்டரி சங்கம் கவனித்துக் கொள்ளும். இந்த தொகை குறைந்தபட்சம் ரூ.35,000 வரை இருக்கும் என்றார் Dr சதீஷ்குமார்.

நகரின் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் மருத்துவ முகாம் மூலம், மாற்றுத்திறனாளிகள் நல்வாழ்வு சங்கத்தின் உதவியுடன் பயனாளிகள் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். இதுவரை இரண்டு முகாம்கள் நடத்தப்பட்டு 70 குழந்தைகள் அறுவைச்சிகிச்சைக்கு தேர்வு செய்யப் பட்டுள்ளனர். 10 பேருக்கு அறுவைச் சிகிச்சைகள் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

1 வயது குழந்தை முதல் 18 வயதுடைய சிறுவர்கள் வரையிலான ஊனமுற்ற கால், வளைந்த கால்கள், கப்பைக்கால்கள் குறைபாடுகள் உள்ளவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. சிறு வயதில்யே இந்த குறைபாடுகளை சீர் செய்து விட்டால் அவர்கள் எல்லோரையும் போல நடக்க முடியும். துரதிருஷ்ட வசமாக கிராமங்களில் உள்ளவர்கள் வளைந்த கால்கள் உள்ள குறைபாடு களை சீர் செய்யும் செய்யும் அறுவைச்சிகிச்சை பற்றிய விழிப்புணர்வு இல்லாமல் இருக்கிறார்கள். அதை சரி செய்து கொள்ளும் வழிமுறைகளையும் அவர்களுக்குத் தெரியவில்லை என்றார் Dr சதீஷ்குமார்.■

*சங்கத்தலைவர் Dr சதீஷ்குமார் மருத்துவமனையில்.*



Wordsworld

# Of shikaras and heaven on earth

Sandhya Rao

It's not uncommon for novels to find voice on the big and small screens, but a TV serial becoming a novel? That's surely unusual.

"All these relations originate from these houseboats of ours. Don't you see how many letters I receive? Letters come from far-off countries across the oceans, where I can never reach. Is there any corner of our own country where we don't have acquaintances? All this is possible because of these houseboats, which your brothers want to sell." This passionate and anguished voice belongs to Malla Khaliq, owner of three houseboats on Dal Lake in Srinagar, father of three grown sons and a daughter, belonging to the Hanji community of boating people in Kashmir. For generations his family has lived on water and this is where he sees his children's future as well. But it is the 1990s and Kashmir is changing. And even though tourism is the bread and butter of this beautiful state's economy, and houseboats its beating heart, even that is changing.

These sentiments expressed by Malla Khaliq synopsise the over 400-page-long novel by Pran Kishore called *Gul, Gulshan, Gulfam*, originally written in Kashmiri and translated into English by the well-known poet, Shafi Shauq. And there hangs a tale that's screaming to be shared. I had not heard of Shafi Shauq until I met him at the Frankfurt Book Fair in 2006 when India was invited to be the Guest of Honour. I was (and still am) ashamed of my ignorance because his is a very powerful voice in Kashmir's contemporary literary history. As a poet, fiction writer, linguist and critic, he has written in Kashmiri, English, Urdu and Hindi. I had the opportunity to listen to him reciting his poetry in Frankfurt. One of the pamphlets distributed there carried this poem in English translation:

### Crossing a street

Crossing a street, I lower my head in case of danger. Sometimes, it's something's absence I sense — nothing as tangible as rocket or gun. I must be careful. I cross the street, to find the house where I'd expected it to be not there. I look around in case I'm in a new neighbourhood. Easy to lose your way. It's easy to lose your way at home, to cross the street and never look back. I lower my head instinctively to protect myself from what I can't see.

One evening, soon after arriving in Frankfurt, Shafi Shauq was taking a walk by the river Main when he was accosted by an official-looking stranger who demanded to see his 'documents'. Intimidated by his demeanour and unfamiliar with local practice, Shauq obliged. In a trice, the stranger made off with his wallet. By the time he could gather his wits and report the incident, Shauq's bank account in Srinagar had been drained of all funds.

When I saw Shafi Shauq's name as translator, I went online and discovered something Amit Chaudhuri had written in an *Indian Express* article dated December 2, 2019, entitled 'The actual Shafi Shauq': 'Among those I met was a small, suited Kashmiri poet called Shafi Shauq. The term "Kashmiri poet" carried a mild voltage. I was speechless for an instant, then said, "Hello!" Not that a Kashmiri poet is an impossibility, but that Shafi Shauq represented a concatenation of impossibilities, to do with his presence here, with a resolution to the problem being found, and peace ever being regained. I wanted to study him closely and ask him for forgiveness. He was diffident, as non-Anglophone writers — especially poets — are. Kafka-like, he'd adopted the guise of normalcy — I mean his 20th-century appearance, the black suit, meant to sidestep attention. He was fair; his eyes shone gently. He had lost hair, like a Jewish intellectual.' He went on, in the article, to refer



to the very same wallet-snatching incident.

This is a digression, but it is a digression that connects; it shows how people are attached to each other in a myriad ways, how even a disconnection is a connection because there cannot be a split without a joining to begin with. I came to this novel late; my mother had read it at least a couple of years earlier, perhaps one of the last novels she read before she died. She had loved it; I could see it in the way her eyes shone when she returned the book to me. 'Very nice,' she said, adding that she loved reading about things she had known nothing about. 'And the people are so real,' she said. So true, I think as I read. *Gul Gulshan Gulfam* is that rare book that elaborates on the ordinary lives and relationships of ordinary people engaged simply in the business of eking out a living in the only way they know, in the only place they know. To those outside that milieu, this is exotica, but to the Hanji people, this is life, another 'India' even if 'India' itself is 'other' for them.

The extraordinary thing is that this novel was born as a television serial telecast on Doordarshan. In recent times, there have been occasions when films, particularly for children, have been written up as novels. But *Gul Gulshan Gulfam* is something else, it's so big that it's worth recounting



the details from something that Pran Kishore himself wrote in an article appended to the book (and published online). The article is titled 'The Dal formed an indelible imprint on my mind…' Kishore was a well-known name in theatre circles but he nursed a desire to write a novel because he felt books had a greater impact. His first novel, *Sheen Ta Vatapod*, published in 1987, had received the Sahitya Akademi Award. He was all ready to write his second.


For this he recalled a time in the 1940s when he 'rented a small boat at the rate of one rupee per day from the quay of my native place, Chinkral Mohalla, in the city of Srinagar. Taking my childhood friends along,
I roved through the Maer Canal of the old city and reached Gagribal in the Dal Lake. It was during this journey that the Dal formed an indelible imprint on my mind and I took an interest in the dwellers of the Dal.'
A few years on, Pran Kishore had the happy fortune of meeting Haji Abdul Samad Kotroo who owned a chain of houseboats in the Dal. As Kishore writes, 'My interactions with this exceptional human being and his family members inspired me to write about the lives of the boatmen of the lake who have been mingling the sweat of their toil with the waters of the lake for generations. Being a father figure, Kotroo Sahib was venerated by not only the boatmen but also the vegetable growers who dwelt in the marshes around the lake. He had continued the tradition that his father had set — of treating the tourists who would often come to escape the maddening city life to stay in his houseboat, as his own kith. Similarly, Malla Khaliq is conscientious of his duties of making his guests feel at home. This is how the seed of the novel *Gul Gulshan Gulfam* was sown in my mind…'

Whichever Kashmir comes to your mind, the Kashmir of Hindi films, honeymoons and photo ops, or the Kashmir of terrorism, militancy and separatism, it is nowhere near the whole story. Pran Kishore's book gives readers a chance to peep into that inner world in which flesh and blood people lead strenuous lives enmeshed in a web of relationships and events in a region of incredible beauty that has been under tremendous political, social and economic pressure for uncountable numbers of years. He gets as close to the life breath of Kashmiris as he possibly can, eschewing along the way the many stereotypes and misconceptions, preconceived notions and historical aberrations that have come our way over the years.

But our story for this column is not yet done because here, now, filmmakers Sunil Mehta and Prem Kishen make their entry. In Kashmir to shoot their film *Nai Shirvaani* based on a Russian short story called 'The Overcoat', they heard Pran Kishore narrate to them the story of *Gul Gulshan Gulfam*, and promptly purchased its broadcasting rights. Before long, the serial was out and airing, its title song echoing in every Hindi-speaking home, with Parikshit Sahni heading a wonderful team of actors and Ved Rahi directing. *Muskurati subha ki aur gungunati shaam ki, yeh kahani Gul ki hai, Gulshan ki hai, Gulfam ki* apparently went on to win the Best Title Song Award from the Radio, Television Producers' and Advertisers' Association!

Shafi Shauq calls the novel the 'quintessential *mahaakaaviya* (prose epic) of contemporary Kashmir.
In following the lives of characters belonging to three successive generations of post-Independence Kashmir, and paying proportionate attention to the actions and moral

choices of each individual living under specific and sometimes limiting socio-economic and cultural conditions, *Gul Gulshan Gulfam* emerges as a novel at the cusp of Indian economic liberalisation and Kashmiri identity in flux.'




It's a tremendously visual narrative, and we now understand why. There are no chapters in the book, only a tiny ink sketch of a shikara or boat, indicating pauses in the telling, thus reflecting the episodic nature of serials. You see how the weather impacts the tourist season, and how tourism is a mainstay. You see competition, exploitation, the pull of traditional practices and nuances of relationships. You see the Khalistan trouble in neighbouring Punjab reducing footfalls into Kashmir. When Khaliq's eldest grandson returns home from studying medicine in Jaipur, his decision to practice 'on land' as against on the lake, deals a body blow to his grandfather. 'Nisar Ahmed is going to leave this house today and live on land,' he cries to his childhood friend, Narayan Joo. When the latter urges him to understand that times have changed, Khaliq says, 'It is easy to lecture. But only the suffering person knows his pangs.' And there's suffering in large doses, as also happy events such as births and marriages. There are wonderful descriptions of Srinagar: the majestic Zabarwan mountains rising above the Dal lake, the different parts of the lake each with its own character, the network of houseboats and shikaras, the waterways, the Jhelum, the Mughal Gardens…

The words 'If there be paradise (heaven) on earth, it is this, it is this, it is this' generally ascribed to Hazrat Amir Khusrau are widely believed to describe Kashmir when in fact, they're a comment on Delhi. Hard to believe, but this is what Rana Safvi tells us in her book *Shahjahanabad: The Living City of Old Delhi*. These words are inscribed in the Diwan-i-Khas at Red Fort: *Agar Firdaus bar ru-ye zamin ast / Hamin ast-o hamin ast-o hamin ast*. Yet, despite the heavy militarisation, there is little doubt that the beauty of the land and the people of this much maligned region will meet the expectations of this couplet. In the final analysis, that's exactly what *Gul Gulshan Gulfam* does, despite the somewhat shoddy editing. For those more interested in the TV serial, do take a look at Rayan Naqash's article, 'Why tourists still look for 'Gul Gulshan Gulfam' when they visit the Dal lake in Srinagar' in *scroll.in*. You must have guessed by now: these are the names of Malla Khaliq's three houseboats.

*The columnist is a children's writer and senior journalist.*

Designed by Krishnapratheesh

# புசவாலில் தூய்மையை முன்னிறுத்துவதற்காக சைக்ளத்தான்

ரோட்டரி செய்திக்குழு



RC புசவால் ரெயில்சிட்டி, RID 3030, புசவால் நகராட்சி அவையுடன் இணைந்து, "பசுமை புசவால், மாசு இல்லாத புசவால்" என்ற கருப்பொருளின் கீழ் தூய்மையைப்பற்றிய விழிப்புணர்வை முன்னிறுத்து வதற்காகவும் உண்டாக்குவதற்காக சைக்கிள் ரேலி நடத்தியது.

5, 10 மற்றும் 20 கிமீ நீளத்துக்கு மூன்று பேரணிகள் ஒரே நேரத்தில் கொடியசைத்துத் தொடங்கி வைக்கப்பட்டன. 4 வயது முதல் 70 வயது வரையுள்ள 600 பங்கேற்பாளர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றார்கள். ஒவ்வொருவருக்கும் டி-சட்டை, தொப்பி, முககவசம், பேனா, நாட்குறிப்பு, எழுதும் அட்டை, சாவிச்சங்கிலி மற்றும் சில நினைவுப் பொருட்களைக் கொண்ட பரிசுப்பொருள் பை வழங்கப்பட்டது. நிகழ்ச்சியின் நிறைவில், பேரணியில் கலந்துகொண்டவர்கள், புசவாலைத் தூய்மையாகவும் பசுமையாகவும் வைத்திருப்பதாக உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள். ■

# ஜாம்பியாவில் ஒரு சங்கத்தைப் பதிவு செய்துள்ள RC ஆதர்ஷ் அகமதாபாத்

ஜெய்ஸ்ரீ

இந்திய ரோட்டரி சங்கம் ஒன்று வெளிநாட்டில் ஒரு சங்கத்தை ஆதரிக்கிறது என்று எப்போதாவது கேள்விப் பட்டிருக்கிறீர்களா? RC ஆதர்ஷ் அகமதாபாத், RID 3054, ராஜஸ்தான் இதைத்தான் செய்திருக்கிறது, அதாவது, ஜாம்பியாவில் உள்ள RC சிங்கோலா மெட்ரோ, RID 9210ஐப் பதிவு செய்துள்ளது.

சில ஆண்டுகளுக்குமுன்னால், ஜாம்பியாவில் ஒரு மருத்துவத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக RID 9210ன் PDG ரவி தேவாலியா வுடன் ஒருங்கிணைத்துக் கொண் டிருந்தேன், அப்போதுதான் இந்தப் பேச்சு தொடங்கியது, என்கிறார் RC ஆதர்ஷ் அகமதாபாத்துக்கான பயிற்சியாளர் கபில் பவ்சார்.

அதன்பிறகு, ஜாம்பியாவில் தாமிரச் சுரங்கங்களுக்குப் புகழ் பெற்ற நகரமான சிங்கோலாவில் உள்ள தன்னுடைய உறவினரான சேத்னா அவதேகரைச் சந்திக்கச் சென்றார் கபில், அப்போது, அவர் தேவாலியாவைச் சந்தித்தார்.

அங்குள்ள மோசமான மருத்துவ நிலையைக் கண்டு பவ்சார் வருந்தினார், அந்த மக்களுக்கு உதவுவதற்காகப் பல சிறப்புத்தன்மை மருத்துவமனையொன்றை அமைக்கலாம் என்று தன் உறவினரிடம் பேசினார், அத்துடன், ஒரு ரோட்டரி சங்கத்தையும் தொடங்கச் சொன்னார், அதற்கு எல்லா உதவிகளையும் தன்னுடைய சொந்தச் சங்கம் செய்யும் என்று வாக்களித்தார்.

தேவாலியா சேத்னாவை RC லுசாகா முலுபா, RID 9210ன் முன்னாள் தலைவரான முசா கசோன்காவுக்கு அறிமுகப்படுத்தினார். ஜூலை 2020ல் அவர்கள் உறுப்பினர்களைச் சேர்க்கச் சென்றார்கள் என்கிறார் பவ்சார். கசோன்கா பதிவுத் தலைவரானார், சேத்னா சங்கச் செயலாளரானார். மூன்று வாரங்களில், நிறுவல் நேரத்தின்போது அவர்கள் 53 புதிய உறுப்பினர்களைப் பெற்றார்கள், இதன்மூலம், அந்த மாவட்டத்தில் நான்காவது மிகப் பெரிய சங்கமாக அது ஆனது'' என்கிறார் இவர். அக்டோபர் 2020ல் இந்தப் புதிய சங்கத்தை RC ஆதர்ஷ் அகமதாபாத் பதிவுசெய்தது.

இப்போது இந்தச் சங்கத்தில் 62 உறுப்பினர்கள் உள்ளார்கள், 67 ரோட்டரியன்களைக் கொண்ட RC லிலோங்வே-க்கு அடுத்தபடியாக மூன்றாவது மிகப் பெரிய சங்கமாக இது உள்ளது.

இந்த இரு சங்கங்களும் இணைந்து சில சேவைத் திட்டங்களைச் செயல்படுத்தத் திட்டமிடுகின்றன. சிங்கோலாவிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கழிப் பறைகளை வழங்குவது ஒரு முக்கியத் தேவையாகும்; இதற்காக ஓர் உற்பத் தியாளரை பவ்சார் அடையாளம் கண்டுள்ளார். இவர் ஏற்கெனவே உருவாக்கப்பட்ட கழிப்பறைகளைத் தலா ரூ.26,000 என்ற உண்மை விலைக்குப் பதில் ரூ.19,000 விலைக்குத் தர ஒப்புக்கொண்டுள்ளார். இந்தக் கழிப்பறைகளை அங்கு அனுப்பும் பணியை என்னுடைய சங்கமும் அந்த ஆப்பிரிக்கச் சங்கமும் சேர்ந்து ஒருங்கிணைக்கின்றன. மருத்துவமனை அமைப்பதற்கான ஒரு திட்டத்தையும் நாங்கள் விரைவில் உருவாக்குவோம்'' என்கிறார் இவர்.

DG லூசி கசாங்கா, RID 9210, இந்தச் சங்கத்தின் முன்னேற்றத்தைக் கண்டு மிகவும் மகிழ்கிறார். ■




*PDG ரவி தேவாலியா மற்றும் DG லூஸி கசங்கா RC சிங்கோலா மெட்ரோ உறுப்பினர்களுடன்.*

# நலிந்த பின்னணியைச் சேர்ந்த பெண்களுக்குத் தையல் இயந்திரங்கள்

ரோட்டரி செய்திக்குழு



நலிந்த பின்னணியைச் சேர்ந்த 12 பெண்கள் தவணை அடிப்படையில் தையல் இயந்திரங்களைப் பெறுவதற்கு RC பர்ஹான்பூர், RID 3040, உதவியுள்ளது. இந்தப் பெண்கள் நிதி அடிப்படையில் வலிமை பெறவேண்டும், தன்னிறைவு பெறவேண்டும் என்ற இலக்குடன் இந்த உதவி செய்யப்படுகிறது.

இந்தத் திட்டத்தின்கீழ் ஓர் இயந்திரத்தைப் பெற ரூ.1,250 தொடக்கத் தொகையைச் செலுத்த வேண்டும், மீதமுள்ள தொகை மாதம் ரூ.370ஆகத் திரட்டப்படும்.

இந்தப் பெண்கள் தங்களுடைய இயந்திரங்களுக்குத் தாங்களே பணம் செலுத்தினால்தான், உரிமை உணர்வும் கண்ணிய உணர்வும் அவர்களுக்கு இருக்கும். தொடக்கத் தவணையைச் செலுத்த இயலாதவர்களுக்கு எங்களுடைய சங்க உறுப்பி னர்கள் சிலர் உதவினார்கள்" என்கிறார் சங்கத் தலைவர் ரிஜ்வான் அப்பாஸ். சென்ற மாதமும் இவர்களுடைய சங்கம் 10 தையல் இயந்திரங்களை வழங்கியதாக கூறுகிறார்.■

---

## இணையத்தில் ஒரு ரோட்டரி-CSR மாநாடு

RISAO ஊழியர்கள் மற்றும் ரோட்டரியில் இல்லாத தொழில் வல்லுனர்களுடன் உரையாடுகிற ஒரு வாய்ப்பை ரோட்டரியன் களுக்கு வழங்குவதற்காக, EMGA சுரேஷ் ஹரி மற்றும் அவருடைய குழுவினர் நீர், சுகாதாரம் மற்றும் தூய்மை பற்றிய ஓர் இணைய CSR மாநாட்டை நடத்தினார்கள்.

'TRF இணைப்பு'பற்றிய தொடக்க உரையை அறங்காவலர் குலாம் வாஹன்வதி வழங்கினார். இதைத் தொடர்ந்து, "கிவ் இந்தியா" தலைவர் E R அசோக் குமார், சோனி இந்தியாவின் பகுதி CSR தலைவர் தேப்ராஜ் S ராய் மற்றும் காக்னி சன்ட் நிறுவனத்தின் ஊழியர் தன்னார்வலர் திட்டத்தின் உலகத் தலைவர் தீபக் பிரபு மட்டி உள்ளிட்ட நிறுவன அலுவலர்களுடைய வழங்கல் தொடரொன்று நடைபெற்றது.

WASH வழியாகச் சமூகத்தில் ரோட்டரி ஒரு மாற்றத்தை நிகழ்த்துவது எப்படி என்பதை WinSன் உறுப்பினர் PDG ரமேஷ் அகர்வால் தெளிவாக விளக்கினார். ஒரு மிகப் பெரிய நீர்ச் சேமிப்புத் திட்டத்துக்காக டாடா டெக்னாலஜீஸுடன் ரோட்டரி இணைந்து செயல்படுவதை Rtn பங்கஜ் படேல் சுட்டிக் காட்டினார்.

ரோட்டரி பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் முன்னாள் தலைவர் ரவிசங்கர் டகோஜூ, தன்னுடைய வழங்கும் தெரிவாக ரோட்டரி அமைந்தது ஏன் என்பதுபற்றி முன்பே பதிவு செய்யப்பட்ட ஒரு வீடியோ உரையை வழங்கினார்.

EMGA J B காம்தர், RRFCக்கள் ஜான் டேனியல் மற்றும் லக்கராஜூ சத்யநரேன் ஆகியோர் ஹரியுடன் இணைந்து இதை ஒரு வெற்றி கரமான இணையக் கருத்தரங்கமாக ஆக்கினார்கள்.■

# District Wise TRF Contributions as on December 2020

(in US Dollars)

| District Number | Annual Fund | PolioPlus | Endowment Funds | Other Funds | Total Contributions | EREY Donors (in numbers) | EREY % |
|---|---|---|---|---|---|---|---|
| **India** | | | | | | | |
| 2981 | 37,517 | 3,571 | 10,923 | 0 | 52,011 | 173 | 3.5 |
| 2982 | 22,591 | 15,992 | 20,770 | 43,358 | 102,710 | 70 | 2.3 |
| 3000 | 23,575 | 15,896 | 20 | 8,700 | 48,191 | 48 | 0.9 |
| 3011 | 29,310 | 9,558 | 40,653 | 171,064 | 250,585 | 81 | 2.2 |
| 3012 | 10,706 | 2,480 | 0 | 8,532 | 21,718 | 46 | 1.3 |
| 3020 | 121,690 | 50,169 | 32,000 | 2,726 | 206,585 | 240 | 5.9 |
| 3030 | 18,221 | 2,284 | 21,243 | 128,275 | 170,024 | 63 | 1.2 |
| 3040 | 3,180 | 116 | 0 | 406 | 3,702 | 15 | 0.7 |
| 3053 | 9,733 | 2,593 | 0 | 92,289 | 104,615 | 28 | 1.0 |
| 3054 | 70,285 | 1,637 | 0 | 113,519 | 185,441 | 257 | 4.2 |
| 3060 | 38,125 | (186) | 32,641 | 56,375 | 126,955 | 669 | 15.3 |
| 3070 | 16,978 | 100 | 0 | 22,988 | 40,066 | 127 | 4.0 |
| 3080 | 42,053 | 12,083 | 0 | (19,761) | 34,376 | 88 | 2.7 |
| 3090 | 20,593 | 500 | 0 | (736) | 20,357 | 45 | 2.0 |
| 3100 | 43,392 | 252 | 0 | 4,224 | 47,868 | 150 | 6.7 |
| 3110 | 14,003 | 200 | 0 | 0 | 14,203 | 31 | 0.8 |
| 3120 | 1,055 | 1,769 | 0 | (1,769) | 1,055 | 3 | 0.1 |
| 3131 | 77,290 | 38,688 | 109,000 | 332,264 | 557,242 | 461 | 9.0 |
| 3132 | 13,759 | 2,582 | 0 | 963 | 17,305 | 42 | 1.3 |
| 3141 | 293,949 | 42,056 | 69,568 | 726,090 | 1,131,662 | 532 | 10.0 |
| 3142 | 147,612 | 7,472 | 101 | (8,578) | 146,607 | 393 | 12.3 |
| 3150 | 34,912 | 3,690 | 48,030 | 34,212 | 120,844 | 369 | 11.1 |
| 3160 | 10,075 | 6,951 | 16 | 0 | 17,042 | 33 | 1.3 |
| 3170 | 12,232 | 20,905 | 1,240 | 121,401 | 155,778 | 63 | 1.1 |
| 3181 | 25,453 | 2,775 | 0 | 7,050 | 35,278 | 95 | 2.8 |
| 3182 | 34,793 | 4,295 | 0 | 7,265 | 46,352 | 126 | 4.1 |
| 3190 | 45,356 | 35,012 | 25,000 | 112,074 | 217,442 | 412 | 8.2 |
| 3201 | 35,511 | 20,410 | 0 | 159,362 | 215,283 | 281 | 5.0 |
| 3202 | 26,887 | 19,295 | 8,468 | 20,272 | 74,923 | 99 | 1.8 |
| 3211 | 6,827 | 3,414 | 0 | 121,870 | 132,110 | 51 | 1.1 |
| 3212 | 13,691 | 32,054 | 14 | 108,733 | 154,492 | 18 | 0.4 |
| 3231 | (249) | 359 | 0 | 7,356 | 7,467 | 5 | 0.1 |
| 3232 | 17,160 | 33,242 | 2,000 | 361,364 | 413,766 | 108 | 1.9 |
| 3240 | 60,420 | 20,606 | 0 | 43,955 | 124,980 | 154 | 5.1 |
| 3250 | 9,179 | 713 | 0 | 93 | 9,986 | 138 | 3.7 |
| 3261 | 13,668 | 1,108 | 0 | 2,833 | 17,609 | 28 | 1.1 |
| 3262 | 23,710 | 2,500 | 0 | 0 | 26,211 | 68 | 1.9 |
| 3291 | 14,837 | 7,207 | 10,149 | 51,550 | 83,743 | 61 | 1.7 |
| **India Total** | **1,440,078** | **424,353** | **431,837** | **2,840,320** | **5,136,587** | **5,671** | **3.8** |
| 3220 **Sri Lanka** | 69,460 | 17,130 | 26,000 | 15,015 | 127,605 | 165 | 8.7 |
| 3271 **Pakistan** | 6,206 | 64,691 | 0 | 246,533 | 317,430 | 3 | 0.2 |
| 3272 **Pakistan** | 39,367 | 10,131 | 0 | 1,168 | 50,666 | 171 | 10.2 |
| 3281 **Bangladesh** | 119,573 | 5,445 | 29,000 | 150,549 | 304,567 | 361 | 5.1 |
| 3282 **Bangladesh** | 45,434 | 5,707 | 0 | 7,770 | 58,911 | 91 | 2.2 |
| 3292 **Nepal** | 114,934 | 9,063 | 0 | 188,061 | 312,058 | **1,226** | 24.8 |
| **South Asia Total** | **1,835,051** | **536,520** | **486,837** | **3,449,416** | **6,307,823** | **7,688** | **4.5** |
| **World Total** | **58,398,648** | **14,412,464** | **15,173,768** | **15,315,772** | **103,300,652** | | |

Source: RI South Asia Office

# முதுமையிலும் இளமையின் ரகசியம்

பரத் மற்றும் ஷலன்சாவர்

மதுகர் தல்வால்கரின் உயரமான, கம்பீரமான உடலழகுடன்கூடிய தோற்றத்தை பார்க்கும்போதும், தெளிவான குரலில், “நான் இப்போது வாழ்க்கையில் 87 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளேன்” என்று சொன்ன போதும் நான் அதிர்ச்சியில் ஆழ்ந்து விட்டேன். அவர் எந்தவிதமான சிரமமுமின்றி உடல் வலிமைக்கான உடற்பயிற்சிகளைச் செய்தபோது நான் பிரமித்துப்போய்விட்டேன். மிகவும் பிரபலமான தல்வால்கர் ஜிம் (உடற்பயிற்சி நிலையத்தின்) நிறுவனர் அவர்தான். அவருடன் நடந்துகொண்டே ஒரு பேட்டி.

உங்கள் உடலை நேசியுங்கள் என்று அவர் உற்சாகத்துடனும் ஈர்ப்புடனும் சொல்கிறார். உங்கள் உடலின் ஒவ்வொரு சென்டிமீட்டரையும் கவனித்துக் கொள்ளுங்கள். உடல்நலம், உடற்பயிற்சி, உணவுப்பழக்கம், தூக்கம் மற்றும் மனதை சரியாக வைத்துக் கொண்டால் எதுவும் உங்களை தொந்தரவு செய்யாது.

**50ல் 25 வயது இளைஞராக இருக்கலாம்:**

இது உங்களுக்கு உற்சாகமான நேரம். நமது நாடித் துடிப்பைவிட வேகமாக மாற்றங்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆனால், அதற்கெல்லாமல் பயந்துவிடாதீர்கள்.

உங்களது துடிப்பை யாரும் திருடிச் செல்ல விடாதீர்கள். அது உயர்ந்து மேலே பறக்கட்டும்.


நீங்கள் வானத்தை தொட முயற்சிக்கும்போது, உங்கள் முன்னேற்றத்துக்கு தடையாக இருக்க யாரையும் அனுமதிக்க வேண்டாம், என்கிறார் தல்வால்கர்.

நமது வாழ்க்கை முறை மேம் பாடுகளுக்கும் உடற்பயிற்சி ளுக்கும் ஆக்ஸிஜன் சிகிச்சை மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்கிறார் இஸ்ரேல் நாட்டு மருத்துவ மையத்தைச் சேர்ந்த டாக்டர் அமீர் ஹதானி. மூன்று மாதங்களுக்கு ஒரே அறையில் அதிக அழுத்தத்தில் ஆக்ஸிஜன் சிகிச்சை மேற்கொண்டால் உடலில் உள்ள செல்கள் 50 வயதானவர்களையும் 25 வயது இளைஞர்போல் தோற்ற மளிக்கச் செய்கிறது என்று டெல் அவிவ் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களான டாக்டர் அமீர் ஹதானி மற்றும் டாக்டர் சாஹி எஃப்ராடி இருவரும் கூறுகின்றனர்.

**மங்கலான கண்களில் ஒளி:**

ஹார்வார்டு மருத்துவப் பள்ளியின் மரபியல் துறை பேராசிரியரான டேவிட் சின்க்ளேர், சுகாதார அட்டவணையில் மிகப் பெரிய வாக்குறுதியை அளிக்கிறார். வயதைக் குறைக்கும் மருத்துவச் சிகிச்சை பற்றியது அது. சின்க்ளேர் மற்றும் அவரது குழுவினர் புதுவிதமான சிகிச்சை மூலம் எலிகளின் கண் பார்வையை மீட்டெடுத்துள்ளனர். வயது முதிர்வு மற்றும் நோய் காரணமாக குறிப்பாக மறதி நோய் காரணமாக செயலற்று போகும் திசுக்களுக்கு புத்துயிரூட்ட முடியும் என்கின்றனர் அவர்கள். இன்னும் இரண்டு ஆண்டுகளில் குளுகோமா என்னும் கண் அழுத்த நோய் குறைபாடுள்ளவர்களுக்கு பூரண சிகிச்சை அளித்து அவர்களுக்கு பார்வை வழங்க முடியும் என்கிறார் சின்க்ளேர்.

எலிகளின் விழித்திரையில் OSK என்னும் புரதக்கலவையை உட்செலுத்தி வலுவிழந்திருந்த நரம்புகள் மீண்டும் வளரச் செய்தனர். பழைய செல்கள் இளமையான உயிரோட்டமான செல்களாக மாற்றப்பட்டன. இதன் மூலம் மங்கலாக இருந்த



கண்பார்வை உலகைப் பார்க்கும் அளவுக்கு பிரகாசமானது. அதாவது கண்பார்வை மீட்டெடுக்கப்பட்டது.

“உங்கள் மனதின் சக்தி” என்ற புத்தகத்தில் Dr ஜோஸப் மர்பி, தனது பேச்சுக்குப் பிறகு தம்மை வந்து சந்தித்த ஒரு மனிதர் கூறினாராம். “எனக்கு 84 வயதாகிறது. நான் தினமும் காலையில் நோயாளிகளுக்கு அறுவைச்சிகிச்சை செய்கிறேன். பிற்பகலில் நோயாளிகளை கவனிக்கிறேன். மாலையில் மருத்துவம் மற்றும் அறிவியல் சஞ்சிகளுக்கு கட்டுரைகள் எழுதுகிறேன்” என்றாராம். டாக்டர் மர்பியின் பார்வையில் அவர் தன்னை நம்புகிறார், பயனுள்ள காரியங்களைச் செய்கிறார். அவரது எண்ணங்களும் இளமையாக இருக்கின்றன. அவர் என்னிடம், ஒருவர், தாம் நினைப்பது போலவே வலியமையாக இருக்க வேண்டும், மதிப்பு மிகுந்தவராக இருக்க வேண்டும். நான் நாளைக்கு கடந்து செல்லவேண்டுமானால் அடுத்த பரிமாணத்தில் மக்களுக்கு உதவு வதிலும், அவர்களை குணப் படுத்துவதிலும் ஈடுபடுவேன்.



அதாவது கத்தியால் அல்ல, மன தளவிலும் ஆன்மிக அளவிலும் என்றார். இந்த அறுவைச்சிகிச்சை நிபுணர் முதுமையால் சரணடைந்து விடவில்லை. ஏனெனில் தாம் அழியாதவர் என்று அவருக்குத் தெரியும் என்று முடிக்கிறார் Dr மர்பி.

அறுவைச் சிகிச்சை நிபுணர் பேசும் அடுத்த பரிமாணத்தின் வாயிலில் நாம் ஏற்கெனவே இருக்கிறோமா? அடுத்த பரிமாணம் என்பது பூமியில் உள்ளதா? நாம் இறக்கப் போவதில்லையா? மரபணுவியலாளர் ஜோஸ் லூயிஸ் கோர்டிரோ மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் கணிதவியலாளர் டேவிட் வுட் இருவரும் The Death of Death என்னும் புத்தகத்தில் தங்களது அறிவியல் கண்டுபிடிப்பு அழியாதது என்று குறிப்பிட்டுள்ளனர். 2045க்குள் முதுமை என்பது தெரியாததாகவும், இறப்பு என்பது விருப்பத்தின் அடிப்படையிலும் இருக்கும் என எதிர்பார்க்கிறார்கள். மனிதர்கள் விபத்தினால் இறக்கலாம். ஆனால் இயற்கையான காரணங்களினாலோ அல்லது நோய்களாலோ இறக்க மாட்டார்கள் என்று அவர்கள் அடித்துச் சொல்கிறார்கள்.

நானோ தொழில்நுட்பத்தின் மூலம் தேவையான உடல் உறுப்புகளை முப்பரிமாண வடிவத்தில் அச்சிட முடியும். இது புதிய உறுப்புகளை அறுவைச்சி கிச்சை மூலம் பொருத்துவது போல மட்டுமல்லாமல், செல்லரித்துப்போன மரபணுக்களை மாற்றிவிட்டு அதற்குப் பதிலாக ஆரோக்கியமான மரபணுக்களை மாற்ற முடியும் என்றும் உயிரற்ற செல்களை நீக்கிவிட்டு உயிருள்ள செல் களை புகுத்த முடியும், “ஸ்டெம் செல்”கள் மூலம் சேதமடைந்த செல்களை சரிசெய்ய முடியும் என்று கூறுகின்றனர். இன்னும் பத்தாண்டுகளில் புற்றுநோயைக் குணப்படுத்த முடியும், தொடர்ந்து மற்ற நோய்களையும் குணப்படுத்த முடியும் என்கின்றனர். இவை அனைத்தும் மிகவும் விலை உயர்ந்த சிகிச்சைகள், இது பணக்காரர்களுக்கு மட்டுமே என்று நினைத்தால் கோர்டிரோ மற்றும் டேவிட் வுட் இருவரும் அதற்கான பதிலைக் கொண்டிருக்கிறார்கள். ஆரம்பத்தில் இது விலை உயர்ந்த சிகிச்சையாக இருக்கும். ஆனால், போட்டிச் சந்தை என்று வரும்போது சிகிச்சைக்கான விலை குறைந்துவிடும். ஏனெனில் தேவை அதிகரிக்கும்போது அது ஒவ்வொருவருக்கும் பயன்தரும் விதத்தில் இருக்கும். இவ்விரு அறிவியல் பொறியாளர்களும் வயதான தோற்றத்தை இளமையாக்குவது, இறப்பை தவிர்ப்பதற்கான சிகிச்சைகள் கிட்டதட்ட ஒரு நவீன “ஸ்மார்ட்போன்” விலைக்கு மேல் ஆகாது என்கின்றனர்.

உண்மை என்னவென்றால் பூமியை உலுக்கும் அறிவியல் நோய்க்கான தீர்வுகளும், அழியாத்தன்மையையும் பொத்தான்கள் போல நமது மூளைக்குள் தள்ளப்படுகின்றன. இந்த நவீன தொழில்நுட்ப முன்னேற்றத்தில் மனிதர்களின் உணர்திறன் இறந்துவிடுமா? அல்லது நம்மை மறுசீரமைக்கும் விதத்தில் இருக்குமா? ஆனாலும் நமது பண்டையக்கால யோகிகள், இமயமலையின் மூலிகைகள் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட காற்றில் இத்தகைய அதிசயமான நோய்க்கான தீர்வுகளைக் கண்டறிந்தார்கள் என்பதை உணர முடிகிறது. அழியாத்தன்மை பற்றிய நமது கட்டுக்கதைகள் நாளைய உண்மைகளுடன் நடனமாடுமா? இதற்கிடையே நமது ஆய்வுக்கூடத்தில் OSK என்னும் இளமையை தக்கவைக்கும் புரதங்கள் நமக்காக காத்திருப்பதை காணமுடிகிறது. புதியது விதிமுறையாக மாறுவதைக் காண்கிறோம். இது மாற்றியமைக்கும் திட்டத்துக்கு அடியெடுத்து வைப்பது போன்றது. இது வித்தியாசமானது மட்டுமல்ல, அற்புதமானது.

இதன் ஆசிரியரை
*sheelanambiar@gmail.com*
என்ற இணையதளத்தில்
தொடர்பு கொள்ளலாம்.
*Website:www.drsheela nambiar.com*

## RC ஆடுதுறை — RID 2981



உள்ளூர் மருந்துக் கடை ஒன்றுடன் இணைந்து, இதயம் மற்றும் நுரையீரல் முகாமொன்று நடத்தப்பட்டது. இதன்மூலம் 300க்கும் மேற் பட்டவர்கள் பலன் பெற்றார்கள்.

## RC டெவாஸ் — RID 3040



இச்சங்கம் நடத்திய மிகப் பெரிய கண் முகாம் ஒன்றில், 60 பேருக்குக் கண் புரை அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டன.

## RC கரம்பக்குடி — RID 3000



வீரடிப்பட்டி கிராமத்தில் உள்ள ஒரு கோயிலில், சங்கத் தலைவர் A செந்தில் தலைமையில் மரம் நடும் விழா நடை பெற்றது. சங்க உறுப்பினர் V M S வீரப்பன் இந்தத் திட்டத்தை ஒருங்கிணைத்தார்.

## RC அகமதாபாத் அஸ்மிதா — RID 3054



உலக AIDS நாளில், HIV பாசிட்டிவ் குழந்தை களுடைய ஊட்டச்சத்து நிலைகளை மேம்படுத்து வதற்காக, அவர்களுக்கு இந்தச் சங்கம் புரதப் பொடி வழங்கியது.

## RC டெல்லி வெஸ்ட் — RID 3011



கைவிடப்பட்ட வர்களுக்கான ஓர் இல்லமாகிய “எர்த் சேவியர்ஸ்”க்கு ரூ.2 லட்சம் மதிப்புள்ள மருத்துவப் பொருட்கள் வழங்கப்பட்டது.

## RC தாராபூர் — RID 3060



ராமகிருஷ்ண மிஷன் விவேகானந்தா நினைவகம், மற்றும் வனத்துறை அலுவலர் களுடைய ஆதரவுடன், மக்களுக்கு மளிகை பொருட்கள் வழங்கப்பட்டன.

# செய்திகள்

## RC அம்ரித்சர் நார்த் — RID 3070



பார்வைக் குறைபாடுள்ள பெண் களுக்கான பள்ளிக்கு துவைக்கும் இயந்திரம் அளிக்கப்பட்டது.

## RC குர்ஜா சக்தி — RID 3100

UP ஆளுநர் ஆனந்தி பென் படேல் சங்கத்துக்கு வருகை தந்தார், AG சித்தார் சிங்கல், RI ‘லேபெல்பின்’ வழங்கினார். சங்க உறுப்பினர் களை PWD விருந்தினர் இல்லத்தில் தேநீருக்கு அழைத்தார்.



## RC ரூர்கீ — RID 3080



இளம்பிள்ளைவாத நாளைக் கொண்டாடுவதற்காக, குழந்தைகளுக்கு நோயெதிர்ப் பாற்றலை வழங்கும் இளம்பிள்ளை வாதச் சொட்டு மருந்துகளை ரோட்டரியன்கள் வழங்கினார்கள்.

## RC குஷிநகர் — RID 3120

கசியாவிலுள்ள காந்தி சௌக் பகுதியில் கதகதப்புத் துணிகள் திரட்டப் பட்டன, பின்னர் அவை அக்கம் பக்கத்திலுள்ள குடும்பங்களுக்கு வழங்கப் பட்டன.



## RC பதம்பூர் — RID 3090



கேப்டன் நவ்பால் சிங் அவர் களுடைய தியாகத்தைப் போற்றும் வகையில் ரத்த தான முகாமில் இச்சங்கம் 75 யூனிட் ரத்தம் திரட்டியது.

## RC பிப்வெவாடி புனெ — RID 3131

நான்கு மாதங்களில் 8,000 ஏழை குடும்பங் களுக்கு மளிகைப் பொருட்கள் நன்கொடையாக அளிக்கப்பட்டது.



## RC பர்ஷி — RID 3132



இந்தச் சங்கம், 9, 10ம் வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு பயிற்சி முகாம் நடத்தியது.

## RC கார்கலா — RID 3182




கார்கலா நகராட்சியுடன் இணைந்து குழாய் வழி இயற்கை உரமாக்கலை அமைத்து மக்கள் வீட்டுக் குப்பைகளை இயற்கை உரமாக மாற்ற வேண்டிய தேவைப் பற்றிய விழிப்புணர்வு உருவாக்கினர்.

## RC அம்பேர்நாத் ஈஸ்ட் — RID 3142



மாற்றுத் திறனாளிகளுக்கு அன்றாடம் தேவைப்படும் பொருட்கள் வழங்கப் பட்டன. ஆளுநருடைய முதன்மை உதவியாளரான சர்ஜெராவ் சாவந்த் தலைமை விருந்தினராகப் பங்கேற்றார்.

## RC பெங்களூர் வித்யாபீடா — RID 3190



மாற்றுத் திறனாளிகள் கவனித்து வரும் நயாசேதனா அறக் கட்டளைக்கு மின் வெந்நீர்க் கருவிகள் அளிக்கப்பட்டன.

## RC நிபானி — RID 3170




தூய்மைபற்றிய விழிப்புணர்வை உருவாக்குவதற்காக, உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்குக் கட்டுரை மற்றும் ஓவியப் போட்டிகள் நடத்தப்பட்டன.

## RC கோயம்பத்தூர் சாடிலைட் — RID 3201



நகராட்சி அமைப்புக்கு ரூ.1.5 லட்சம் மதிப்புள்ள முகமூடிகள், நகராட்சி ஆணையர் ஸ்ரவன் குமார் ஜடாவத்திடம் ஒப்படைக்கப் பட்டது.

# செய்திகள்

## RC ராஜபாளையம் — RID 3212



வகுப்பறைக் கல்வியை மேம்படுத்துவதற்காக, ரூ.1.15 லட்சம் மதிப்புள்ள ஒரு டிஜிட்டல் வகுப்பறை ஓர் அரசுப் பள்ளிக்கு நன்கொடையாக அளிக்கப்பட்டது.

## RC ராய்கட் ஸ்டீல் சிட்டி — RID 3261

அரசுப் பலுராம் தனானியாக் கல்லூரிக்கு அருகில் வசிப்பவர்களுடைய வசதிக்காக, அங்கு ரூ.1 லட்சம் மதிப்பில் பயணிகள் காத்திருப்பு அறை ஒன்று கட்டப்பட்டது.



## RC வேலூர் நார்த் — RID 3231



காட்பாடிக்கு அருகிலுள்ள கரிகிரியிலிருக்கும் SIHR LC மருத்துவமனைக்கு மூன்று சக்கர வண்டிகள் மற்றும் ஊன்றுகோல்களை இந்தச் சங்கம் வழங்கியது.

## RC பலாசோர் — RID 3262

நிலையச் சதுக்கத்திலிருக்கிற இந்த நகரின் மையத்தில், ரூ.10 லட்சம் மதிப்புள்ள, ஒரு போக்குவரத்துக் கம்பத்துடன் கூடிய ரோட்டரி கடிகாரக் கோபுரம் கட்டப்பட்டது.



## RC ஆலந்தூர் — RID 3232



ஜவ்வாது மலையில் 55 ரோட்டராக்டர்களுக்கு இரண்டு நாள் RYLA நடத்தப்பட்டது.

## RC பேளூர் — RID 3291

போலியோ விழிப்புணர்வுக் கார்ப் பேரணி நடத்தப்பட்டது, நகராட்சி அவை உறுப்பினர் சுஸ்மிதா பட்டாச் சார்யா, DG சுதீப் முகெர்ஜீ, PDG ரவி செஹ்கல் கலந்து கொண்டனர்.



ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

# கல்லூரி நாட்களின் மலரும் நினைவுகள்!

ஸ்ரீனிவாச ராகவன்

கடந்த மாதம் நாங்கள் ஒரு சிறிய குழுவாக தில்லி பல்கலைக்கழகத்தில் உள்ள எங்கள் பழைய கல்லூரியைப் பார்வையிட முடிவு செய்தோம். கல்வி ரீதியாக முக்கியத்தும் வாய்ந்த ஆனால், அதிகம் பிரபலமாகாத ஹிந்து கல்லூரி அது. அந்த கல்லூரி பல அற்புதமான பழைய நினைவுகளை மீண்டும் கண் முன்னே நிறுத்தியது. பெயருக்கு ஏற்றாற்போல் அந்த கல்லூரி 1899ம் ஆண்டு தேசியவாத கல்லூரியாகத் தொடங்கப்பட்டது. பழமைவாய்ந்த அந்த கல்லூரி ஆண்டு மலர்களைப் பார்த்தால் அக்கால நிகழ்வுகள் குறித்து பல தகவல்களைத் தெரிந்துகொள்ள முடியும். பிரிட்டீஷாருக்கு எங்கள் கல்லூரி மீது ஒரு கோபப் பார்வை இருந்துகொண்டே இருந்தது.

நாங்கள் சிறு குழுவாக 1967ம் ஆண்டு கல்லூரியில் சேர்ந்தோம். விடுதி மாணவராகவும் இருந்தோம். அப்போது எங்களில் பெரும்பாலானோருக்கு 16 வயது தான். புதிதாக கல்லூரியில் சேரும் மாணவர்கள், மூத்த மாணவர்களால் சுமார் ஒரு மாதம் வரை 'ராக்கிங்' செய்யப்படுவார்கள். பின்னர் ஆகஸ்ட் 15ம் தேதி அவர்கள் எங்களுக்கு விருந்து கொடுப்பார்கள்.

54 ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது 1967ல் கல்லூரி எப்படியிருந்தது என்பதை நினைத்துப் பார்த்தபோது மகிழ்ச்சியாக இருந்தது. கல்லூரியில் புதிய கட்டடங்கள், புதிய பாட வகுப்புகள், முன்பைவிட அதிக மாணவர்கள் என்பதைவிட இப்போது ஒன்றும் பெரிய மாற்றம் இல்லை. சிறிய வகுப்பறையில் 25 மாணவர்கள் இருந்தது குறித்து நாங்கள் ஆச்சரியம் அடைந்தோம். முதலாமாண்டு என்னுடைய வகுப்பில் 14 மாணவர்கள் இருந்தனர். 3 ஆண்டு பட்டப்படிப்பை நாங்கள் முடித்தபோது இருந்த மாணவர்கள் 10 பேர்தான். மாணவர்கள் எண்ணிக்கை குறைவு என்பதால் பாடங்களை கற்பது சுகமாகவும் சௌகரியமாகவும் இருந்தது. ஆசிரியருடன் கலந்துரை யாடும் போது நாங்கள் 3 அல்லது 4 பேர் தான் இருப்போம். துறை ஆசிரியர்கள் வளாகத்துக்குள்ளேயே இருந்ததால் அவர்கள் வீட்டிற்கு சென்று பாடம் படிக்கும் போது எங்களுக்கு டீயும் சமூசாவும் கிடைக்கும். அது மிகவும் நாகரிகமான முறையில் அமைந்திருந்தது.

16 வயதில் ஒருவர், வீட்டிற்கு வெளியே 120 மாணவர்களுடன் சேர்ந்து விடுதியில் தங்கியிருக்கும் போது சில மாற்றங்கள் ஏற்படுவது இயற்கைதான். நாம் எப்போதும் பசியோடு இருப்போம். வளர்ச்சியுடனும் சுறுசுறுப்பாகவும் இருக்கும்போது அடிக்கடி பசிக்கும். வீட்டில் கைச் செலவுக்காக கொடுக்கும் பணத்தை மாதம் முழுவதும் வைத்திருந்து செலவு செய்ய வேண்டும் என்பதால் பல நேரங்களில் நாங்கள் பட்டினி கிடப்போம். ஏனெனில் சினிமாவுக்கு போகவும் வேறு சில விஷயங்களுக்கும் செலவழிக்க காசு வேண்டுமே. கல்லூரியில் படிக்கும் போது நமக்கு இருந்த சுதந்திரம் புகைப்பிடிப்பதுதான். ஒரு பாக்கெட் சார்மினார் சிகரெட்டின் விலை 30 காசுகள். அதாவது ஒரு மாதத்துக்கு சிகரெட்டுக்காக மாதம் ரூ.9 செலவாகும். இன்னும் சொல்லப் போனால் கைச்செலவுக்கு கொடுக்கும் பணத்தில் நான்கில் ஒரு பங்கு சிகரெட்டுக்கே செலவழிந்துவிடும்.

கல்லூரிக் கட்டணம் அதிகரிக்க அனுமதிக்கப்படவில்லை. முன்பு நாங்கள் ஓர் அறைக்கு ஒருவர் மட்டுமே இருப்போம். இப்போது ஒரே அறையில் நான்கு மாணவர்கள் தங்கவைக்கப் பட்டுள்ளனர். இது வருத்தமாக இருந்தது.

எங்கள் கல்லூரி வாழ்க்கையில் முக்கியமான ஒன்று விளையாட்டு மைதானம். அது ஐந்து ஏக்கர் பரப்பளவில் புல்வெளிகளுடன் பரந்து இருந்தது. மைதானத்தின் நடுவில் கிரிகெட் விளையாடுவதற்கான ஆடுகளமும் பக்கத்திலேயே ஒரு ஓரத்தில் டென்னிஸ் ஆடுகளும் இருந்தது. அவற்றை இப்போது காணவில்லை. அப்போது கிரிக்கெட் தான் முக்கிய பேச்சாக இருக்கும். ஏன் இப்போது கூட கிரிக்கெட் தான் பேசப்படும் மையப்புள்ளியாக இருக்கிறது. 1960-களின் பிற்பகுதியில் கல்லூரி கிரிக்கெட் அணியில் ரஞ்சிக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் விளையாடும் நான்கு வீரர்களும், துலீப் டிராபி போட்டியில் விளையாடும் இருவரும் இடம்பெற்றிருந்தனர். எங்கள் கல்லூரி கிரிக்கெட் அணி 1955லிருந்து மூன்று அல்லது நான்கு டெஸ்ட் கிரிக்கெட் போட்டி வீரர்களை உருவாக்கி யுள்ளது. ஆனால், இது போதுமானதல்ல.

எங்களது இந்த பயணம் சில அற்புதமாக நினைவுகளை எங்கள் மனதில் கொண்டுவந்தது. நாங்கள் அதிகம் பேசவில்லை, ஆனால், எங்கள் மௌனமே பலவற்றை பேசிவிட்டது.■

THE ODYSSEY
ROTARY INSTITUTE 20-21

# ரோட்டரி மெய்நிகர் மண்டல மாநாட்டின் தலைவர்கள்



இன்ஸ்டிட்யூட் அமைப்பாளர் RID கமல் சங்வி (வலது) மற்றும் இன்ஸ்டிட்யூட் தலைவர் PDG சஞ்சய் கேம்கா.

# 2021–22விற்கான மாவட்ட ஆளுநர்கள்




RIPE சேகர் மேத்தா அவர் மனைவி ராஷி, RID பரத் பாண்ட்யா மற்றும் மாதவி, RID கமல் சங்வி, TRF அறங்காவலர் குலாம் வஹன்வதி, RID மகேஷ் கோட்பாகி மற்றும் அமீதா, RIDE A S வெங்கடேஷ் மற்றும் வினிதா, PRID மனோஜ் தேசாய், PDG ரஞ்சன் டிங்கரா மற்றும் PDG T K ரூபி ஆகியோருடன் DGEக்கள்.

புகைப்படம்: ரஷீதா பகத்


Regn. No. TN/CCN/677/2019-2021 | Total number of pages in this monthly
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2019-2021 | issue, including cover, 84. Price: ₹35
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372 Rotary News Tamil Published on the first week of every month